
நிலாக்கால
மேகம்
பாலகுமாரன்
IL
TION
AKUM

# நிலாக்கால மேகம்

ஆறு மணி நேரத்தில் சென்னை எல்லையைத் தொட்டு விட்டேன். வெளிச்சம் பரவுகிறபோது பூந்தமல்லி நெடுஞ்சாலைக்குள் என் கார் கோபமின்றி விரைந்து கொண்டிருந்தது.

இது விரைவுதான். ஆனால் கோபமில்லாத விரைவு. நிறைய கார் ஓட்டிகளுக்கு விரைவு பற்றிய ஞானம் இல்லை. வேகம் பற்றிய தெளிவு இல்லை. ஒவ்வொரு காருக்கும் ஒரு வேகம் உண்டு. அந்தவேகத்திற்கு மேல் இந்த வண்டி அலைபாயும், இந்த வேகத்திற்கு மேல் இந்த வண்டி கமறத் துவங்கும், ஒரு அளவுக்கு மேல் உடனடியாகத் தடைகள் போடுவது கடினம் என்கிற சின்னச் சின்ன விஷயங்கள் சேர்ந்து ஒரு காரின் விரைவு தீர்மானிக்கப்படுகிறது.

வண்டி உதறாமல் எஞ்சினில் இருமலில்லாமல் சொடக்கு நேரத்தில் நிறுத்த முடியும் என்கிற விரைவு இருக்கிறதே அதுவே கோபமில்லாத விரைவு. இது வண்டிக்கு வண்டி வேறுபடும். பழைய வண்டி, புது வண்டி, இந்த ஜாதி அந்த மேக் என்கிற வர்ஜமில்லாமல் ஒரே ஜாதியில் பலவித குணாதிசயங்களுடன் வண்டிகள் இருக்கும்.

என்னுடையது டால்ஃபின். மைசூர் பேலஸின் ஆடிட்டர் வைத்திருந்த வண்டி. கோழி குஞ்சிலிருந்து வடை விற்கிற கிழவி வரை ஆறு பேரைக் கொன்றிருக்கிறது. ஆடிட்டர் வீட்டுக் கம்பிக் கதவையும்,

இரண்டு ஆட்டோ ரிக்ஷாக்களையும் கெந்திப் போட்டிருக்கிறது. ராசியில்லாத வண்டி என்று என்னிடம் வந்தது.

வரும்போது அசிங்கமாய் கொண்டு வந்தார்கள். சபை நடுவே இழுத்து வரப்பட்ட பாஞ்சாலி மாதிரி, ஒரு பெண்ணைத் தலைமயிரோடு பிடித்துத் தரதரவென்று இழுத்து வந்த மாதிரி, பெங்களூர் சந்து ஹோட்டலில் விபச்சாரம் செய்து வரும் முதிர்ந்த பெண்ணை போலீஸ் நெட்டித் தள்ளி வருவது மாதிரி. கயிறு கட்டி ஆன்டௌவ்' போட்டு இரண்டு பேர் புறம் தள்ள ச்சீத் தூ என்கிற வசவுகளோடு கொண்டு வந்தார்கள்.

''ஹாய்...டால்ஃபின்'' என்று வியப்போடு அதை வரவேற்றபோது...

''அல்லா இவ்வுது டால்ஃபின்னல்லா... தகரடப்பா'' என்று சிரித்தார்கள். வண்டியின் நெற்றியைத் தடவினேன். கதவைத் திறந்தேன். உள்ளே உட்கார்ந்து சாவி போட்டுத் திருகினேன். உதறி அழுதது. மெல்ல கிளச்சையும். ஆக்ஸிலேட்டரையும் அழுத்தி நாடி பார்த்தேன். வண்டியின் உள்காயங்கள் மனசில் பதிந்தன.

''ஷி ஸ் ஆல்ரைட்'' என்றபடி இறங்கினேன். வேலை முடிக்க பத்து நாள் டைம் கேட்டேன்.

ரிப்பேருக்கு வரவில்லையாம். சனியனை ஒரேயடியாய்த் தலை முழுக வந்திருக்கிறார்களாம்.

''என்ன தேறும்...'' பேலஸ் ஆடிட்டரின் முதல் மகன், செல்லப் பிள்ளை, செத்த குருவியைப் பார்ப்பது போல கவலையும் அருவருப்புமாய் வண்டியைப் பார்த்துக் கேட்டான்.



'பையா... கார் என்பது உலோகமல்ல, உயிர் உள்ளபொருள். பலஇரும்புத் துண்டுகளின் குவியிலல்ல ஒரு செல்லப் பிராணி. முதலில் கார் ஓட்டும் முன்பு ஆட்டோ மோபைல் என்பதை நேசிக்கக் கற்றுக்கொள். அதனோடு பேசு. சல்லாபம் செய். அத்து மீறாது இரு' மனசு பேசுகையில் புத்தி அடக்கிற்று.

'ஏய்...கெட் இட். இந்தப் பையனிடம் இவள் பட்டது போதும். உனதாக்கிக் கொள். இவளுக்கு விடுதலை கொடு உயிரோடு. வாழவை.''

''ஆர் யூ கீன் இன் ஸெல்லிங்?''

''யா...''

' பட் ஷி ஸ் ஆல் ரைட்.''

''நாகு போடா.''

''சரி, என்ன வேண்டும்?''

''எவ்வளவு தருவாய்?''

பையா...பையா... வியாபாரத்தின் அடிப்படை புரியாத பையா. இப்போது நீ வியாபாரி. நான் வாங்குபவன். விலை முதலில் நீ சொல். கட்டுப்படியானால் பேசுகிறேன். இல்லையெனில் கஷ்டப்படாதே உன். டால்ஃபினை எங்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமோ அங்கு நானே கொண்டு வந்து சேர்க்கிறேன். என் கஸ்டமர் உன் அப்பா. அவர் பிள்ளை என் கண்ணெதிரே கஷ்டப்படக்கூடாது.

''எண்பதுக்குக் குறையாதே என்று அப்பா சொல்லியனுப்பினார்.''

''எங்கு விடவேண்டும் வண்டியை.''

''என்ன தருவாய்.''

''நாற்பது.''

''எடை போட்ட பிறகா... இப்போதேவா?''

நான் சிரித்தேன். புத்திசாலித்தனம் அழகுதான். ஆனால் அது அனுபவத்தின் பாற்பட்டு இருக்க வேண்டும். இல்லையெனில் புத்திசாலித்தனம் வெறும் நடிப்பாகிவிடும். அரிதாரம் வெகு சீக்கிரம் வெளிறும். பையன் நடிக்கிறான். புத்திஸாலி மாதிரி நடிக்கிறான்.

''ஒரு கிலோ பழைய இரும்பு விலை இன்றைய மார்க்கெட் படி இருபது ருபாய். ஒரு டால்ஃபின் எடை ஒன்றரை டன். கால்குலேட்டர் தரட்டுமா.''

பையன் சற்று நேரம் மனக்கணக்கு போட்டு விட்டு ''முப்பதாயிரம் ரூபாய். கூட பத்தாயிரம் போட்டுத் தருகிறேன் என்கிறாயா?'' சீறினான்.

அரிதாரம் அழிந்து விட்டது. நடிப்பு மட்டும் அப்ப டியே இருந்தது.

''உன் அடுத்த விலை சொல் பையா.''

''எழுபது''

''அப்பா எங்கே?''

''நீ உன் விலையைச் சொல்லு.''

''எனக்கு வேண்டாம். உன் அப்பா எங்கிருக் கிறார்?''

''என்னையே பேரம் பேசச் சொல்லியிருக்கார். நீ எதற்கு அவரைக் கேக்கிறாய்.''

''உனக்கு வியாபாரம் தெரியவில்லை. உன்னை நம்பி வியாபாரம் செய்ய முடியும் என்று தோன்ற வில்லை. சின்ன பையன் நீ.''

''லவடா...'' பையன் இடக்கையை மூடி வலது உள்ளங்கையால் தட்டி நடு விரலை என் முகத்துக் கெதிரே நீட்டினான்.

என் கடை ஆட்கள் வேகமாய்த் திரும்பினார்கள்.



''ம்ம்... ம்ம்... வேலை ஆவட்டும். இங்கென்ன வேடிக்கை...'' அவர்களை உடனடியாய் அடக்கினேன்.

இவன் பெரிய மனிதர் வீட்டுப் பையன். நல்லது கெட்டதுக்கு அர்த்தம் தெரியாதவன். இந்தச் செய் கைக்குக் கூட முழு அர்த்தம் தெரியாதவன் எல்லோ ரும் சொல்கிறார்கள் என்று தானும் சொல்ல நினைப்பவன். இடம் பொருள் ஏவல் அறியாதவன். வேறு எவனாய் இருந்தாலும் நீட்டிய நடு விரலைப் பிடித்து கண்ணாடி விளிம்பில் வைத்து சரக்கென்று கார் கண்ணாடியைத் தூக்கியிருப்பேன். கண்ணாடி உடையும் வரை லீவரை அசையாது பிடித்துக்கொண்டி ருப்பேன்.

இந்தப் ;பையன் தாங்க மாட்டான். அழுவான். இவன் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை. இவன் பேசுவ தெல்லாம் அரிதாரப் பேச்சு. நடிப்பு. மேலும் இந்த டால்ஃபின் எனக்கு வேண்டும்.

அறுபதுக்குப் பிடித்தால் கூட கொள்ளை லாபம்.

''நமஸ்காரா. நீரு மனைக்கு ஹோடு. நா பார்த் தனே.''

''டெல் மி யுவர் ரேட்.''

''நாற்பத்தைந்து.''

''அறுபத்தியெட்டு.''

''ஐம்பது.''

''அறுபத்தியாறு.''

''ஐம்பத்தெட்டு.''

''அறுபத்தியிரண்டு.''

''அறுபது.''

''டன். கிவ் மி தி மனி.''

''உன் அப்பா எங்கே... அவரோடு நான் பேச வேண்டும். அவரின் சம்மதம் எனக்கு முக்கியம் ஆர். சி. எங்கே.''

பையன் தோல் பையைப் பிரித்து ஆர்சியைத் தூக்கிப் போட்டான். சுத்தமான ரெஜிஸ்ட்ரேஷன்... நாலு வருடத்துக்கு முந்திய மாடல். ஸ்டிரைட் பர்ச்சேஸ். உரியவர் பெயர் வீர நஞ்சுண்டராவ். விலாசம்... கேர் ஆஃப் மைசூர் பேலஸ். மைசூர்.

''டேய் யாரங்கே... தம்பிக்குக் கோலா வாங்கிட்டு வா.''

''பிச்சை புத்தி. அறுபது ரூபாய் வியாபாரத்துக்குக் கோலா தானா...'' பையன் உதடு கோணி சிரித்தான்.

''ஹாட் டிரிங்ஸ்?'' வினவினேன்.

''கோல்கொண்டாவை நீட்டாதே.''

என் தனியறைக்குள் இரும்பு பீரோவைத் திறந்து எனக்கென்று காலையில் வாங்கிய சீல் உடைக்காத குயின் ஆனியை நீட்டினேன்.

பையன் ருசி தெரிந்தவன் போலும். 'வாவ்' என்று அதை வாங்கிக்கொண்டான். எட்டு நாள் குழந்தையை ஏந்துவதுபோல இரண்டு கைகளாலும் எடுத்துக் கொண்டு புரட்டிப் புரட்டிப் பார்த்தான். முறுக்கி சீல் உடைத்தான். முகர்ந்தான். ஒரிஜினல் என்று வியந்தான்.

தெரியாது போய்விட்டது. முன்னமே நீட்டியிருந்தால் அம்பதுக்கு வியாபாரம் முடிந்திருக்கும். டால்ஃபின் என்று அவசரப்பட்டு விட்டேன்.

மைசூருக்குப் போன் போட்டேன். அதற்குள் புறங்கையில் தேய்த்து முகர்ந்து உள்ளங்கையில் ஊற்றிக் குடித்து நெட்டைவிட்டு அந்த விஸ்கி பாட்டிலில் சகல அசிங்கமும் செய்தான்.

''டம்ளர் இல்லையா'' என்று கேட்டான்.

''இருக்கிறது. ஆனால் அனுமதிப்பதற்கில்லை.''



''ஏன்?''

''இங்கு நான் குடிப்பதில்லை. குடிக்கவும் அனுமதிப்பதில்லை''

''ஏன்?''

''இட் ஈஸ் எ ஷாப். ரிப்பேர் ஷாப்.''

''ப்பூ'' பையன் அலட்சியம் செய்தான். நான் உறுதியாய் சிரித்தேன்.

பேலஸ் ஆடிட்டர் வீர நஞ்சுண்டராவிடம் மரியாதையோடு பேசினேன். ''எனக்காகத்தான் அறுபதில் நின்றேன். மேற்கொண்டும் விலை பேசி இதை விற்க முடியும். வெளியே முயற்சி செய்யவா ரிப்பேர் செய்தால் இன்னும் கூட பேரம் பேசலாம். நான் உதவி செய்யவா.'' பணிவோடு கேட்டேன்.

ராவ்ஜி பெரிய மனிதர், உலகம் தெரிந்தவர்.

''உனக்காகவா கேக்கிற. அறுபது உனக்கு அதிகமில்லையா. வண்டி ராசியே இல்லை எனக்கு. ஒரு கிழவியை அரைத்துக் கொன்று விட்டது. பல தொந்தரவுகள் வண்டியில் இருக்கின்றன. யோசித்து நாலு நாள் கழித்து போன் பண்ணேன்.''

''உங்கள் ஆசியில் அறுபது ரூபாய் புரட்டுவது கடினமில்லை. மாலைக்குள் தரமுடியும். யாரிடம் தருவது? சின்ன யஜமானரிடமா...''

''சின்ன எஜமானா... யாரைச் சொல்ற... என் பையனையா. அவனை உருப்படியா மைசூருக்கு அனுப்பி வை. போதும். வெறும் வம்பன்.''

''சின்ன எஜமான் கரன்ஸியாய் எதிர்பார்க்கிறார் போலருக்குங்க.'' மறுபடி பணிவாய் பேசினேன்.

பையன் எதிரே பேயாய் முழித்துக்கொண்டிருந்தான்.

''கொஞ்சம் குடு. காசாக அஞ்சுக்கு மேல் கையில் இல்லை என்று சொல்லிவிடு. மிச்சத்திற்கு டிராஃப்ட் என் பெயரில் எடுத்து அனுப்பிவிடு. உனக்கு இதில் நஷ்டமில்லையே.''

''லாபமில்லை. இருப்பினும் உங்களைப் போன்றவர்களின் தயவு எனக்கு வேண்டும். உங்களை என் நல்ல கஸ்டமராகக் கருதுபவன் நான். உங்களிடமிருந்து லாபத்தைவிட ஆசியை முக்கியமாகக் கொள்கிறேன்.''

''நன்றி ராமானுஜம். டிராஃப்டை அனுப்பு. பையனையும்...''

போனை வைத்து விட்டார்.

எட்டி எட்டி தானும் பேசவேண்டும் என்று பொங்கிய பையன் ஏமாற்றமடைந்தான். முணுமுணுத்தான்.

மறுபடி தனியறைக்குள் நுழைந்து ஐந்தாயிரம் எடுத்துக்கொண்டு பையனிடம் நீட்டினேன்.

''என்ன இது?''

''இப்போதைக்கு இவ்வளவுதான் இருக்கிறது. மீதியை நாலு நாளில் தருகிறேன்.''

''மோசடி வியாபாரம். பொருளை வாங்கி அனுபவித்துக்கொண்டு மிச்சக் காசு நாலு நாள் கழித்தா...?''

''அனுபவிக்க இந்த க்ஷணம் உன் பொருளில் என்ன இருக்கிறது. மேலே ஏறி குப்புறப் படுத்துத் தூங்கலாம்.''

''அப்பா என்ன சொன்னார். அவர் சொல்லித் தான் அஞ்சு ரூபாய் நீட்றியா? எனக்குப் போறாது.''

''எவ்வளவு வேணும்?''



''நாலு நாள் பெங்களூரில் தங்கினால்... தங்கற செலவே அஞ்சு ரூபாய் ஆயிடும். மீதி விஷயங்களுக்கு...?''

''என்ன விஷயங்கள்?''

''ரேஸ்... இன்ன பிற சந்தோஷங்கள்.''

''ரேஸுக்கு அதை வைத்துக்கொள். தங்குகிற செலவை என் கணக்கில் எழுதிவிடு.''

ஐந்து நட்சத்திர பெயர் சொன்னேன். பையன் திருப்தியானான்.

''இரவு உணவுக்கு?'' கண் சிமிட்டினான்.

''உன் டேஸ்ட் எது?''

''கொழுத்ததாய்... கறி அதிகமாய்...''

''ஜாதி முக்கியமோ?''

''பெண் சாதியாய் போதும்.'' மறுபடி சிரித்தான்.

''வரும். போ''

''நல்லதாய் இருக்குமா?''

''கூட நாலு நாள் தங்கி என் கழுத்தை அறுக்கப் போகிறாய்.''

''வாவ்.''

டால்ஃபின் எனக்குச் சொந்தமாயிற்று. பையன் நகர்ந்ததும் என் கடையாட்கள் சூழ்ந்து கொண்டார்கள். ஆளுக்கொரு கதவாய் திறந்து பார்த்தார்கள். 'எத்தினிக்கு முடிச்சீங்கண்ணே' என்று கேட்டார்கள்.

உனக்கெதுக்குடா அதெல்லாம் என்கிற மாதிரி சிரித்தேன். ''என் ஃபியட் விலைக்கு வருதுன்னு சொல்லுப்பா.''

''ஏன் அண்ணாச்சி...இப்பத்தானே நம்ம ஃபியட்டுக்கு ஸ்பிரிங் மாத்தினோம். புறா மாதிரி இருக்கு அண்ணே, அதை ஏன் விக்கறீங்க?''

''அன்னம் வாங்கிட்டேன்டா...அதுதான்.'' ''இந்த வண்டி அண்ணனுக்கா, டேய்... ஒத்துடா. இப்பவே இஞ்சின் பிரிச்சிடுவோம். நைட் ஓவர் டைம் போட்டுக் கலாம். காலைல தெருவுல சர்னு ஒடணும்.'' பரவசப் பட்டார்கள். அமைதியாக்கினேன். 'வார்த்தையாய் பேரம் முடிந்திருக்கிறது. கையெழுத்தாகவில்லை...' என்று சொன்னேன். பூ மாதிரி உள்ளே வண்டியைத் தள்ளிக் கொண்டுபோய் மறைவாய் நிறுத்தி மேலே கித்தான் போட்டார்கள். கண்படக் கூடாதாம். என் வேலையாட்கள் என்மீது நேசம் கொண்டவர்கள். நானும்.

என் பேங்குக்கு போன் செய்து டிராஃப்ட் தயாரிக்கச் சொன்னேன். வக்கீலுடன் பேசி டாக்கு மென்ட் எழுதச் சொன்னேன். சாட்சிக்கு எதிரே உள்ள ஒர்க்ஷாப் முதலாளியைக் கேட்டுக் கொண்டேன். நட்சத்திர ஹோட்டலுக்கு போன் செய்து பையன் வரவைச் சொன்னேன். சகல பில்லும் என் பெயருக்கே என்று நினைவுபடுத்தினேன்.

பிறகுதான் தால்மாவுக்கு போன் செய்தேன். தால்மா தூங்கிக் கொண்டிருந்தாள் போலிருக்கிறது.

## 2

'ஏய் ராம் என்ன வரீய்யா இப்பைக்கு' என்றாள் தால்மா. என் ஸ்நேகிதி பெங்களூரின் பிரபலமான வேசி. தன்னை ஆங்கிலோ இந்தியன் என்று சொல்லிக் கொண்டாள். தமிழ்க் குடும்பங்கள் இருக்கும் பகுதியில் வசித்தாள். அவள் பேச்சில் தமிழும், கன்னடமும் ஆங்கிலமும் சிதைந்து வந்தன.

''ஏய், என்ன பேச்சு காணோம். வர்ரீய்யா இப் பைக்கு.'' மறுபடி கேட்டாள்.



இப்போது உடனே இங்கு வருகிறாயா என்றுதான் அதற்கு அர்த்தம். நான் செந்தமிழில் கொஞ்ச நேரம் யோசித்து, இப்பைக்கு இந்த + பைக்கு இப்போது வருகிறாயா என்றெல்லாம் அர்த்தம் செய்து கொண டேன்.

தால்மா உறவு எனக்கு பை மாதிரிதான். அலங் காரமான பை, தலையை உலுக்கிக் கொண்டேன்.

'இரவு இன்ன ஹோட்டலுக்கு போக முடியுமா' என்று கேட்டேன்.

''ச்சீ போ. மாமா வேலைக்குத்தான் போன் போட்டியா.''

''ஒரு நல்ல டால்ஃபின் கார் வாங்கியிருக் கிறேன்.''

''புதுசா.''

''இல்லை. உன் மாதிரி கொஞ்சம் பழசு. இரண்டு மூன்று கைமாறி ஓட்டத் தெரியாதவன் ஓட்டிக்கெட்டுப் போயிருக்கிறது. சுத்தம் செய்யணும்.''

''என்னையும் சுத்தம் பண்ணு ராம்.''

''எதற்கு?''

''என்னையும் டால்ஃபின் மாதிரி நீயே வச்சுக்கோ.''

''பார்ப்போம். முதலில் தொழிலை கவனி.''

தால்மா மேற்கொண்டு விவரம் கேட்டாள். சொன்னேன்.

அன்று மாலை அந்தப் பையனிருக்கும் ஹோட்ட லுக்கு என் காரில் தால்மாவை அழைத்துப்போனேன். உடம்பெல்லாம் சரிகைகள் இழையோட கருஞ்சிவப்பு அதரம் பளபளக்க, ஏதோ ஒரு விதமாய் மார்புச் சரிவில் கவுன் தொக்கி நிற்க, தால்மா அந்த ஹோட் டலின் படிகளைக் கடந்தாள்.

ஹோட்டலில் பெல் காப்டன் அவளுக்கு ஏக்கத்
தோடு வந்தனம் கூறினான். ரிசப்ஷன் பெண்கள்
பூஞ்செடிகளாய் ஆடினார்கள். உதட்டைச் சுழித்துக்
கொண்டார்கள். அறைக் கதவை திறந்ததும் பையன்
உறைந்து போனான். உணர்வு வந்து பிறகு பின்ன
டைந்தான். அவனே பேரராக மாறி அறைக்குள்
முன்னும் பின்னும் ஓடி தம்ளர்களை பரப்பி உபசரித்
தான். தால்மாவின் நன்மதிப்பு பெற தவித்தான்.
எந்தப் பெண்ணுக்கும் இத்தகைய உபசரணைகள்
பிடிப்பதில்லை என்பது நிறைய ஆண்களுக்குத் தெரிய
வில்லை. பெண்களைக் கவர்வதில் முதல் வழி, கண்டு
கொள்ளாமலிருப்பது. அவள் அழகைக் கண்டு வாய்
பிளக்காமல் இருப்பது. எல்லா நேரங்களிலும் அமைதி
யோடு பேசுவது. தடுமாறுகிறவனை எந்தப்! பெண்
ணும் மதிப்பதில்லை.

தால்மாவை நான் முதன் முதலாகச் சந்தித்தது
இந்த மாதிரி ஒரு ஹோட்டலில்தான். கள்ளக்கடத்தல்
செய்யும் ஒரு நண்பனிடம் ஜப்பான் தேசத்து ப்யூல்
பம்ப்பு கேட்டிருந்தேன். ஆறு பம்ப் கொண்டு வந்திருந்
தான், ஒன்றின் உறை பிரித்து அக்கக்காய் கழட்டிக்
கொண்டிருந்தபோது, தால்மா எங்கள் தேவைக்காக
அனுப்பப் பட்டாள். நாலு வார்த்தையில் வரவேற்று
விட்டு நாங்கள் அந்த பம்போடு போராடிக் கொண்
டிருந்தோம். அதன் நுண்ணிய இணைப்புகளை
எண்ணி எண்ணி வியந்து பாராட்டிக் கொண்டிருந்
தோம். ஆவல் பொறுக்காமல் தால்மா அது என்ன
என்று கேட்க, இதுவே காரின் ஹிருதயமென்று கூறி
னேன். அது இயங்கும் விதம் பற்றி விவரித்தேன். 'நீ
இஞ்சினியரா?' என்று தால்மா கேட்டாள். இல்லை,
'எட்டாம் கிளாஸ்' என்று பதில் சொன்னேன் தால்மா.
வியந்தாள். 'இவ்வளவு அழகாய் எப்படி ஆங்கிலம்
பேசுகிறாய்' என்று'கேட்டாள்.

'உன்னைப் போன்ற பெங்களூர் ஆங்கிலோ இந்தி
யர்கள் கற்றுக்கொடுத்தார்கள்' என்று சொன்னேன். 'நீ



ஆங்கிலோ இந்தியன் இல்லையா, உன்னைப் பார்த்
தால் அப்படித்தானேதெரிகிறது' என்றாள். 'இல்லை,
நான் ஹிந்து, ஐயங்கார். "சொந்த ஊர் திருக்கோ
கரணம். பெயர் ராமானுஜம். நட்சத்திரம் சுவாதி.
பதினாலு வயதில் வீட்டை விட்டு ஓடி வந்ததைச்
சொன்னேன்.

மது அருந்துகிற போதும், மயக்கத்துக்கிடையே
யும் என்னைப் பற்றி அவளின் எல்லாக் கேள்விகளுக்
கும் பதில் சொன்னேன். நாங்கள் ஸ்நேகமானோம்.
'நீ ஆட்டோ மொபைல் மெக்கானிக்கா... புரோக்கரா'
என்று கேட்டாள். 'எல்லாம்தான்' என்றேன். கடை
விலாசம் கொடுத்தேன். என் ஒர்க்ஷாப்பின் விஸ்தீர
ணம் பார்த்து விட்டு வியந்து போனாள். 'மைசூர்வரை
போய்விட்டு வர எவ்வளவாகும்' !என்று கேட்டாள்.
எங்க மம்மி போகணும்னு சொல்லிச்சி' என்றாள்.
'என்னுடைய ரேட் கொஞ்சம் காஸ்ட்லி' என்றேன்.
'எவ்வளவு' என்று மறுபடி கேட்க, 'ஒரே ஒரு முத்தம்'
என்று பதில் சொன்னேன். தால்மா வாழ்க்கையில்
முதன் முறையாக வெட்கப்பட்டாள். சிலுவையிட்டுக்
கொண்டாள். வந்து கொடு அவசரமில்லை என்று ஒரு
நம்பிக்கையான பையனோடு வண்டியை அனுப்பி
னேன்.

கேட்டதுபோல் ஒரு முத்தம் வாடகையாகவும்,
அவள் உடம்பு மொத்தமும் டிப்ஸாகவும் கிடைத்தது.
கடனேயென்று வருகிற பெண்ணுக்கும் கடன்பட்ட
பெண்ணுக்கும் உண்டான வித்தியாசம் தெரிந்தது.
தால்மாவின் குடும்பமே ஸ்நேகமாயிற்று. எந்தக்
கட்டுகளுமின்றி ஒரு உறவு தொடர்ந்தது. இது உறவு
கூட இல்லை. இது ஒரு வகை சிநேகம். தால்மாவை
எனக்கே எனக்கென்று இறுக்கிக் கொள்ள விரும்ப
வில்லை. என்னை இறுக்கிக் கொள்ளும்படி எவரையும்
அனுமதிப்பதில்லை. இதற்குப் பிறகு தால்மா என்
னிடம் காசு கேட்பதில்லை; நானும் கொடுப்பதில்லை.

ஆறு பவுன் தங்கச் சங்கிலி, வீட்டை வெள்ளையடித்து பாத்ரூம்வரை வால் பேப்பர். முன்பக்க சோபா செட், மேலே சுற்றுகிற ஃபேன், டேப், டெக், அவள் தாயார் செத்துப் போனபோது தேக்குமரச், சவப்பெட்டி இத்தனையும் நான் கொடுத்தவை, கேட்காமலேயே கொடுத்தவை.

அந்த சவப்பெட்டி பரிசுக்கப்புறம் தால்மா மாறிப் போனாள்! என்னைக் கட்டிக்கிறியா' என்று நச்சரிக்கத் தொடங்கினாள். ''எல்லாத்தையும் வுட்டுர்றேன் இந்த தொழில், இந்த கவுன், இந்த மேக்கப், இந்த சாப்பாடு எல்லாத்தையும் வுட்டுர்றேன். நாமம் போட்ட கோயிலுக்கு உன்னோடு வருகிறேன். யெல்லோ ஸ்டிக் உடைத்து முகத்தில் தடவிக் கொள்கிறேன். புடவை கட்டிக் கொள்கிறேன். உனக்குப் பிடித்த உணவாய்ச் சமைக்கப் பழகுகிறேன். மத்தியானம் ஹாட்பேக்கில் ஷாப்புக்கு அடைத்து அனுப்புகிறேன். சாயந்திரம் ஜன்னல் விளிம்பில் காத்திருக்கிறேன். குழந்தை ஏசு என்னைச் சுத்தமாக்கட்டும். அவர் அருள் இருந்தால் உனக்குப் பிள்ளையும் பெற்றுத் தருகிறேன்'' என்று கெஞ்சினாள். எனக்கே இவைகளில் நம்பிக்கையில்லை. நீயேன் இவ்வளவு உன்னை வருத்திக் கொள்ள வேண்டும். இப்படியே இருப்போமென்றேன். இருந்தோம்.

எந்தப் பிடிப்புமில்லாத உறவே எனக்குப் பிடித்தமாயிற்று. எவைகளை வெறுத்து நான் பதினான்கு வயதில் ஓடி வந்தேனோ, அவைகளை மறுபடியும் அண்ட நான் இடங்கொடுப்பதில்லை.

திருமணமும், மனைவி என்பவள் கையால் சாப்பாடும் இருட்டியதும் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற நிர்ப்பந்தமும், எழுந்ததும் கடவுள் பெயர் சொல்ல வேண்டுமென்ற கட்டளையும், கட்டுப்பாடுகளும் என்னைப் பொறுத்தவரை போலியாய்த் தெரிந்தன. சுமப்பதில் சுதந்திரம் போகிறது. சுதந்திரம் போனபின் சொர்க்கத்தைத் தேடுவதில் லாபமில்லை. வம்ச விருத்தியில் எனக்கு நம்பிக்கையில்லை. என் பிள்ளைகள் என்னைப் போலிருக்க வேண்டுமென்ற ஆசை வரும். ஆசையால் அடக்குமுறை வளருமென்று நம்பினேன். யாரையும் அடக்கத் தேவையில்லை, அடங்கி நடக்க வேண்டிய அவசியமில்லை. அன்பு என்பது மதித்தல், மதித்தலுக்கு சுதந்திரம் முக்கியம். அந்தச் சுதந்திரத்துக்கு உறவே தடைக்கல்.



மனிதன் தன் பசிகளுக்காக தன்னை அடகுவைக்கத் தேவைமில்லை. பாட்டிலில் பால் கிடைக்கும்போது பசு வளர்ப்பது எதற்காக? என் அப்பா வீடு முழுவதும் பசுக்கள் வளர்த்தார். என் அம்மா, இரண்டு அக்கா, நான், அண்ணன், சமையல்காரர், பாஷ்யம் மாமா என்று வகை வகையாகப் பசுக்கள் வளர்த்தார். மனிதர்களையெல்லாம் பசுக்களாக அடித்து, அதட்டி வளர்த்தார். நான் மட்டும் தும்பறுத்துக்கொண்டு, ஓடிவந்துவிட்டேன். பதினாலு வயதில் திருட்டு ரயிலேறி பம்பாய்க்கு ஓடி டெல்லியில் அலைந்து, கல்கத்தாவில் வியாபாரம் கற்று, பெங்களூரில் செட்டிலானேன். ஆறு நாட்களில் ஒரு அம்பாசிடரை முற்றிலும் கழற்றிப் படுக்கப்போட்டு, மறுபடியும் கோர்த்து நிமிர்த்தி ஓட வைக்க முடியும். ஒரு வண்டியை நாலு கிலோ மீட்டர் ஓட்டினால் போதும். அதன் சகல குணாதிசயங்களையும் சொல்லிவிட முடியும். நான் கார்களை நேசித்தேன். அவைகளும் என்னை நேசித்தன. வழியில் முக்கித் தவிக்கிற வண்டிக்கு வலிய உதவி செய்வேன். இன்று ரெண்டாயிரத்து நூறு சதுர அடியில் ஒரு முழுமையான வொர்க்ஷாப் இருக்கிறது. எட்டு டூரிஸ்ட் கார்கள், ரெண்டு டீஸல் வேன் என் பெயரில் ஓடிக்கொண்டிருக்கின்றன. கார்களை பற்றிய அறிவு ஜனங்களுக்கு குறைவாக இருந்தது. நான் அதில் டாக்டரேட் வாங்கியவன். நல்ல வண்டியை நல்லதென்றும், மோசமானதை மோசமானதென்றும் என்னால் தைரியமாகச் சொல்ல முடிந்தது. அந்த தைரியம் என் வாக்கு நாண

யத்தைக் காப்பாற்றியது. கார் வியாபாரத்தில் நாணயந்தான் நல்ல விளம்பரம்.

பெங்களூர் ராம் ஆட்டோமொபைல்சுக்கு நானே உரிமையாளன். நானே எடுபிடிப் பையன், நானே மெக்கானிக். என் சொத்துக்கள் பதினாறு லகரம் தாண்டின. என்னிடம் வேலை செய்யும் பதினாறு பேரும் என்னை தெய்வமாய் மதித்தார்கள். எதை விதைக்கிறோமோ அதுவே வளரும். எதைக் கொடுக்கிறோமோ அதுவே வழங்கப்படும். நான் நன்கு சம்பளம் கொடுத்தேன். நன்கு வேலை வாங்கினேன். ராம் ஆட்டோ மொபைல் பேஜ் போட்ட மெக்கானிக்கை பெங்களூரில் அத்தனை கார் சொந்தக்காரர்களும் மதிப்பார்கள். என் தொழில் போட்டியாளர்கள் கூட என் உதவியைக் கோருவார்கள். என் கணக்குப் புத்தகங்கள் கம்பீரமானவை. இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் என்னோடு மரியாதையாய் கை குலுக்குபவர்கள்.

என் வாழ்க்கை எனக்கு நிறைவாக இருந்தது. ஏனெனில் அது என்னால் உருவானது.

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை வழியாக மவுண்ட் ரோடைக் கடந்து மௌபரீஸ் ரோடுக்குள் நுழைந்தேன். ஆழ்வார்பேட்டை சிக்னல் தாண்டி மளிகைக் கடையோரம் நின்றுகொண்டேன். கடைக்கு நேரே இருக்கிற பங்களா என் அப்பாவுடையது.

வாசலில் கூட்டம் இருந்தது.

## 3

காரைவிட்டு இறங்கியதும் அந்தக்கடை முதலாளி கரீம் பாய் என்னை வரவேற்றார். "வாங்க தம்பி வந்துட்டீங்களா வாங்க" என்னைக் காட்டிலும் அவர் முகத்தில் அதிக நரையிருந்தது. "கொஞ்சம் பருமனாயிட்டீங்க போலிருக்கே, பாத்து நாளாச்சுல்ல நாலு வருசமிருக்குமா? உங்க அம்மா காலமானபோது வந்தீங்க. ஏலேய் உள்ளாற யாரு, வாசல்ல நாற்காலி கொண்டா."



காரின் ஆறு மணி நேர சூட்டுக்குப் பிறகு அந்த மர நாற்காலி குளுமையாயிருந்தது. நான் கைகுவித்து அவரை வணங்கினேன். நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். என் அப்பாவின் வீட்டுக்குள்ளிருந்து ஒரு அம்பாசிடர் கார் வெளியே போயிற்று. டீ.என்.ஜே. அம்பத்தி மூன்று பதினொன்று வேலூர் ரிஜிஸ்ட்ரேஷன். யாருடைய கார் என்று தெரியவில்லை. அப்பாவின் க்ளையன்டாக இருக்கும். கடைசி நேர மரியாதைக்காக வந்துபோயிருக்கலாம்.

"அப்பாவுக்கு நேந்துலேர்ந்தே ரொம்ப மோசமாயிட்டாப்போல. அம்மா போன பிறகே அவர் ரொம்ப ஒடுங்கிட்டார். ரெண்டு வருசமா வெளிய வர்றதே இல்லை. ஆபீஸ் வெவகாரமெல்லாம் கூட பெரிய தம்பி தான் பாத்துக்கறார் போல. ஒனக்கு எப்படித் தெரியும்னு கேக்கிறிகளா? கடைக்கு செக் வருதில்ல... பெரிய தம்பி கையெழுத்துப் போட்டுத்தானே வருது. ராவுல எப்பவாச்சும் பாஷ்யம் சாரும் வந்து ஒக்காருவாரு. பேசிக்சிட்டிருப்போம். அம்மா போனபிறகு வீட்டுக் களையே போச்சு. தம்பி எனக்கு இன்னிக்கும் ஞாவகம் இருக்கு. அம்மாதான் பத்து ரூபா குடுத்து மொதல் மொதல்ல வெல்லம் வாங்கினாக. அப்ப எட்டுக்கு எட்டு கடை. இப்ப ரெண்டு மாடி கட்டிட்டேன். அந்தக் கருப்பு ப்யூக்ல அய்யாவும் அம்மாவும் போவாங்களே, அடேங்கப்பா... கண்கொள்ளாக் காட்சி இருவத்தெட்டு வருசத்துக்கு முன்னாடியே ஆயிரம் ரூபாய்க்கு மளிகை சாமான் வாங்குவாக தம்பி இங்கன உக்காந்து அச்சுவெல்லம் சாப்பிட்டிருக்கீங்களே... ஞாபகம் இருக்கா? அடேங்கப்பா... கனவு மாதிரி இருக்கும்."

எனக்குள்ளும் கனவு கவிழ்ந்தது. ஒரு வன்மையோடு அதை தடுத்து நிறுத்தினேன். ''உள்ள என்ன பேசிக்கிறாங்க ராவுத்தர்? அப்பாவைப் பத்தி என்ன சொல்றாங்க?''

''டாக்டருங்க சொன்னதைச் சொல்றேன் தம்பி. இன்னிக்கு ராத் தாங்காதுங்றாங்க. இது மனுசங்க பேச்சு, அல்லா என்ன நெனச்சுக்கிட்டுருக்காரோ. அங்கன பார்... நாணுத்தம்பி வருது வெளியே...''

நாணு என்கிற நாராயணன் எனது இரண்டாவது அண்ணன், வேஷ்டியை மடித்துக் கட்டியிருந்தான். டெரிக்காட்டன் ஜிப்பாவுக்குள் பெருத்துக் கிடந்தான். உயரம் அகலமான பின்பக்கம் உடம்பு முழுக்க ரோமம். மார்பில் புலிநகச்சங்கிலிபுரள சினிமா வில்லன் மாதிரி இருந்தான். 'என்னடா' என்று அதட்டினால் போதும், வேஷ்டி உட்பட சகலமும் கழட்டிக் கொடுத்து விடுவான். இரண்டு கட்டிடம் தள்ளிப்போய் நின்று இடுப்புச் சொருகலிலிருந்து சிகரெட் எடுத்தான். நாலாபக்கமும் பார்த்துவிட்டு பற்ற வைத்தான். உள்ளங்கையில் மறைத்துக் கொண்டு அவசரம் அவசரமாய்ப் பிடித்தான். அவன் சிகரெட் உறிஞ்சிய வேகத்தில் நிறைய பதட்டம் தெரிந்தது.

நாணா மாறவில்லை. மாறமாட்டான். மாறுவதை மன வளர்ச்சி என்று சொல்கிறார்கள். சிலருக்கு இந்த வளர்ச்சி ஒரு வயதோடு நின்றுவிடுகிறது. நாணாவுக்கு மிகச் சிறிய வயதிலேயே நின்றுவிட்டது.

நான் இந்த வீட்டை விட்டு ஓடிய பிறகு அம்மா இறந்த நாளில்தான் மறுபடி வந்தேன். அப்படி வந்த என்னை வியப்போடு பார்த்த பல பேர்களில் நாணாவும் ஒருவன். ஆனால் வாய்விட்டு என்னைப் பாராட்டியது இவன் மட்டுமே.



இவன் பாராட்டியது என் பேண்டின் கச்சிதத்தையும், என் சிகரெட் கேசின் அழகையுமே. 'ட்ரிபிள் ஃபைவ்வா புடிக்கறே... ரொம்ப காஸ்ட்லியாச்சே... நான் ரெண்டு எடுத்துக்கட்டுமா...? நாலெடுத்துக் கொண்டான். பிறகு கேசோடு ஜிப்பாவில் செருகிக் கொண்டான். 'உன் பேண்டு ஸ்டிச்சிங் கிளாசுடா. எவன் தச்சாலும் எனக்குச் சரியா வர்றதில்லை. மல்லு வேஷ்டிதான் நமக்கு லாயக்குன்னு இருந்துட்டேன். இது ரெடிமேட் பேண்டா? நான் வொண்ணு எடுத்தேன். சரியா வரலை. ரீஸ்டிச் பண்ணச் சொன்னேன். அப்பவும் எடுபடலை. நறுக்கி அரை ட்ராயராகப் பண்ணிட்டேன். உள்ள ரெடிமேடு. மேல மல் வேஷ்டி. எனக்கு அவ்வளவுதான் கொடுப்பனை. உனக்கு டக்கரா இருக்குடா இந்த டிரஸ்ஸு. சௌக்கியமா இருக்கியோன்னோ, அதான் வேண்டியது...''

அம்மா செத்தபோது இவையே, இவை மட்டுமே இவன் என்னோடு பேசிய விஷயங்கள்.

ஆனால் இதைக்கூட வீட்டில் வேறு எவரும் என்னோடு பேசவில்லை. அப்பா ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. 'வா' என்று கூடக் கூப்பிடவில்லை.

சமையல்கார பாஷ்யம் மாமாதான் என் கையைப் பிடித்து உள்ளே அழைத்துப்போய் அம்மாவைக் கிடத்தியிருக்கிற இடத்தில் என்னை நிற்க வைத்தார்.

''அம்பி...அம்பி அம்மா போயிட்டாடா!'' என்று அழுதார். எனக்கு அழுகை வரவில்லை. உடம்பு முழுவதும் ஒரு பதட்டம் பரவியது. தணித்துக்கொள்ள அங்கேயே ஒரு சிகரெட் பற்ற வைத்தேன். புகைவிட்டபடி ஆழமாய், கனிவாய் என் அம்மாவைப் பார்த்தேன்.

நாற்பத்தி ஆறு வருடம் இரவும் பகலுமாய் ஒரே ஒரு மனிதனின் நினைப்பாக மட்டுமே இருந்து, அவன் சிந்தனையே தன் சிந்தனையாக கொண்டு, அவன்

நலனே தன் வாழ்வின் முக்கியமாகக் கருதி, அவன் கோபத்தையே தன் கோபமாகக் காட்டி, அவன் சிரிப்பையே தன் சிரிப்பாகச் சிரித்து, அவன் கேள்விகளையே தன் கேள்விகளாகக் கேட்டு, அவன் பதில்களையே தன் பதிலாகக் கொண்டு, அவன் கட்டளைகளையே தன் கட்டளைகளாக சொல்லி, தன் மனம் அழித்து, தன் விருப்புகள் காணாமல்போய், தன் சுயம் அழித்து, தன் உருவத்தைச் சிதைத்துக்கொண்டு, தானே அவனாய், அவனே தானாய் வாழ்ந்து இந்தப் பெண்மணி செத்தும் போயிருக்கிறாள்.

செத்தது அம்மா இல்லை, அப்பா. உருவந்தான் அம்மாவேயொழிய, இந்த பிரேதம்தான் அம்மாவேயொழிய இவளுக்குள்ளே இதுவரை இருந்தது மொத்தமும் அப்பாவின் புத்தி.

''இனிமே ராத்திரி தொட்டுக்கறதுக்கு கறியமுது கிடையாது... வெறும் சாத்தமுதுதான். அப்பா சொல்லியாச்சு. யாரும் கேக்கக்கூடாது... கான்வென்ட்ல சேர்க்க வேண்டானுட்டா அப்பா. ஹிண்டு ஹைஸ்கூல் போதும்னுட்டா... இனிமே நீ ஹிண்டு ஹைஸ்கூல் தான்.''

''ஜிப்பு வச்ச ட்ராயர் கிடையாது... அப்பா ஜிப்பு வச்சா பேண்ட்போட்டுக்கறார். இனிமேல் எல்லோருக்கும் பட்டன்தான்...''

''நெத்தியிலென்ன விபூதியா, அழி மொதல்ல... அப்பா பார்த்தா கொன்னுடுவார்.'' ''அவ சூத்ரச்சிடா. அவ மடியிலதான் ஒக்காந்து சாப்பிடுவேங்கறியே... என்ன பண்றது ஒன்னை... வாய்மேலேயே போடு'' என்றார் அப்பா. நாலு விரல் புதிய உதட்டு ஈறுக்கு நடுவே ரத்தங்கசிய உடனே இவன் வாயில் இரண்டு அடி வைத்தாள் அம்மா.



அப்பாவின் குரூரம் அவள் குரூரமாகவே மாறி விட்டது. அப்பா எதற்கு கோபித்துக் கொள்வாரென்று அத்துபடியாகி விட்டது. வயதாக வயதாக அப்பாவைப் போலவே அவர் சந்தோஷத்திற்காகவே பிறரைக் கொடுமை செய்வது பழக்கமாகிவிட்டது.

''யாருதுடி சைக்கிள்? வண்டியவிட்டு கீழே இறங்க முடியாமே எவன் வச்சது இங்கே.''

''மாடி போர்ஷன்காராளுது... நீங்க உள்ளே வாங்கோ நான் இன்னிக்கு இதுக்கு ஒரு முடிவு கட்டறேன். டேய் அம்பி, மாடியாத்து மாமாவைக் கீழே கூட்டிண்டு வா.''

''உங்களுக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன் சைக்கிளை எங்க வீட்டுக்கு எதிர்க்க வைக்கப் படாதுன்னு. எங்காத்துக் கார் வரப்போக கஷ்டமாயிடறது... ஒரு தடவை சொன்னா புரிய வேண்டாமா...''

''மறந்து போச்சு மாமி. மன்னிச்சுக்கோங்க.''

''எப்படி மறக்கும்... ஒரு சூடு, ஒரு வார்த்தை போறாதா.''

''இதோ எடுத்து ஓரமா வச்சிட்டேனே...''

''அங்கேயும் இருக்கப்படாது. எடுங்கோ மொதல்ல...''

''வேற எங்கத்தான் சைக்கிள் வைக்கிறது... அது பாட்டுக்கு ஓரமா இருக்கு...''

''மாடி வரைக்குத்தான் ஒங்க போர்ஷன்...சைக்கிள் நிக்க வைக்கறதுக்குமா வாடகை குடுக்கறேள்...''

''இதுக்கெல்லாமா வாடகை கேப்பேள். மாடிக்கா எடுத்துண்டு போக முடியும் சைக்கிளை...''

''எங்க வேணாலும் எடுத்துண்டு போங்கோ,இங்கே இருக்கப்படாது... நல்லதில்லை.''

அந்த மனிதன் சைக்கிளை மாடிக்கு எடுத்துக் கொண்டு போவான். இவன் அரை நிக்கருடன் அதை வேடிக்கை பார்ப்பான்.

ஒரு நாள் மறதியோ...அல்லது அவசரமோ,அவன் சைக்கிள் வீட்டு வாசலிலேயே சுவரோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அம்மா கடுகடுத்தாள். ''இவனுக்கு வாயால சொன்னா புத்தி வராது.'' பல்லைக் கடித்துக்கொண்டு சீறினாள். படிகளில் இறங்கி தெருவைக் கடந்து எதிர் பக்கம் போய் லுங்கி கட்டிய ஒருவனைக் கூட்டிக் கொண்டு வந்தாள். வீட்டிற்குள் நுழைந்து அவனிடம் பதினைந்து ரூபாய் கொடுத்தாள்.

''அந்த சைக்கிளை பூட்டை ஒடைச்சு எடுத்துண்டு போயிடு... எங்கயாவது கொண்டுபோய் அக்கக்கா கழட்டி வித்துப் பொழச்சிக்கோ... இந்தா சுத்தியல்.''

அந்த ஆள் ஒரே அடியில் பூட்டை உடைத்தான். பவ்யமாய் சுத்தியலை அம்மாவின் காலில் வைத்தான். காணாமல் போனான்.

இரண்டு மணி நேரம் கழித்து மாடி போர்ஷன் காரர் சைக்கிளைத் தேடினார். அண்டைகளில் விசாரித்தார். 'காணோமே, காணோமே' என்று புலம்பினார்.

அம்மா வெற்றிலை மென்று கொண்டு மெதுவாக வெளியே வந்தாள்.

''என்ன தேடறேள்... சைக்கிளா... காணாப்போய்டுத்தா... நல்ல சைக்கிள்னா அது ஐயோ பாவமே. தான் அதுக்குத்தான் அப்பமே அடிச்சிண்டேன்...எங்க வீட்டு சைக்கிளே ரெண்டு காணாமப் போயிருக்கு... அத நெனப்புல வச்சிதான் இங்க வைக்க வேண்டாம்னேன்... நீங்க புரிஞ்சுக்கலை. எங்காத்துக்காரர் வரட்டும் போலீஸ்ல பிராது குடுக்கச் சொல்லுவோம்...



போலீஸ்காரள்ளாம் இவருக்கு ஃபிரண்டுதான்... வக்கீல் சார்...வக்கீல் சார்ன்னு சல்யூட் அடிப்பான்கள். கவலைப்படாதீங்கோ... ஐயோ பாவம், நல்ல சைக்கிள்ன்னா அது.'' கொஞ்சங்கூட குறை தெரியாமல் கவலைப்பட்டாள்.

இவன் சகலத்துக்கும் சாட்சியாய், வியப்பாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பா பிற்பகல் சாப்பாட்டிற்கு வந்தபோது சிரிப்பும் வெடிப்புமாக அம்மா அவரிடம் விஷயம் சொன்னாள். அப்பாவும் சிரித்தார். அவளைத் தட்டிக்கொடுத்தார்.

''போய் மாடியாத்து மாமாவை அப்பா கூப்பிடறார்னு கூட்டிண்டு வாடா.'' அப்பாவும் சைக்கிள் தொலைத்தவரோடு சேர்ந்து கவலைப்பட்டார்.

''ஒரு நாளைக்கு நூறு பேர் வரப்போற இடம் இது. கட்சிக்காரா கூட்டம் ஜாஸ்தி... யாரைப் போய் கேக்கறது சொல்லுங்கோ, யார் நல்லவா... யார் கெட்டவான்னு தெரியாத காலமிது...'' வந்தவருக்குத் தெரியாமல் அம்மாவைப் பார்த்துக் கண் சிமிட்டினார். அம்மா வெட்கப்பட்டாள்.

வந்தவர் அதே கவலையோடு படியேறிப்போக, வீடு வாய்விட்டுச் சிரித்தது, இவனால் தாங்க முடியவில்லை. இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை.

மறுநாள் காலை எழுந்து போய் மாடிப் போர்ஷன் காரரிடம் அம்மா செய்த காரியமனைத்தும் ரகசியமாய் காதோடு சொன்னான். சொல்லிவிட்டு, தனக்கு என்ன நேருமோவென்று பயந்தான்...இவன் மீது பரிதாபங் கொண்டோ என்னவோ மாடி போர்ஷன்காரர் அப்பா ப்யூக் காரில் வெளியே போனதும் கீழே இறங்கி வந்து 'இப்படிப் பண்ணிட்டேளே மாமி' என்று அழுதார்.

நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்' என்று கத்தினார்.

அம்மா இதை எதிர்பார்க்கவில்லை போலிருக்கிறது. அதிகம் வெளிறிப் போனாள்.

'ஆம்பள இல்லாதபோது வீட்ல நுழைஞ்சு என்ன கூச்சல் இது! எங்காத்து ஆம்பளைக்கிட்டே வந்து பேசிக்கோங்கோ, எனக்கொன்னும் தெரியாது'' என்று சமையலறையுள் ஒதுங்கிக் கொண்டாள்.

அவர் போனதும் ஹால் கதவைத் தாழிட்டாள். இவனைத் தேடினாள். இவன் கட்டிலுக்கடியில் ஒளிந்து கொண்டான். உறங்கிப் போனான். பிற்பகல் சாப்பாட்டிற்கு அப்பா வரவில்லை.

சாயங்காலம் வந்ததும் அம்மா விவரம் சொல்ல இருநூறு ரூபாய் பாஷ்யம் மாமாவிடம் கொடுத்து மாடிக்கனுப்பினார்,

''இன்னும் ஒரு வாரத்துல அவாள காலி பண்ணச் சொல்லுங்கோ... அந்தக் குடித்தனம் நமக்கு வேண்டாம்.''

இவன் புழக்கடை பக்கம் இருந்தபடி சகலமும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். கால் அலம்ப வந்தவர் இவனை ஊடுருவிப் பார்த்தார். எட்டித் தலைமயிரைப் பிடித்தார். தரதரவென்று ஹாலுக்கு இழுத்து வந்தார். வேஷ்டி மீது கட்டியிருந்த பட்டை பெல்ட்டை பிரித்து வைத்துக் கொண்டார்.

''படவா நாயே... நீதானே மாடிக்குப் போய் சொன்னே, நீதானே அம்மாவைக் காட்டிக் குடுத்தே... சொல்லுடா நீதானே சொன்னே...'' இவன் அசையாது நின்றான்.

''இந்த வயசுல இவ்வளவு நெஞ்சுரம் இருந்தா... பெரியவனானா என்னல்லாம் பண்ணுவே நீ...தின்ன



சோத்துக்கு துரோகம் பண்ற நாயே...'' சுளீரென்று பெல்ட் ஒரு முறை இவன் மீது படர்ந்தது.

பாஷ்யம் மாமா மாடியிலிருந்து ஓடி வந்தார். அப்பாவிடமிருந்து விலக்கி இவனை அணைத்துக் கொண்டார்.

''கொழந்தை ஏதோ தெரியாம பண்ணிட்டான். இந்த தடவை அவனை விட்டுடுங்கோ...''

''அவன் அம்மாட்ட போய் மன்னிப்புக் கேக்கணும். தன் தாயாருக்கு எவ்வளவு பெரிய அவமானம் கொடுத்திருக்கோம்னு தெரியணும்'' இவன் மறுத்தான். அசையாது நின்றான்.

''அம்பி மன்னிப்பு கேட்டுர்றா'' பாஷ்யம் அய்யங்கார் கெஞ்சினார்.

''முடியாது மாமா! பொய் சொல்றது பாவம். நான் சொல்ல மாட்டேன்.'' சூளுரைத்தான்.

அப்பா பாஷ்யம் மாமாவிடமிருந்து இவனைப் பிரித்தார். பெல்ட் சொடுக்கு மறுபடியும் படர்ந்தது.

''பொய் சொல்றது பாவம். நான் சொல்ல மாட்டேன்'' விறைப்பாய் நின்றான்.

பெல்ட் மறுமுறை சொடுக்கிற்று. வலி துடிக்க வைத்தது. கண்ணில் நீர் திரண்டது. 'நீ ஒரு டூப். அம்மா ஒரு டூப். நான் டூப் அடிக்க மாட்டேன். எத்தனை தடவை அடிச்சாலும் பொய் சொல்ல மாட்டேன்.'' இரைந்து கூறினான்.

மாடி போர்ஷன்காரர் இறங்கி வந்து அப்பாவை தடுத்தார். ''அவன் சின்ன கொழந்த சார். கொழந்தங்க தெய்வம் மாதிரி. நம்ம புத்தியெல்லாம் அவாளுக்கு வராது சார்.''

எல்லாம் கிடக்க, மாடி போர்ஷன்காரரே தன் பிள்ளைக்கு வக்காலத்து வாங்கியது அப்பாவுக்கு ரோஷமாயிற்று.

"இவன் என் பிள்ளை. இவனை அடிச்சுக் கொல்லு வேன். வெட்டி போடுவேன். உன்னை யாரும் கூப்பிடல இங்க. வெளியே போ" என்று சீறினார். திகைத்து நிற்கின்ற அவர் கண்ணெதிரே அவனை மேலும் அடித்தார்.

"ச்சீ நீயெல்லாம் ஒருமனுஷனா" மாடி போர்ஷன் காரர் சீற. அப்பா பற்களைக் கடித்துக்கொண்டு இவனைப் புடைத்தார். பெல்ட் படர்ந்த இடமெல்லாம் வரியாயிற்று. இவன் அலறல் அதிகமாகவேண்டும் அது மாடி போர்ஷன்காரருக்கு கேட்க வேண்டு மென்றே அடித்தார்.

குறுக்கே விழுந்து தடுத்த பாஷ்யம் மாமா மீதும் நாலைந்து பெல்ட் அடி விழுந்தது.

அந்த இரவு அவன் ஓடிப்போனான். அம்மா இறந்து போன பிறகுதான் அந்த வீட்டில் காலடி வைத்தான். எட்டாங்கிளாஸ் படிப்போடு பதினான்கு வயதில் காணாமல்போன ராமானுஜம், வக்கீல் வரதாச்சாரிபிள்ளை ராமானுஜம், ராம் ஆட்டோ மோபைல்ஸ் உரிமையாளனாய், லட்சாதிபதியாய். எந்த மரபுகளு மற்றவனாய், எதிலும் பிணைக்கப் படாதவனாய், எந்த நெகிழ்வுமில்லாதவனாய், உறவு களற்ற சுதந்திர புருஷனாய், உறவே தேவைப்படாத நாகரீகனாய், தெளிந்தவனாய், திடமானவனாய், திரும்பி வந்தான்.

தமிழ் பேச்சு மறைந்து போயிருந்தது. மாமிச உணவும், உயர்ரக மதுவும் உடம்பில் வளமேற்றி யிருந்தன. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல் என்கிற தெளிவு முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது.



அம்மா! உன் வாழ்நாளில் நீ அறிந்தது என்ன? உன் உடம்பு முழுவதும் சுருக்கமும், தலையெல்லாம் நரையும் கொண்ட பிறகும் நீ கற்றது என்ன?

அறிந்துகொள்ளாமல் இறப்பது பாவமல்லவா? இது சாபமல்லவா? வாழாவெட்டி என்பதற்கு அர்த்தம் தமிழில் புருஷனோடு இல்லாதவள் என்று சொல்கிறார் களே! வெட்டியாய் வாழ்வதுதானே வாழாவெட்டி.

வாழ்க்கை, அம்மா. உனக்கு புருஷன் இருந்தும் வாழாவெட்டிதான். வாழ்ந்தும் வாழாவெட்டி, ஐம் ஸாரி, மை மம்... நான் உனக்காக துக்கப்படுகிறேன். நீ வளர்ந்த விதம் அப்படி. அதற்காக வேதனை கொள்கிறேன்.

அம்மா, அடுத்த பிறவி என்று ஒன்று இருப்பின் அது நல்ல பிறவியாகஉனக்கு அமையட்டும் இதைவிட நல்ல புருஷன் உனக்கு கிடைக்கட்டும். அதுவரை உன் ஆன்மா அமைதியோடிருக்கட்டும்.

சிகரெட் கையில் சுட்டது. மெல்ல நடந்து ஜன்னல் வழியே அதை வெளியே எறிந்தான். ஹாலுக்கு வந்தான்.

சிகரெட் குடிக்கறதுக்கு ஒரு நேரம் காலம் வேண் டாமா? வேற எடமே இல்லியா மாமிகிட்டக்கபோகவே முடியலை. ஒரே புகை நாத்தம்.

யாரோ ஒரு பெண் முணுமுணுத்தாள். ஏதோ ஒரு அண்ணாவின் மனைவி போலிருக்கிறது. உரிமை யோடு சமையலறைக்குள் ஓடுவதைப் பார்த்தால் அப்படித் தானிருக்கிறது.

"எல்லாரும் பாத்தாச்சோன்னோ... மேலே ஆக வேண்டியதைக் கவனியுங்கோ. வைதீகம் பண்றவாளை மட்டும் உள்ள விடு. நாணா, மத்தவாளை, வாசல்ல நிக்கச் சொல்லு" அப்பா அதிகாரமிட்டார்.

அவன் வாசலுக்கு வந்தான்.

# 4

அம்மாவை காட்டில் எரித்துவிட்டு ஈரத் துணி யோடு வந்தபோதுகூட, வீட்டில் உள்ளவர்கள் யாரும் பேசவில்லை. பாஷ்யம் மாமாதான் கிணற்றிலிருந்து ஜலம் இழுத்துத்தலையில் ஊற்றினார். ஈர வேட்டியை பிழிந்து இடுப்பில் கட்டிக்கொள்ளச் சொன்னார். கூடவே தாஜ் ஹோட்டல் வரை வந்து அவனது அறை எங்கே இருக்கிறதென்று தடம் பார்த்துப் போனார்.

"ராத்திரி பத்து மணிக்கு மேல வரேண்டா அம்பி... உனக்கு தொந்தரவு இல்லையோன்னோ" என்றார்.

ஹோட்டலிலேயே சாப்பிட்டுவிட்டு, இடையே வெளியேபோய் மாமாவுக்கு எச்.எம்.டி வாட்சும், பச்சைக் கல் மோதிரமும் வாங்கி வைத்திருந்தேன்.

பத்துமணிக்கு மாமா உள்ள நுழைந்ததும் என்னை ஆரத் தழுவிக்கொண்டார். 'என் கொழந்தை, என் கொழந்தை' என்று தேம்பினார்.

"எத்தனை அடி அடிச்சா ஒரு பச்சைக் குழந் தையை. பட்டை பட்டையா ரத்தம் கட்டிப் போகும் படி எத்தனை அடி அடிச்சா" முதுகை தடவினார்.

'பதினாலு வருஷம் ஆயிடுத்து மாமா' சிரித்தபடி பதில் கூறினேன்.

"எனக்கு இன்னும் வலிக்கிறதுடா அம்பி. ஒவ் வொரு நாள் ராத்திரி சோறு திங்கறபோதும் வலிக்குது. பொய் சொல்லமாட்டேன்னு சொல்லி ஒடம்பு பூரா அடிபட்ட கொழந்தைய நெனச்சி மனசு முழுக்க வலிக்கும்."

"அம்பி நன்னாயிருக்கியாடா? கல்யாணம் பண்ணிண்டியா? கொழந்தைகள் எத்தனை? ஒரு உப காரம் பண்ணுடா அம்பி. இந்த சாக்கடைக்கு வேற போக்கிடமில்லை, ஆனா ஒடம்பு தளர்ந்துண்டு வருது.



முன்ன மாதிரி இருபது மணி நேரம் உழைக்க முடி யலை. உங்கப்பா குடும்பம் பெருத்துப் போயிடுத்து... நாலு மாட்டுப் பெண் ரெண்டு மாப்பிள்ளை. ஒருத்தரும் ஒரு துரும்பு நகர்த்த மாட்டா. இனிமே முடியவே முடியாதுன்னு ஒரு காலம் வந்தா, உங்கிட்ட வந்துட றேன் அம்பி. என்னைப் பாரமா நெனைக்க மாட் டயே..."

நான் அவருக்குப் பதில் சொல்லவில்லை. மாறாய் கைகளைப் பிடித்து கண்ணில் ஒற்றிக் கொண்டேன். வாட்சையும் மோதிரத்தையும் அணிவித்தேன். என் விசிட்டிங் கார்டை பையில் சொருகினேன்.

"மாமா, பெங்களூர்ல இறங்கி எந்த டாக்ஸிகாரங்க கிட்ட இந்த கார்டு காமிச்சாலும் போதும். காசு வாங் காம எங்கிட்ட கொண்டு வந்து இறக்கிவிட்டுருவான். உங்களை நான் கூப்பிட்டா—கரிச்சதா போகும். நான் கூப்பிடாம நீங்களா வர்றதுதான் உங்களுக்கும் அழகு. எனக்கும் பெருமை."

மாமா பாசத்தின் மிகுதியால் துவண்டுபோய் உட்கார்ந்தார். என்னைப் பற்றி தூண்டித் துருவி பல கேள்விகள் கேட்டார். தலையணையை அண்டக் குடுத்தார்.

'ஹே... ராமா' என்றபடி கீழே கார்பெட்டில் துண்டை விரித்து அங்கேயே தூங்கினார். விடிந்த பிறகு வீட்டிற்கு போனார்.

மாமாவிடமிருந்து எப்போதாவது போஸ்ட் கார்டு வரும். நலம், நலமறிய ஆவல் என்பதுதான் அங்கு செய்தியாக இருக்கும்.

இரண்டு வருடத்திற்கு முன்னால் ஒரு போஸ்ட் கார்டில் போன மாசம் சுக்கில பட்சம் பிரதிமை திதியன்று உன் அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக். இப்போது தேவலாம் என்று கூடுதலான செய்தி யொன்றிருந்தது.

நேற்று பிற்பகலில்தான் 'அப்பா மூழ்கிக்கொண்டிருக்கிறார், உடனே வரவும்—பாஷ்யம்' என்று தந்தி வந்தது.

நான் போர்மேனிடம் வொர்க்ஷாப்பை கவனிக்கும்படி ஒப்படைத்தேன். தால்மா வீட்டிற்குப்போய் காரிலிருந்து இறங்காமல் விஷயம் சொன்னேன். தால்மா ஏசுவை அழைத்தாள். சிலுவைக் குறி போட்டு விரலை முத்தமிட்டுக் கொண்டாள்.

''கெட்ட செய்தி ஏதும் இருப்பின் உடனே போன் பண்ணு ராம்.''

''எதற்கு தால்மா?''

''வழியே எந்த துன்பமுமின்றி உன் தந்தையின் ஆத்மா கடவுளிடம் போக நான் மரியாளை வேண்டுவேன்.''

''இறந்து விடுவாரென்று சொல்கிறாயா தால்மா''

''ஐயம் சாரி ராம், உன்னைப் பார்த்தவுடன் என் உள் மனசில் ஒரு கெட்ட செய்தி வந்துவிட்டது. நேரம் இரவு ஒரு மோசமான கனவு வந்தது. ஒரு சவப்பெட்டியை காரின் மேல் வைத்துக் கொண்டு நீ எங்கோ விரைவதாய் ஒரு கனவு கண்டேன். நான் வேசிதான் ராமானுஜம். ஆனால் உனக்கு மட்டும் கடன்பட்டவள். கவனமாக கார் ஓட்டு, ஒரு நிமிடம் இரு. என்னை சர்ச்சில் இறக்கி விட்டுப் போ.''

உள்ளே ஓடிப்போய் ஸ்கார்ப் எடுத்து வந்தாள். என் அருகில் உட்கார்ந்து மறுபடியும் சிலுவை இட்டுக் கொண்டு பிரார்த்தனைகள் முணுமுணுத்தாள். என் கன்னத்தில் முத்தங்கள் பதித்து விடை கொடுத்தாள். சர்ச் வாசலில் இறங்கி கார் பானெட்டின் மீது தன் விரலால் சிலுவை எழுதினாள். சர்ச்சுக்குப் போனாள்.



பெங்களூர் எல்லையில் இரவு உணவை முடித்தேன். ஆறு மணி நேரத்தில் சென்னையை வந்தடைந்தேன்.

என் வீட்டுக்கெதிரே ராவுத்தர் மளிகைக்கடையில் உட்கார்ந்தபடி நானும் என் அப்பாவின் மரணத்திற்காக காத்துக் கிடந்தேன். என் அண்ணன் நாணா இரண்டு சிகரெட் குடித்துவிட்டு உள்ளே போய் விட்டான்.

''எங்காத்துக்கார் கிட்ட ஒரு கெட்ட பழக்கம்கெடையாது மாமி. பீடி, சிகரெட், புகையிலை, பொடி, ரேசு, குடி ஒண்ணும் கிடையாது. காத்தால எழுந்து விஷ்ணு சகஸ்ர நாமம் சொல்லுவார், சாயந்தரம் உட்கார்ந்து வேதம் கேப்பார். விசிறிண்டே வாத்யாரோட சேர்ந்து தானும் சொல்லுவார். காசா கொழிக்கிறார்ன்னா—அதெப்பிடி? விஷ்ணு சகஸ்ர நாமம் சொல்ற வீட்டுல கெட்டதுன்னு ஒண்ணு வருமோ? நாலு தலைமுறையா வக்கீல், கட்சிக்காரா கால்ல விழுந்துதான் கேஸ் குடுப்பா. இவர் கேஸ் எடுத்துத் தோத்துப் போனதா ஒரு தடவக்கூட இல்லை. மாச தர்ப்பணத்துக்கு எல்லாரும் எட்டணாதான் தருவா. எங்காத்துக்காரர் சல்லை நோட்டா பத்து ரூபாதான் வெப்பார். பொழச்சி போட்டும்க, பிராமணனுக்குக் குடுத்தா அத்தனையும் புண்ணியம்பார். ஆனா மந்தரம் தப்பா சொன்னாக்க, மகா கோபம் வந்துரும். செவுட்டுலேயே அறைஞ்சி இழுத்துடுவார். எந்த சாஸ்திரிகளுக்கும் வக்கீல் வரதாச்சாரியார்ன்னா சிம்ம சொப்பனம், காலைப் பின்னிண்டு, வாயப் பொத்தி, பத்தடி தள்ளி நின்னுதான் பேசும்.''

அம்மா அலட்டிக் கொண்டது ஞாபகம் வந்தது. அப்பா அடித்த சாஸ்திரிகளை அவன் பார்த்திருக்கிறான். அவரை அடிக்க வேண்டிய அவசியமேயில்லை. யாராவது மிரட்டினால் கூட அழுதுவிடும் தோற்றம். வறுமையில் கூம்பிய முகம்.

யாரோ ஒரு சாஸ்திரிகள் சைக்கிளை விட்டு இறங்கி, வீட்டு கும்பலை எட்டிப் பார்க்க நாணா அவரை வெளியே 'போடா' என்று இரைந்து கொண்டிருந்தான்.

"எங்கே எவன் சாவான்னு காத்துண்டு கிடக்கானுங்க. இந்தப் பக்கம் தலை தெரிஞ்சது, வெட்டிப் போட்டிருவேன்." தன்னிலும் வயது முதிர்ந்தவரை கெட்ட வார்த்தைகளால் திட்டினான்.

ஆனால் அவன் வீட்டு வாசலிலிருந்த எல்லாருமே அவன் அப்பாவின் மரணத்திற்காக காத்துக் கிடந்தார்கள்.

நான் எழுந்தேன். "ராவுத்தர், நான் அப்பாவை போய் பார்த்துட்டு வந்திர்ரேன்."

ராவுத்தரும் எழுந்தார், "செய்யுங்க தம்பி" என்று கை கூப்பினார். "உங்க கார் இங்ஙனயே இருக்கட்டும் நான் பார்த்துக்கிடுறேன்" கடையைவிட்டு இறங்கி வழியனுப்பினார்.

வாகனங்கள் பறக்கும் மௌபரிஸ் சாலையைக் கடந்து நான் வீட்டிற்குள் போனேன். வாசல் கூட்டம் என்னை வியப்போடு பார்த்தது, நாணாதான் என்னை முதலில் பார்த்தான்.

என்னைப் பார்த்ததும் விருட்டென்று வீட்டிற்குள் ஓடினான். என் பெரிய அண்ணா வெளியே வந்தான். 'வா அம்பி' என்று என்னை வரவேற்றான். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அண்ணா வரவேற்ற தைரியத்தில் நாணா ஒருபடி மேலே போனான். 'வா ராமானுஜம்' என்று குரல் தழதழக்க என்னை உள்ளே அழைத்தான் என் வியப்பு எல்லை கடந்தது.

மீதி இரண்டு சகோதரர்களும் மாப்பிள்ளைகளும் என்னை சூழ்ந்து கொண்டனர்.



நான் மனசுக்குள் விசிலடித்தேன். சம்பந்தமில்லாமல் தால்மாவை நினைத்துக் கொண்டேன்.

'ஹேய் லுக், என் உறவுகள் எனக்கு கிடைத்துவிட்டார்களெ'ன்று உள்ளே கூவினேன்.

"நீ வந்தது ரொம்ப சந்தோஷம்ப்பா. உன்னைப் பத்திதான் பேசிட்டிருந்தோம். தந்தி கெடச்சதா."

என்னைப் பற்றி... இவர்கள்... என்ன பேசியிருப்பார்கள். சட்டென்று உள்ளே மின்னலடித்தது அப்பாவின் சொத்தில் எனக்கும் உரிமையுண்டு. அதனால்தான் இத்தனை வரவேற்பு.

நான் சிரித்தேன்.

"டேய் நாணா, பாஷ்யம் மாமாவைக் கூப்பிடு. அம்பியை உள்ளே அழைச்சிண்டு போகச் சொல்லு." பெரியண்ணா கட்டளையாகப் பேசினான்.

அப்பா மாதிரியே முழுக்கை வெள்ளை சட்டையும், தங்கப் பித்தானும், சரிகை அங்கவஸ்திரமுமாய் இருந்தான். புருவத்தில் ஜவ்வாது எழுதியிருந்தது. காதோரம் நரைக்கத் துவங்கி இருந்தது. பேசும்போது விஸ்கி வாசனை வீசிற்று. அப்பாவின் இடத்தை அண்ணா பிடித்துக் கொண்டான் என்று சுலபமாய்த் தோன்றியது. அப்படியானால் அம்மாவின் இடத்தை முதல் மன்னி நிரப்பி இருப்பாளோ, இருக்கலாம். இன்னமும்கூட இந்த வீட்டிலிருந்து சைக்கிள் திருடு போகலாம்.

பாஷ்யம் மாமா வெளியே ஓடி வந்தார். என் தோளைப் பிடித்து உள்ளே அழைத்துப் போனார். நான் வராந்தாவில் ஷூக்களை கழற்றினேன். ஹாலில் நுழைந்து அப்பாவின் அறைக்குள் சாக்ஸோடு போனேன். எதிர் அறையில் குழுமியிருந்த பெண்கள் ஆவலோடு என்னைப் பார்த்தார்கள். 'வந்தாச்சு, வந்தாச்சு' என்று பேசிக் கொண்டார்கள்.

"ச்சூ, என்ன கூச்சல் அங்க. ஜானகி அங்க இருக்கறவாளை வாய மூடிண்டு இருக்கச் சொல்" பெரியயண்ணா வாசலில் இருந்தபடி அதட்டினான். அவன் அதட்டலுக்கு அமைதியான பெண்களை இன்னொரு கீச்சுப் பெண் குரல் மறுபடியும் அதட்டிற்று.

அப்பா இளைத்து, கறுத்து, மூங்கில் பொம்மையாய் படுக்கையில் கிடந்தார். பினைலும், டெட்டாலும் கலந்த வாசனை மூக்கை அறுத்தது. பல் செட்டை எடுத்திருப்பார்கள் போலிருக்கிறது. முகத்தில் ஒரு கோரம் குழியாய்க் கிடந்தது. கண் இரப்பைகள் வீங்கி இருந்தன. சுவாசம் மட்டும் ஒரு சப்தத்தோடு ஏறி இறங்கியபடி இருந்தது. 'கிளினிக்கலி அலைவ்' என்பார்களே அந்த நிலை.

பாஷ்யம் மாமா அப்பாவிற்கு அருகில் நெருங்கினார். "நம்ம அம்பி ராமானுஜம் வந்திருக்கான், ஸ்வாமிகள் கொஞ்சம் முழிச்சி பாருங்கோ" காதருகே கைகுவித்து இரைந்தார். மறுபடி இரைந்தார்.

மூங்கில் பொம்மை அசைந்தது. வாயைப் பிளந்தபடி கண்களை திறந்து விட்டதில் எதையோ தேடிற்று. எழுபத்திரெண்டு வயசுக் களைப்பு அந்தச் செய்கையில் தெரிந்தது.

"ஸ்வாமிகள், இதோ இங்கேருக்கான் இடப்பக்கம், ராமானுஜம், நம்ப அம்பி ராமானுஜம்" பாஷ்யம் மறுபடி இரைந்தார்.

அந்தக் கண்கள் விட்டதிலிருந்து சுவரைத் தடவியபடி மெல்ல கீழே இறங்கின. என் மீது நிலைத்தன. யாரோ ஒரு அந்நியனாய் என்னைப் பார்த்தன.

"ராமானுஜம், நம்ப அம்பி வந்துருக்கான்."

உணர்வே இல்லாத அந்த பார்வையில் பளீரென்று ஒரு உணர்வு வந்தது. நீர் திரண்டது. நடுங்கிற்று.



இடக்கை அரையடி மெல்ல உயர்ந்து பொத்தென்று விழுந்தது.

பாஷ்யம் மாமா என்னை கட்டிலுக்கருகே நகர்த்தி அப்பாவின் இடக்கையை எடுத்து என் கைகளுக்கு நடுவே கொடுத்தார். நான் பற்றிக் கொண்டேன். பதினெட்டு வருடத்திற்கு முன்பு என் தலைமுடியை இறுகப் பிடித்த இடக்கை இது.

அப்பாவின் தொண்டையிலிருந்து ஒரு கோரமான அழுகை வெளியே வந்தது. வாயோரம் எச்சல் வழிந்தது. குமுறிக் குமுறி ஏதோ சொல்ல, வருத்தப்படுகிறார் என்பதைத் தவிர எதுவும் புரியவில்லை.

"பாழம்...பாழம்" அப்பா யாரையோ கூப்பிட்டார். மாமாவுக்கு அவர் பேச்சு புரியும் போலும். "பாஷ்யந்தானே, இதோ இங்கருக்கேன்" குனிந்து செவிமடுத்தார்.

அப்பா மேலும் ஏதோ குழற "அம்பிகிட்டதானே, நான் சொல்லிடறேன். நிச்சயமா சொல்லிடறேன்" வாக்குறுதி தந்தார். அப்பாவின் இடது கை மிகுந்த சிரமத்துடன் என் கைகளை இழுத்தது. மார்க்கூட்டில் வைத்துக்கொண்டது. பேச்சுக் களைப்பு தாங்காமல் அப்பா இருமத் துவங்கினார். நான் அவர் மார்பைத் தடவிக் கொடுத்தேன். மிகப் பலவீனமான 'லப்டப்' உணர்ந்தேன். அப்பா என்னையே பார்த்து அழுது கொண்டிருந்தார், என் பேண்டிலிருந்து கர்ச்சீப்பை எடுத்து அவர் கண்களைத் துடைத்தேன். வாயோரம் வழிந்த எச்சலை துடைத்தேன். மடித்து மறுபடியும் என் பேண்டில் வைத்துக் கொண்டேன். அப்பா கண்கள் சொருக தூங்கிப் போனார். நான் அவர் மார்பை வருடியபடியே இருந்தேன்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அப்பாவின் அருகிலேயே இருந்தேன். நாணா இரண்டு முறை எட்டிப்

பார்த்தான். யாரோ ஒரு தடிமனான பெண் இடுப்பை அதிகமாக நெளித்தபடி ஒரு டம்ளரை எடுத்துப் போனாள். மறுபடி கொண்டு வந்து வைத்து விட்டுப் போனாள். நிறைய நகைகள் போட்டிருந்தாள். அதீத மாய் வெட்கப்பட்டாள். 'அந்நிய புருஷாளை வெறும எனக்குப் பாக்கிறதுக்குக் கூட பயம்' என்பதாய் அவள் பார்வை சொல்லிற்று. ஆனால் என்னை பார்ப்பதற் காகத்தான் அவள் வந்தாள் என்பதும் தெரிந்து போயிற்று.

இந்த வீடு மாறவில்லை. மாறாது.

அப்பாவின் சுவாசம் வேகமாயிற்று, லபடப்பின் இடைவேளி குறைவது போலத் தெரிந்தது. மூச்சுத் திணறித் திணறி வெளி வந்தது. தொண்டைக்குழி சுழன்று சுழன்று இழுத்தது. கால்கள் விரைப்பாயின. தளர்ந்தன. விரைப்பாயின. தளர்ந்தன. அப்பா கண் களை மலர விழித்து எதையோ தேடினார். மிரண்டார். அழுதார். கண்களில் வெள்ளை கவியத் துவங்கிற்று, 'லப்' என்ற சப்தத்தோடு ஹிருதயம் அமைதியாயிற்று. மூச்சு இரண்டு முறை ஏறித் தாழ்ந்தது. கால்பாதங்கள் கோணலாயின. விழிகள் நிலைக்குத்தின.

கடகட கக்க்க தொண்டைக் குழியிலிருந்து ஒரு சத்தம் வந்தது. அப்பா இறந்து போனார்.

மரணத்தை இவ்வளவு அருகாமையில் சந்திப்பது என் வாழ்க்கையில் இதுவே முதல் தடவை. நான் தால்மாவை நினைத்துக் கொண்டேன். அவளுக்கு இன்னேரம் இது தெரிந்திருக்குமோ? கடிகாரத்தைப் பார்த்தேன். ஊருக்குப் போன பிறகு தால்மாவிடம் இதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

பாஷ்யம் மாமா அப்பாவின் காதில் கைகுவித்து ராம நாமம் சொன்னார். 'கோவிந்த, கோவிந்த' என்று கை கூப்பினார்.



"அம்பி அப்பாக்கு நல்ல கதி கிடைக்கணும்னு ஒரு நிமிஷம் சாமிய வேண்டிக்கோடா. வெளியேருக்க கும்பலுக்கு தெரிஞ்சுடுத்துன்னா அழுகையும் கூச்ச லுமா ஏக ரகளை பண்ணும்."

நான் என் கண்களை தொலை தூரத்தில் விரித் தேன். யாரை வேண்டுவது, என்னவென்று வேண்டு வது? எனக்கும் ஒரு நாள் மரணம் வரும். இந்த மரணம் நிச்சயமெனில், சகலருக்கும் நிச்சயமெனில், வேண்டுவதும் வேண்டாததுமென்ன? சொல்லிக் கொடுத்தவனே தகப்பன் எனில் இது என் தகப்ப னில்லை. எனக்கு பல தகப்பன்கள். என் தாயின் பேர் கூடத் தெரியாத பல தகப்பன்கள். என் தாயின் வயிற்றில் என்னைச் செலுத்தியவனே என் தகப்பன் எனில் அது என் தாய்க்கு மட்டுமே தெரிந்த ரகசியம். நான் அறியவே முடியாத விஷயம். நான் அறிந்த விஷயமாக ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படி நினைப் பவர்களுக்கு தகப்பன் என்பதே கிடையாது. எனக்கு நானே தகப்பன். எனக்கு நானே பிள்ளை. நான் எழுந் தேன். அந்த பிரேதத்தின் கண்களை விரல்களால் வருடி மூடினேன்.

"என்னவோய் பாஷ்யம் என்ன பண்றீர் அங்க" பெரியண்ணா குரல் கொடுத்தான்.

"போய்டுத்து."

வெளியே சலசலப்பு கேட்டது.

"எப்பேய்" பெரிய அண்ணா பெருங்குரலோடு உள்ளே ஓடி வந்தான். உள்ளே கூட்டம் தெரிந்தது. நானும் பாஷ்யம் மாமாவும் வெளியே வந்தோம்.

மயானத்தின் தகரக்கூரை கீழே அப்பாவின் கைவிரல் கட்டை அவிழ்த்தார்கள். கால்விரல் கட்டை அவிழ்த்தார்கள். விறைத்துப் போயிருந்த இரு கைகளையும் இழுத்து முதுகின் அடியில் சொருகினார்

கள். முதுகின் பின்னே மறைக்கப்பட்ட உள்ளங்கைகளோடு அப்பா சிதையில் படுத்திருந்தார். யாருக்கும் எதுவும் தரவே மாட்டேன் என்று சொல்வது போல்எனக்கு தெரிந்தார். வரட்டிகள் அடுக்கப்பட்டன. பெரியண்ணா தீச்சட்டியைக் கவிழ்த்தான்.

'திரும்பி பார்க்காமல் நடங்கோ' என்று சாஸ்திரிகள் கட்டளையிட கூட்டம் மந்தை மாதிரி திரும்பிற்று. நானும் பாஷ்யம் மாமாவும் கடைசியாக வந்தோம்.

நான்கு கார்களிலும் உறவுக்கூட்டம் நெரிய இடம் கிடைக்காது தவித்துக் கொண்டிருந்த இரண்டு பேரை பெரியண்ணாவின் காரில் அமுக்கித் திணித்தார்.

''சௌகரியமா உக்காந்துக்கோங்கோ... கால் கை நசுங்காம இருக்கா? சௌகரியமா உக்காந்துக்கோங்கோ'' கதவை அடித்து மூடினார்,

''பாஷ்யம் உனக்கும் அம்பிக்கும் எடங்கிடைக்கலையா?'' காரிலிருந்து யாரோ கேட்டார்கள்.

''நீங்க சௌகர்யமா போங்கோ! நாங்க நடந்து வந்துடறோம்'' மாமா மறுபடி சொன்னார். உண்மையில் அப்படி நசுங்கிக் கொண்டு போவதைவிட நடந்து போறதுதான் சௌகர்யம். மாமாவும் நானும் நடக்கத் துவங்கினோம்.

''இன்னியோட விட்டுப் போயிடுத்துடா. அம்பி வீட்டுக்குப் போய் உங்கப்பாவுக்கு மட்டுமில்லை, அந்தக் குடும்பத்துக்கும் தலை முழுகிடப் போறேன். அம்பி நான் உங்கூட வந்துருட்டுமா... அந்த சட்டைக்காரி ஒண்ணும் சொல்லமாட்டாளோன்னோ.''

''உங்களை வரக்கூடாதுன்னு சொல்ல எனக்கே யோக்யதை இல்ல... வேற யார் சொல்ல முடியும் உங்களை?''



''இந்த ராட்சஷாளோட இத்தனை வருஷம் இருந்தாச்சு! இனிமே எங்கே இருந்தாலும் சொர்க்கந்தான். எது சாப்ட்டாலும் அமிர்தம்தான். எரிஞ்ச பொகை அடங்கறதுக்குள்ள உங்கப்பா சொத்துக்கு ஒரு சண்டை நடக்கப்போறது பாரு. தெருவே நாறும். நான் எழுதித் தர்ரேன். உனக்கும் பங்கு இருக்குடா அம்பி. நீ என்ன பண்ணப்போறே?''

''பொறுத்திருந்து பாருங்க.'' நாங்கள் நிதானமாய் நடந்து வீட்டுக்குள் வரும்போதே சண்டை துவங்கி விட்டது.

நாணாவும் ஒரு மாப்பிள்ளையும் வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டனர். மாப்பிள்ளை அறைக்குள் ஓடிப் போய் என் தமக்கையை இழுத்து வந்து முதுகில் அறைந்தார்.

'என் தங்கைய நான் வச்சு வியாபாரம் பண்றேன். நீ வெளியே போடா' நாணா அவர் கழுத்தைப் பிடித்து பலங்கொண்ட மட்டும் வெளியே தள்ளினான். மாப்பிள்ளை தரையில் கால் பரப்பி விழுந்தார்.

''வியாபாரம் பண்றது உங்க குடும்பம்டா. பெங்களூர்ல சட்டக்காரிய வச்சு ஒந்தம்பிதான் வியாபாரம் பண்றான். அவனுக்குப் பங்குண்டு. எனக்கில்லையா? அப்பனுக்கு ஒரு வாய் சோறு போடாதவனுக்கு பங்கு. வீட்டோட இருந்தா மாப்பிள்ளைக்கு வேஷ்டிய அவித்துக் காமிப்பேளா ஒள்ளார ஒளிகளா'' தஞ்சை மாவட்டத்தின் சிறப்புமிக்க வசவுகள் தெருவெங்கும் இரைந்தன. மணம் பரப்பின.

வாசலில் நீர்க்குடங்கள் வைக்கப்பட்டிருந்தன. நானும் மாமாவும் தலையில் தெளித்துக்கொண்டோம்.

ராவுத்தர் கடைப்பையனிடம் என் துணிகளைக் கொடுத்தனுப்ப நான் வராண்டாவிலேயே உடை

மாற்றிக்கொண்டேன். உள்ளே ஒரு வக்கில் உரத்த குரலில் உயில் வாசித்துக் கொண்டிருந்தார். என் பங்குங்கு தஞ்சைப் பக்கத்து புஞ்சை வயலும் தென்னந் தோப்பும் ரொக்கம் இருபதாயிரமும் இருந்தன. மாமா வுக்கு ஏதுமில்லை. அப்பாவுக்கு அந்த சமையல் காரனை ஞாபகமேயில்லை.

''அடிச்சாண்டா லக்கி பிரைஸ்'' நாணா பொருமலுடன் கைதட்டினான். எனக்கு வந்தவை முழுவதும் பாஷ்யம் மாமாவுக்கு மாற்றினேன்.

''நாங்கள்ளாம் மனுஷாளா படலையா உங்களுக்கு'' பெரியண்ணா குரல் உயர்த்தினார்.

'இல்லை' என்று பதில் சொன்னேன். மாமா அங்கு சகலருக்கும் கைகூப்பினார். தன் பையை உதறிக் காட்டினார்.

'நன்றி கெட்ட நாயே' நாணா அவரை வழி மறித்தான். அவனை மெல்ல விலக்கி வெளியே அவரை அழைத்து வந்தேன். ராவுத்தரை வணங்கினேன். டால்ஃபின் திறந்து உட்கார்ந்தேன்.

''என்னடா அம்பி... இப்படிப் பண்ணிட்டே'' அதிர்ந்து போய் கேட்டார்.

''மாமா, நான் கார் மெக்கானிக். வயசாகித்தான் செத்துப் போகணும்னு அவசியமில்லை. எங்கேயாவது வழியிலேயும் செத்துப் போகலாம்... உங்களுக்கு ஒரு பாதுகாப்பு வேணுமில்லையா? உங்களை எப்படி அப்பா மறந்தார்? எனக்கு ஆச்சர்யமாயிருக்கு!''

''நாலு வருஷமா உங்கப்பா நெனச்சிண்டிருந்தது ரெண்டே ரெண்டு பேரைப்பத்தி ஒண்ணு நீ.''

''இன்னொன்னு?''

''செல்லம்மா!''



''யாரு மாமா அது?''

இடுப்பிலிருந்து ஒரு பர்ஸை எடுந்து இரண்டாய்ப் பிரித்தார்.

உள்ளே பெருஞ் சிரிப்பாய் ஒரு பெண் போட்டோ இருந்தது. விவசாயக் குடும்பத்து பெண் மாதிரிப் பட்டது.

''யார் மாமா இது?''

''உங்கப்பாவோட வப்பாட்டி. கான்பிடன்ஷியல் கான்குபையன்.'' வாய்விட்டு சிரித்தார். நான் உரக்க விசிலடித்தேன். எனது டால்ஃபின் நடுங்குவதை உணர்ந்தேன். நடுங்கியது டால்ஃபினல்ல; என் கைகள்.

''இவ காசா என் அக்கவுண்ட்ல லட்ச ரூபா இருக்கு. ஒன்னையும் கூட்டிண்டு போய் அவகிட்ட குடுக்கச் சொல்லி எனக்கு உத்தரவு. நானே முழுங்கிடப் போறேனோன்னு உங்கப்பாவுக்கு பயம். அதனால்தான் உங்கையைப் புடிச்சு கொளறி கொளறி அழுதது.''

''இது எப்படி மாமா? வீட்ல யாருக்கும் இது தெரியாதா? எனக்கு காசுவந்ததுக்கே கமறிப்போன பசங்க, இப்படி லட்ச ரூபா போறதுன்னா கொலையே பண்ணிடு வாங்களே.''

''இந்த பாஷ்யத்தைத் தவிர ஒரு பயலுக்குத் தெரியாது. உனக்கு மட்டுமே சொல்லணும்னு...''

''என் மாமா?''

''உனக்கு மட்டுந்தான் இது என்னன்னு புரியுமாம்.'' நான் வாய்விட்டு சிரித்தேன்.

''இது எத்தனை நாளா மாமா?'' உள்ளே ஒரு உவகை பொங்கக் கேட்டேன்.

''நீ ஓடிப்போய் எத்தனை வருஷமிருக்கும்?''

''பதினெட்டு வருஷம்.''

''அப்போ இது பதினெட்டு வருஷ சகவாசம்.''

''என்ன சொல்றேள்?''

''உன்னை என்னிக்கு பெல்ட்டுல அடிச்சாரோ, அன்னிக்கு ஆரம்பிச்ச உறவு.''

நான் கண்களைச் சுருக்கி யோசித்தேன். என் உள்ளே ஒரு அரை நிக்கர் பையன் மூர்க்கமாய் பொய் பேச மறுத்தான் 'நீ டூப்பு, இந்த அம்மா டூப்பு, நான் பொய் சொல்ல மாட்டேனென்று' இரைந்தான். அப்பாவின் முகம் வெளிறியது. ஞாபகம் வந்தது. வெளிறியதற்குக் காரணம் இப்போதுதான் புரிந்தது. நான் வேதனையோடு சிரித்தேன்.

''நாலு வருஷம் முன்னாடி நான் வாயத்தெறந்து கேட்டுட்டேன்... கொழந்தய அடிச்சதுக்கு காரணம், இது தானான்னு கேட்டுட்டன்... உங்கப்பா தலைய குனிஞ்சுண்டு உக்காந்துட்டார். 'மகாபாவி மகா பாவி'ன்னு தலையில் அடிச்சுண்டார்.''

''எதை பாவம்ன்னார் எங்கப்பா? வப்பாட்டி வச்சிருந்ததயா? என்னை அடிச்சதயா?''

''நல்ல கேள்வி கேட்டபோ... டக்குன்னு ரெண்டு நிமிஷத்துல கேள்வி கேட்டுட்டே... உங்கப்பா இந்த கேள்வி கேட்டுக்க எத்தனை வருஷமாச்சு தெரியுமா? தன் காரியத்துக்கு பயந்து கோழைத்தனத்தை மறைச்சுக்க இன்னொருத்தரை பயன்படுத்த வேண்டியிருந்தது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும். உங்கப்பா உறவை இன்னிக்குத்தான் என்னாலே அறுத்துக்க முடிஞ்சது. பதினாலு வயசுல எத்தனை சுலபமா அறுத்துட்டு போனேடா அம்பி! நல்லவேளை இல்லேன்னா நானும் அந்த வீட்ல அடிச்சுண்டுல்லே நிப்பேன்...''



மாமா என் வீட்டைப்பற்றி நிறைய கதைகள்
பேசிக்கொண்டு வந்தார். அவையனைத்தும் சாதாரண
மானவைகள். அப்பாவின் இந்த விஷயம் மட்டுமே
எனக்கு அதிர்வாக இருந்தது.

மறுபடி மறுபடி அந்த பெரிய சிரிப்பு போட்டோ
முகமே மனதில் நின்றது. மாமா என்னோடு ஹோட்ட
லில் தங்கினார். செல்லம்மாவின் வீட்டிற்கு மறுநாள்
அழைத்துப் போவதாகச் சொன்னார்.

என் கனவில் யாரோ பெல்ட்டை எடுத்து அடிக்க
வர, தால்மா சிலுவைக் குறியிட்டே அதை தடுத்து
நிறுத்துவது தெரிந்தது. பெல்ட் வீசப்பட்டதேயன்றி
எனக்கு வலிக்கவே இல்லை. வீசி வீசி சோர்ந்துபோன
அந்த மனிதன் பெல்ட்டை மடித்து தன் முகத்திலேயே
அடித்துக் கொண்டான்.

தால்மா தன் கௌன் ஜிப்பை விலக்கியபடி 'என்
னைக் கட்டிக்கிறியா' என்று கேட்டாள். கௌன்
நழுவித் தரையில் விழுவதற்குள் கனவு கலைந்து
விட்டது.

நான் விழித்து எழுந்தேன். கட்டிலிலிருந்து எட்டி
கவுன் தரையிலிருக்கிறதா என்று பார்த்தேன். கார்
பெட்டில் மாமா அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்.

வெயிலும் புழுதியும் பறக்கிற பத்து மணி பகலில்
தாம்பரம் தாண்டி பெருங்களத்தூர் பாதையில் நுழைந்
தோம். ஊர் எல்லையில் ஓட்டு வீடுகளுடன் ஒரு
குக்கிராமம் இருந்தது. மாட்டு வண்டிகள் போய்
பாதை மேடும் பள்ளமுமாக இருந்தது. மெல்ல உள்ளே
நுழைந்த டால்ஃபினை குழந்தைகள் சுற்றிக் கொண்
டன. நாய்கள் இடைவிடாது குரைத்தன. வீல்
டிஸ்க்கில் முகம் பார்த்து டயரைக் கடிக்க முற்பட்டன.
சாலை முடியும் முன் கடைசி ஓட்டு வீட்டில் மாமா
நிற்கச் சொன்னார். கீழே இறங்கினார். வீட்டின்
உள்ளிருந்து வயதான பெண்மணி ஒருத்தி ஓடி
வந்தாள்.

''சமையலய்யரா, வாங்கோ வாங்கோ'' என்றாள். சிரித்தாள். நெற்றியிலிருந்த பெரிய குங்குமப் பொட்டும் சிரித்தது. காவி படிந்து பற்கள் கருப்பாகி யிருந்தன. அடர்ந்த புருவம். குவிந்த முகவாய். மேடேறிய கன்னம். நல்ல கறுப்பு நிறம். கொக்கின் சிறகாய் நரைத்த தலை. பருத்த கூந்தல் முடிச்சு நடுமுதுகுவரை வந்தது. தோள் சரிவிலும் முழங்கை யிலும் சதைப் பிடிப்புகள் ஆடின. சரிந்த மார்பும், சற்றுப் பருத்த வயிறும், இடுப்பின் அகலமும், இளமை யில் இவள் மிகவாளிப்பாய் இருந்திருப்பாள் என்பதைச் சொல்லின.

நான் கீழே இறங்கினேன். நாய்கள் விலகி ஓடின. வீட்டிற்குள் நுழைந்தேன். எங்களுக்கு முன்னால் நடந்த கிழவி திரும்பினாள்.

''குனிஞ்சு வாங்க. தலை இட்சிரப் போவுது.'' ரேழியைத் தாண்டி முதல் அறைக் கதவைத் திறந்து விட்டாள்.

வெளியே உள்ள வெளிச்சத்துக்கு உள்ளே இருட் டாக இருந்தது இருட்டில் கண் பழக நேரம் பிடித்தது. மேலே தட்டோடு. பூச்சு உதிர்ந்த பச்சை டிஸ்டெம்பர். பிறையில் பெருமாள் படம் சுருட்டி வைக்கப்பட் டிருந்தது. ஒரே ஒரு தடித்த படுக்கை. பழைய கிராம்டன் பேன். கோட் ஸ்டாண்டில் அங்கவஸ்திரம், கைத்தடி. அதற்குப் பக்கத்தில் அப்பாவின் படம் ஹிண்டு பேப்பரில் வெளியாகி இருந்ததை கத்தரித்து சட்டமிடப் பட்டிருந்தது.

என் அப்பா இந்த அறைக்கு வந்து போயிருக் கிறார் என்பதை என்னால் உணர முடிந்தது. இந்த படுக்கை ஒரு வேளை அவருடையதாக இருக்கலாம். அவர் இந்தப் பெண்ணோடு கலந்து முயங்கி இருக்க லாம். மெல்லிய வேஷ்டியும் வெற்று மார்புமாய் இந்த அறைக்குள் உலவி இருக்கலாம். தன் வெள்ளைச் சட்டையை சரிகை அங்கவஸ்திரத்தை, டர்பனை



அதிகாரத்தை, அகம்பாவத்தை, காம இச்சையை மரபுவெறியை இந்த கோட் ஸ்டாண்டில் மாட்டி இருக்க லாம். மௌபரீஸ் ரோடிலிருந்து இருபது மைல் தொலைவில் தன் அடையாளங்களெல்லாம் அழித்து வேறு மனுஷனாய் உலவி இருக்கலாம். எழுபத்தி ரெண்டு வயது வரை அவர் போட்ட எத்தனையோ வேஷத்தில் இங்கேயும் ஒரு தனியான வேஷம் போட் டிருக்கலாம். இந்த கிழவி எங்களை உள்ளே அனுப்பி விட்டு அவள் மட்டும் வெட்கத்தோடு ரேழியிலேயே நின்றாள்.

''சமையலய்யரே, அது ஆருன்னு இன்னுஞ் சொல் லலியே?''

''செல்லம்மா, செத்த உள்ளே வா. உங்கிட்ட முக்யமா ஒண்ணு பேசணும்,''

''என்னன்றீயா செத்த இருங்க. அடி பாக்யம் வூட்டுக்கு மனுஷாள் வந்துருக்குது! கொஞ்சம்வந்துட்டு போடீ'' யாரோ இரண்டு முதிர்ந்த பெண்கள் படியேற கிழவி அறைக்குள் நுழைந்தாள். தலைப்பை போர்த் திக் கொண்டாள்.

''இவர் யார் தெரியுமா? இவருதான் வக்கீலய்யா கடைசி புள்ள. அம்பி ராமானுஜம்னு சொல்லுவோமே அந்த அம்பி.''

''அய்யோ நான் நெனச்சேன். தெரிஞ்ச நடையா இருக்குதே, பாத்த முளியா இருக்குதே. எறங்கச் சொல்லவே நெனச்சேன். உக்காருங்க தம்பி,'' மோடாவை இழுத்துப் போட்டாள். ''சமையலய்யரே நான் கலர் வாங்கியாரச் சொல்லவா? தம்பி சாப்பிடு வாங்களா, எங்க வூட்ல நீ கலர் கூட குடிக்கமாட்ட. தம்பி புள்ள அய்யாவை பாத்து பேசிச்சா. நம்ம அய்யா இதப்பத்தியேதான் பொலம்பிகிட்டுருப்பாரு. அடிச்சிட்டேனே அடிச்சிட்டேனேன்னு அழுவாரு அப்பாவும் புள்ளையும் ராசியாய்ட்டாங்களா.''

''ராசியாற வேளை வந்துடுத்து. ராசியாச்சு.''

''ரொம்ப சந்தோஷமுங்க.'' கிழவி மறுபடியும் கறுப்பு பற்கள் தெரிய சிரித்தாள்.

''செல்லம்மா'' பாஷ்யம் தலையை தடவிக் கொண்டு தவித்தார். ''சந்தோஷமில்லாத ஒரு விஷயம் சொல்லப் போறேன் உனக்கு.''

கிழவி திடுக்கிட்டு தலை நிமிர்ந்தாள்.

பாஷ்யம் மாமா ஆமென்று தலையசைத்தார். ''நேத்துக் காத்தால பத்து பணி இருபது நிமிசத்துக்கு ஒன் வக்கீலய்யா வைகுந்தத்துக்குப் போயாச்சு, சொல்லிட்டு போகலாம்ன்னு வந்தேன்.''

கிழவி நெஞ்சை பிடித்துக் கொண்டாள். தள்ளாடினாள், சுவர் பக்கம் போனாள். சரிந்தாள். உட்கார்ந்தாள். ஒரே வீச்சில் வெள்ளை வெளேரென்றிருந்த தலை முடியின் கோடாலி முடிச்சை உதறினாள்.

''ஐயோ, என் ராசாவே'' என்று பெருங்குரலெடுத்து அழுதாள். மார்பிலடித்துக் கொண்டாள். வெளியே இருந்த பெண்கள் உள்ளே ஓடி வந்தார்கள். அவள் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள். அந்தக் கிழவி நாணம் விட்டாள். எங்கள் இருப்பை மறந்தாள். புடவைத் தலைப்பு சரிய கால்கள் நீட்டி தலையிலறைந்து வீறிட்ட குரலில் கதறினாள். தவழ்ந்து நகர்ந்து சுருட்டி வைக்கப்பட்டிருந்த படுக்கையை அணைத்துக் கொண்டாள். அதை இறுக்கி அதில் முகம் தேய்த்தபடி குலுங்கி குலுங்கி அழுதாள். அவர் உபயோகித்த பொருள்களையே அவராய் நினைத்துக் கொண்டு பேசினாள்.

## 5

வைப்பாட்டி செல்லம்மாளுக்கு வக்கீல் வரதாச்சாரியின் நினைவு என்பது இந்தப் படுக்கைதான். கோவிலோ, குளமோ, தாலி கட்டிக்கொண்ட கல்யாண மண்டபமோ. மங்கள நாணோ, அவர் வாதாடிய கோர்ட்டோ. ஆபீஸ் பைல்களோ, பேனாவோ மைக் கூடோ, கறுப்புக் கோட்டோ எதுவுமில்லை. அவர் நினைவுச் செல்வம், சில பொருட்களில் அதிகம் பேசுவது இது மட்டுந்தான். இங்கு தங்கிய நேரங்களில் அவர் அதிகம் இருந்தது இந்தப் படுக்கையில்தான். படுக்கையில்தான் படுக்கமாத்திரமே புருஷன் என்பது, படுக்கையில் இருந்ததை மட்டுந்தான் நினைவு கூற முடியுமென்பது கொஞ்சம் வேதனையான விஷயம் தான். தன் புருஷனின் மற்றைய குணங்களை சிலாகித்துக் கொள்வது போல, அவனின் படுக்கை குணாதிசயங்களை ஒரு பெண் சொல்ல முடியுமா? பகிர்ந்து கொள்ள இருப்பது படுக்கை அனுபவம் மட்டுந்தான். பகிர்ந்து கொள்பவளுக்கு வெட்கத்தை விடுவதைத் தவிர வேறு விமோச்சனம் இல்லை.

அறைக்குள் நாற்பது ஐம்பது பேர் அடைந்தார்கள். அதில் அநேகம் பேர் பெண்களாயிருந்தார்கள். என்னைப் பற்றி பாஷ்யத்திடம் விசாரித்தார்கள். அறிந்தவுடன் ஆரவாரமாய் அழுதவர்கள் எல்லாம் அடங்கி அழுதார்கள். கலைந்து கிடந்த செல்லம்மாவை நிமிர்த்தி வைத்து சரி செய்தார்கள். மறுபடி கைகள் விரித்து துணி சரிய அழுத செல்லம்மாவை அவள்வயது ஒத்த ஒரு முதியவள் அதட்டினாள்.

''எக்கா...போதும், வேத்து ஆளு இருக்கச்சொல்ல ஆவுன்னு ஆடாத. இஸ்த்து சொருகு தலப்ப. கால் மடக்கி குந்து சொல்றேன்.''

''நான் இனி எவனுக்கடி கால் மடக்கணும்'' செல்லம்மாள் பெரும் குரலில் பிளிற,

''த்தே... கூவாதே, அய்யர் மாரு ஊட்டு சாவுக்கெல்லாம் இப்படி அடிச்சுக் கத்திச் செய்யமாட்டாங்க.

கெத்தா இருன்னா... கெத்தா இரு. வெவரம் புரியாத பொம்பள மாதிரி ஆடாத நீ. கூவுறதப் பாத்துட்டு சேன்னு போயிடப் போறாங்க வந்தவங்க.''

அழுவதும் சிரிப்பதும் மனிதரின் அடிப்படைஉரிமைகள். எதற்கு எந்நேரம் எவ்விதம் என்றெல்லாம் அங்கு கேள்விகளே இல்லை. பிறரின் சிரிப்பையோ அழுகையையோ நான் தடுப்பதேயில்லை. அழுது முடிந்தபிறகு தான் சமாதானம் செய்ய ஆசை வருமேயொழிய, ஒருவர் அழுவதற்கு நான் இடைஞ்சல் செய்ததேயில்லை.

ஆனால் செல்லம்மாளுக்கு அவள் ஸிநேகிதியின் இடிப்புரை உறைத்துவிட்டது போலும், அல்லது தனது அழுகையை எப்போது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்; வந்தவர்களை கவனிக்க வேண்டுமென்று ஆசை எழும்பியிருக்க வேண்டும். நிமிர்ந்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''நிக்கிறிங்களே உக்காருங்க தம்பி'' என்று என்னைப் பார்த்துக் கூறினாள்.

''அப்பாரு உசிரோட இருக்கச்சொல்லியே பார்த்தீங்களா... நீங்க கூட இருக்கச்சொல்லதான் உசிரு போச்சா'' மூக்குறிஞ்சலுடன் கேட்டாள்.

பாஷ்யம் விவரமாய் சகலமும் சொல்ல, கூர்ந்து கவனித்தாள்.

''எப்பா... புண்ணியவான் அது வொண்ணுதான் ஆசைன்னு எங்கிட்ட அடிக்கடி சொல்வாரு. அம்பிய பாத்துட்டு சாவணும்னு சொல்லிக்கினுருப்பாரு. கடேசி கடேசியா அல்லாரண்டையும் புடிப்பு வுட்டுப்போச்சு. எல்லா விஷயத்துலயும் ஒதுங்கி வந்துட்டாரு, அம்மா செத்தபோது ஒன்னக் கட்டி புடிச்சுட்டு அழணும்னு நெனச்சாராம். அம்பி சட்டக்காரச்ய வச்சிக்கினுருக்கான் கிட்டசேத்தா, அவளையும் இட்டாந்துருவான்.



நாலு பேருக்கு முன்னாடி அவமானம் அதனாலே தொலைவிலே நில்லு. நாங்க பேசி திருப்பி அனுப்பிச்சிர்ரோம்னு, பசங்க மொத்தமும் சொல்லிச்சாம். மூத்த மாப்பிள்ளைதான் ரொம்ப ஆடுனாராம்; முடியாதுன்னு ரேங்கி பண்ணா, அவனை பாக்கவே ஒட்டாது பண்ணிடு வாங்களோன்னு பயந்தேன்; ஒட்டாத மாதிரி நடிச்சேன். வெள்ளைக்காரன் மாறி இருக்காண்டி அம்பி. அசப்புல என் சின்ன வயது போட்டோ மாதிரி இருக்கு. சொல்லி சொல்லி அழுதார் எங்கிட்ட. அம்மா போன பதினைஞ்சா நாள் வந்துட்டார் இங்க. அம்மா செத்ததுக்கு எட்டு நூறு ரூவா செலவு பண்ணி இங்கேயே படையல் போட்டோம். ஊர் முழுக்க கதம்ப சோறு சாப்பிட்டது. சமையலய்யரே இங்கித்து மானுஷள்ட்ட சொல்லிட்டுப் போறீயா, அய்யாசெத்து போனதுக்கு இன்னா செய்யணும்? என்னிக்கு செய்யணும்னு சொல்லிட்டுப் போறீயா? அய்யருக்குப் புடிச்சதெல்லாம் இன்னான்னு எழுதிக் குடுக்கறயா? அய்யா மனசு குளுர குளுர படையல் போடணும். யார் கை நீட்டினாலும் இல்லேன்னாத குடுக்கணும். பெரிய துட்டு ஆறு ரூவா வச்சிருக்கேன். அத்தினியும் செலவானாலும் சரி, எங்கையால படையல் போடணும்.''

''ஆறாயிர ரூபாய்க்கா? அடக் கூறுகெட்டவளே?'' சிநேகிதமாய் வந்தவள் மீண்டும் இடித்தாள்.

''பாக்கியம், நீ சும்மாரு. உம் மருமக கொண்டாந்ததை நீ சீராடினா மாதிரி, நான் ஒன்னும் ஆடிடலை. எங்கிட்டருக்க துட்டு மொத்தமும் அய்யா குடுத்த துட்டு. ஆரு துட்டோ எடுத்து குடுத்திரலை, அய்யா குடுத்த துட்டு, அய்யாவுக்கே போகட்டும்.''

''இன்னும் முடிச்சிக் கட்டினா திரியற? உனக்கும், போற காலம்தானடி? உங்கொள்ளிக்கு நாலு காசு வச்சுக்க மாட்டியா?''

‘ஆரு இல்லேன்னு சொன்னா. எனக்கு கொள்ளி போட்டுட்டு எந்துட்டுக்கு அடிச்சுக்கவா? நன்னி உள்ளவன் நாலு பேரு இந்த ஊர்ல இருக்கமாட்டானா? கைமாத்து வாங்கி மறந்து போனவன், புள்ளை பொறப்புக்கு கடன் கேட்டவன், பரிச்சைக்கு பணம் கட்ட கையேந்துனவன் நாலுபேர் தேறமாட்டானா? கட்ட வண்டியிலே எடுத்துக்கினு போய் கொள்ளி போட மாட்டானா? என்னிக்கிருந்தாலும் என் கொள்ளி கோய்ந்தா கொள்ளிதான். என்ன வுடுறீ'' பேசியவளை மெல்ல பின்னுக்குத் தள்ளினாள்.

''ஒண்ணும் பெரிசா செய்ய வேண்டாம் செல்லம்மா, அதுக்கு ஆளிருக்கு, நீ எதுக்கு கஷ்டப்படற?''

''ஆளில்லாத போச்சுன்னா செய்யறேன்? அது அரச பரம்பரை. ஆளு, அம்பு, சேனை படை எல்லாம் இருக்கும். என் கடமைக்கு நான் செய்ய வேண்டாமா? எனக்கும் எச்சல் இருக்குதுல்ல? என் தீட்டும் நான் கழிக்கணும் இல்ல? எனக்கு நெஞ்சடைக்கச் சொல்ல என்னைத் தேடிக்கிட்டு எங்கய்யா வரணுமில்ல? தப்பிப் போய் இந்த பொறப்புல வப்பாட்டியா நின்னுட்டேன். இனி நான் எடுக்கற ஜென்மமெல்லாம் எங்கூடயே என் பொண்டாட்டியா இருன்னு சொல்லணுமில்ல?படையல் போடுறது ஊர் சந்தோஷத்துக்கா? செத்தவங்க போய் சௌக்கியமா இருக்கணுமில்ல? எந்த லோகத்துலயும் சாப்பிட ஒண்ணுமில்லையே, குடிக்க தண்ணியில்லையேன்னு ஆளுதிரக் கூடாதில்ல? எனக்கு எத்தினி ஆயிரத்துக்குச் செய்திருக்காக. இதுங்கூட செய்யாட்டி என்னாடி?''

''அப்போ படையலுக்கப்புறம் அக்கா பொட்டழிச்சிருமா?'' இளமை முடிந்து முதுமைக்கு நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு பெண் கேட்டாள்.

''நான் ஏண்டி அழிக்கணும்? கட்டிக்கிட்டவளா நானு? அவங்க வச்சிக்கிட்டவதான...? சாவுற மட்டும் நான் கன்னிப் பொண்ணுதான். நான் கோத்துக்கவும் வேணாம். அறுத்துக்கவும் வேணாம். அவங்க ஆசைக்கு கடன் பட்டவளேயொழிய, ஆஸ்தியிலே பங்கு கேக்க முடியாது, ஆஸ்தில மொறமையில்லாதவ அறுக்கவும் வேணாம். அழிக்கவும் வேணாம்.''



''இது எந்த ஊர் மொறமையோ தெரியலே எனக்கு'' எவளோ முணுமுணுத்தாள்.

''எல்லா மொறமையும் ஊருக்கு ஊர் மாறும். ஊட்டுக்கு ஊடு மாறும். வச்சிக்கிட்டவ புள்ள பெத்துக்கிடற மொறம கூடத்தான் உண்டு. நான் பெத்துக்கிட்டேனா.. கூடாதுணுட்டார் அய்யா. நா வாழாதயாகிட்டேனா.. நான் வாரந்தவறாம வாழ்ந்தது இங்க இருந்தேன். நான் வாரந்தவறாம வாழ்ந்தது இங்க எல்லா பொம்பளைக்கும் தெரியும். நாந்துண்ணபப்பாளி எனுக்குத்தான் தெரியும்.''

''இந்தா சனியனுகளா, செத்தவூட்ல உக்காந்து பேசுற பேச்சா இது? புருஷன் போய்ட்டான்னு அழற வட்ட போய்க்கிட்டு பொட்டழிப்பியா, பொடவிய அவிப்பையான்னு...! எழுந்து போங்கடி கூறுகெட்டது இத்தினிகளா. ரெண்டு ஆம்பளை நிக்க கொல்லவே... இத்தினி பேசுறாங்களே இல்லாது போனா என்னமெல்லாம் பேசுவீங்க...'' யாரோ வாசலில் ஒரு ஆண் குரல் கேட்டது.

''பாக்யத்தக்கா, உங்காம்பளதான் தெருவுல நின்னு கூவுது. பொழுது விடிஞ்சா நீ ஒன் தோள்பட்டையில், மூஞ்சியில இடிச்சிக்கிறது அதுக்கு தெரியாதாங்காட்டியும் ரூமுல இன்னா பேசறாங்கன்னு தெருவுக்கு தெரியணுமில்ல, அதான் வாசல்ல நின்னு ஒரக்க பேசுதாரு.''

''இந்தா சின்னப்பொண்ணு. பொடரில போடுவேன். வேத்தாள் முன்னாடி ஏதாவது ஏடாகூடமா பேசிக்கிட்டு'' மறுபடி ஆண் குரல் அதட்டிற்று.

''உன்னால முடிஞ்சா உன் பொண்டாட்டி பொடரியிலேயே போடு. ஊர்ல இருக்கற பொட்டக்கோழிக்குக் கூட உஞ் சமாச்சாரத்தை சொல்லி அழுதுருக்

கிறா'' அதற்குப் பிறகு அந்த ஆண் குரல் எழும்பவே
யில்லை.

இந்த பேச்சுக்கள் அனைத்தும் எனக்கு வியப்பாய்
இருந்தன. உள்ளூர ஓடும் ஒரு சூட்சுமம் இலைமறை
வான விஷயம் என் புருவங்களைத் தூக்கின. அதை
விட ஆச்சர்யம் மூன்று நிமிடத்தில் தன்னை சுதாரித்துக்
கொண்ட செல்லம்மா,

பாஷ்யம் செல்லம்மாவோடு தனியே பேச வேண்டு
மென்று விரும்பினார். ஒரு மணி நேரம் கழித்து வரச்
சொன்னார். அப்பாவின் காசு செல்லம்மாவின் பங்
காக லட்ச ரூபாய் தன்னிடம் இருப்பதைச் சொன்னார்.
எந்த பாங்கில் போட வேண்டும். யாருக்கெல்லாம்
தெரிய வேண்டும் என்று கேள்வி கேட்டார். அப்பா
தலையணைக்குக் கீழே வைத்திருந்த பர்சையும்
அதிலுள்ள அவள் இளமைக்கால போட்டோவையும்
அவளுக்குக் காட்டினார்.

செல்லம்மா பர்சை வாங்கிக் கொண்டாளே தவிர,
லட்ச ரூபாய் பற்றி எந்த பிரக்ஞையுமில்லாமலிருந்
தாள். மீண்டும் வற்புறுத்தி 'அதை என்ன செய்ய
வேண்டும்' என்று கேட்டபோது. ''எனக்கெதுக்கு
அய்யரே அத்தனை துட்டு? தம்பிகிட்ட குடுத்துரு. நீ
வேணா கொஞ்சம் எடுத்துக்க.'' அந்த பர்ஸ் மீதே
கவனமாயிருந்தாள்.

பணத்தின் மதிப்பு புரியாமல் பேசுகிறாளோ என்று
கவலைப்பட்டேன். ''உங்களுக்கும் வயசாயிருச்சுங்
களே அம்மா'' மெதுவாய் ஆரம்பித்தேன். என் முதல்
பேச்சுக்கு முகம் மலரத் திரும்பினாள்.

''அம்மான்னு கூப்பிட்டீங்களா? என்னத்தான்
சொன்னீங்களா? அய்யர் எங்கிட்ட வந்து...உக்கா
ரய்யா...உங்களை நான் தொட்டுப் பார்க்கலாமா என்
ராசா பெத்த புள்ளையாச்சே. உன்னைத் தொட்டு
நெட்டி முறிஞ்சு போடலாமா? நான் தாழ்ந்த சாதி
பொம்பளதான்யா. ஆனா உங்கப்பாரு என் கிட்ட



சந்தோஷமா இருந்தாரே உலகத்துலேயே இந்த
இடம்தாண்டி சொர்க்கம்ன்னு இந்த ரூம்பு பத்தி பேசு
வாங்க. அவுக மனசுநோக நான் நடந்ததில்லைய்யா.
நான் செத்தாலும் வீட்டு பக்கம் வரப்படாதுன்னு
சத்தியம் வாங்கிட்டாக. யாரு தன்னைப் பற்றி கேட்
டாலும் தெரியாதுன்னு சொல்லணும்னு சொன்னாக.
இந்த ஊரையும் அப்படி கட்டுப்பட வச்சாங்க. நாலு
வருஷம் முன்னாடி உங்க அம்மா செத்து போன
பெறவு என்ன நெனச்சாங்களோ தெரியல. உன்
பேரை சொல்லி அவங்கிட்ட சொல்லிவிட்டுபோறேன்.
அவன் உன்னை புரிஞ்சுக்குவான்னு சொன்னாரு
உங்கய்யா. உங்கப்பாரு சொன்னபடியே செஞ்சுட்
டாங்க. நீங்களும் அம்மான்னு கூப்பிடறீங்க. இதவிட
லட்ச ரூபா பெருசாய்யா எனக்கு?''

''காசு மனுஷங்களுக்கு வேணுமில்ல?'' நான்
மறுபடி வற்புறுத்தினேன்.

''உங்கய்யாவை தெரிஞ்ச பெறகு எனக்கு காசுக்குப்
பஞ்சம் இல்லை. சோத்துக்கோ, துணிக்கோ கஷ்ட
மில்லை. இந்த நாலுகட்டு வீடு எம்பேர்ல எழுதிருக்
காக. மொதக்கட்டு என்னுது. மிச்ச மூணு கட்டும் குடித்
தனம். முந்நூறு ரூபாய்க்கு கொறைவில்லை. எட்டு
பவுன் சங்கிலி வெள்ளித்தட்டு, வெள்ளிச் செம்பு, பீரோ
நிறைய பொடவை அத்தினியும் நாங் கேக்காதயே
வந்தது. தெருக்கோயில் தாண்டி வேற எங்கியும்
நான் அய்யாவோட போனதில்லையே தவிர, வேற
எந்தக் குறையும் எனக்கு வச்சதில்லை. அய்யா இனி
வரமாட்டாங்கன்னு அவர் கடைசியா படி இறங்கின
போதே எனக்கு தெரிஞ்சு போச்சு...கார்ல உக்காந்த
தும் டக்குன்னு கௌம்பிடுவாங்க. அய்யா, அன்னிக்கு
மட்டும் ரொம்ப நேரம் கார்லேயே உக்காந்துட்டிருந்
தாங்க. ஒன்னத் தனியா விட்டுட்டு போறண்டி
செல்லம்ன்னாங்க! என்னிக்குமே நான் தனியா இருந்த
தில்லைய்யா, உன் பேரச் சொல்லிக்கிட்டுத்தான்

இந்த ஊர் முழுக்க திரியறேன்னு சொன்னேன். அய்யா அழுதாங்க சீட்டுல சாஞ்சிக்கிட்டே. அன்னிக்கு தெரிஞ்சு போச்சு. உங்கய்யாவ இனி பார்க்க மாட்டோம்னு.''

''ஒதுங்கி இருந்த டிரைவரைக் கூப்பிட்டு வண்டிய எடுக்கச் சொன்னார். வண்டி கிளம்பிச் செல்ல எனக்கு வயிறெல்லாம் பரபரன்னுது. யாரோ தொண்டயப் புடிச்சு அமுக்கற வேதனை. உடம்பு மொத்தமும் ஒரு நாய் விழுந்து புடுங்கறா மாதிரிஒரு வேதனை. மண்ணு பறக்க போற வண்டியவே பாத்துக்கினு நிக்கிறேன். அய்யான்னு மறுபடி கூப்பிடணும்னு ஆசை. ஆனா. போறவங்களை எப்பிடி தடுக்கறது புரியல. உள்ளேர்ந்து வேலைக்காரப் பொண்ணு அங்கவஷ்திரம் எடுத்தாந்தா! அய்யா இத வுட்டுட்டுப் போய்ட்டார்ன்னு சொன்னா. அத எடுத்துக்கிட்டு வண்டியை ஓடிப்போய் தடுத்திரலாம்ன்ற மாதிரி நான் எட்டு வச்சேன். முடியலை. பொட்டுன்னு நெத்தி இடிச்சிக்கிறா மாதிரி தெலத்துல வுழுந்திட்டேன். போறவங்களுக்கு நமஸ்காரம் பண்றா மாதிரி ஆயிப்போச்சு. எனக்கே நான் தடுக்கி விழுந்தது அச்சானியமாப் பட்டது. அன்னிலேர்ந்தே காத்துட்ருக்கேன். எனக்குத் தெரியும் முந்தாநா ராத்திரி ஒரு கனா எங்கய்யா நாலைஞ்சு அய்யருங்க பின்னாடி துண்டு போத்திக்கிட்டு லெறுங்காளோட போறா மாதிரி! கூப்புடக் கூப்புட திரும்பியே பாக்காம போறாமாதிரி. பொறண்டு எழுந்தேன். என் கையழுத்தியே என் பொடவத் தலப்பு டாராக் கிழிஞ்சு போச்சு. நேத்து வரைக்கும் ஆள் யாரும் வாராது போகவே. சரி ஒண்ணும் இருக்காதுன்னு நெனச்சிட்டேன். அய்யா இப்படி நேவுல செத்துருக்க வேணாம், பொட்டுன்னு போயிருக்கலாம். எரிஞ்சத பாத்தீங்களா, ரொம்பபுண்ணியமாச்சே அது. அந்த தகதகப்பை பாக்க நமக்குள்ளேயே ஒரு ஜோதி வந்துருமே. எனக்குத் தெரியாது.



இதுகூட அய்யா சொல்லித்தான் தெரியும். அய்யா அவங்க அப்பா செத்தது பத்தி, அப்போ செய்த சடங்கு பத்திவெவரமா எங்கிட்ட பேசியிருக்காரு. காத்துகருப்பு அண்டாதுஇருக்க எனக்கு ஏதாவது மந்திரம் சொல்லித் தாங்களேன்னு கேட்டேன். அய்யா இந்த தொளசி மாலை வாங்கிக் குடுத்தார். ராமாராமான்னு சொல்லிக்கிட்டிரு. அதவிடப் பெரிய மந்திரம் எதுவுமில்லேன்னார்.''

ஷவர் திறந்த குளுமையாய் உடம்பு முழுவதும் வழியும் நீராய் முதுகுத் தண்டிற்குள் நடுங்கும் குளிராய் ஒரு உணர்வை நான் அடைந்தேன்.

''ஆம்பள இல்லாத வூட்டை காசு காவல் காக்கும்னு நெனச்சீங்கன்னா அது தப்பு. அதுதான் காட்டிக் குடுக்கும். ஒலகத்துலயே ரொம்ப கெடுதல் எதுடான்னு கேட்டாங்களாம். அதுக்குப் பதிலா ரெண்டு விஷயம் சொல்வாங்களாம். 'மொதல் கொடுமை வறுமைன்னாங்களாம்... அதவிட கொடுமை வயசு காலத்து வறுமைன்னாங்களாம்! எங்கய்யா மூணாவது ஒண்ணு சொல்வார். எல்லாத்தையும் விட கொடுமை வயசு காலத்துல வர்ற செல்வம்தான்னு. வர சித்திரை வந்தா எனக்கு அம்பத்தேழு வயசு. ஏற்கனவே தூக்கம் போச்சு. விடியற் நேரத்துல அசந்தாத்தான் உண்டு. இத்தினி காசை பீரோவில் வச்சிட்டு நான் எப்படி தூங்கறது?துணி தொவைக்கிறது? பீரோக்கடியிலேயே தூங்கி பீரோக்கடியிலேயே துன்னர ஊருக்குள்ளாற இருக்கறவனே அடிச்சுப் போட்ருவான்! ஆரு அடிக்கிறானோ இல்லையோ அண்ட அசலு மோர் வாங்க வந்தாக்கூட அடிக்க வர்றதாப்படும். எனக்கு அந்தக் காசு வேணாம், தம்பி, நீ எடுத்துக்க.''

சுத்தமாய் மறுத்துவிட்டாள். அவள் பேச்சிலுள்ள நியாயம் எனக்குப் புரிந்தது. அன்று முழுக்க அங்கு தங்கினேன், அப்பாவைப் பற்றிப் பல கதைகள் கேட்டேன்.

என் விலாசத்தை தமிழில் எழுதிக் கொடுத்துவிட்டு இருட்டுகிறபோது என் டால்ஃபினில் பாஷ்யம் மாமாவுடன் கிளம்பினேன். போகுமுன் அப்பாவின் படையலுக்காக என் காணிக்கையாக ஆயிரமும் கொடுத்தேன். படையலில் பங்குபெறுவதைவிட இவள் அன்பில் பங்கு பெறுவது எனக்குப் பிடித்திருந்தது. அப்பாவின் இந்த ரகசியத்தைப் பரிமாறிக் கொள்ள தால்மாவைத் தவிர எனக்கு வேறு ஆளில்லை.

உன் அப்பாவும் தவறு செய்திருக்கிறாரென்ற குதூகலம்தானே உனக்கு, தால்மா குத்திக் காட்டினாள். மறுத்தேன். இது தவறேயில்லையென்று தோன்றுகிறது.

''தால்மா, அந்த பெண்மணியை நீ சந்திக்க வேண்டும். இருபது வயதில் அந்தப் பெண் என்ன அழகாயிருந்திருப்பாள்.'' நான் மீண்டும் மறுத்தேன்.

''உன் அம்மா வயசு கிழவியிடம்கூட செக்ஸைத்தான் பார்க்க முடிகிறதா உனக்கு?'' தால்மா மறுபடி சீண்டினாள். நான் மீண்டும் மறுத்தேன்.

''ஆண்களுக்கு செக்ஸ் மிகப்பெரிய ரிலாக்சேஷன் என்பது நிறைய பேருக்குத் தெரியவில்லை, தால்மா. நாற்பது வயது அப்பாவை அந்தப் பெண் ரிலாக்ஸ் செய்திருக்கிறாள். அமைதிப்படுத்தி இருக்கிறாள். ஒளிவு மறைவான தொடர்பு என்றாலும்கூட, அங்கேதான் வயதானபோதும், ஒடுங்கி தளர்ந்த போதும் அப்பாவால் அங்கு போவதை நிறுத்த முடியவில்லை.''

''உனக்கு வயதானாலும் என்னைத்தேடி வருவியா ராம்?''

''அது உன்னிடம்தான் இருக்கிறது, தால்மா. ஆளுமையற்ற உன் ஸ்நேகிதத்தில் இருக்கிறது.''



''ஆளுமை செய்துவிடுவேன் என்றா ஓடிவிடுகிறாய்? ஆளுமை எனக்கு பிடிக்கும். என்னை நீ பரிபூர்ணமாய் ஆளுமை செய்ய வேண்டும் என்பதே என் விருப்பம். நான் ஆளுமை செய்யக்கூட எனக்கு விருப்பமில்லை. முதலில் என்னை ஆளுமை செய்ய அனுமதித்துவிட்டு பிறகு ஆளுமையை உன் வசமாக்கிக் கொள்ளலாம். நான் அடங்கும்போது உன் ஆளுமை அதிகரிக்கலாம். அடக்கவும் வேண்டாம், அடங்கவும் வேண்டாம் என்பதே என் எண்ணம், நீ ஒரு கோழை, ராம்.''

''ஏன் தால்மா?''

''எதிர்காலம் பற்றி இத்தனை கவலையோடிருப்பவனை வேறென்னவென்று சொல்லியழைப்பது? நீ சொன்ன அந்த செல்லம்மா இந்த கவலைக்கு உட்பட்டிருந்தால் அவள் வாழ்க்கை எத்தனை சிரமமாக இருந்திருக்கும்? உன் அப்பாவின் பிரிவையும்,மரணத்தையும் அவள் எவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொண்டிருக்கிறாள்!''

''தால்மா, அதற்கு அடிப்படை அன்பு.''

''நான் உன்னிடம் அன்பாக இல்லையா, ராம்?''

''உன் அன்பு எனக்குப் புரியவில்லையோ என்னமோ?''

''புரிந்தும் புரியாதது போல் நடிக்கிறாயோ என்று தோன்றுகிறது.''

''இருக்கலாம். எனக்குக் குழப்பமாக இருக்கிறது. என்னைச் சற்று தனியே விடு.''

''விடமாட்டேன்.''

''ஏன்?''

''எனக்கு ஆளுமையில் விருப்பம் வந்திருக்கிறது.''

''என்ன காரணம்?''

"உனக்கு ஆளுமையில் விருப்பம் இல்லையே அதனால் இருக்கலாம்."

"என்ன செய்யப் போகிறாய் இப்பொழுது?"

"ஆளப் போகிறேன்."

"சரி."

நான் விட்டுக் கொடுத்தேன். நான்கு நிமிடத்திற்கு மேல் மௌனம் முடியவில்லை. மனசை மீறி உடம்பு கிளர்ந்து விடுகிறது. அவளை மல்லாக்கப் போட்டு புரட்டி நெருக்கியவுடன் வாய்விட்டு சிரித்தாள்.

"நீயா ஆளுமை பிடிக்காதவன் திருடா?" என்றாள்.

ஆசைப்பட்டாள் ஆளுமைக்கு உட்பட்டாள். மனசும் உடம்பும் மனிதனின் பெரிய முரண்கள். பசி வந்திட பத்தும் பறந்துபோம் என்பது இந்த முரணைப் பற்றிய முதிர்ந்த வாக்கியம். மனிதனின் ஞானம், அவை அடக்கம், அன்பு, தயை, பெருங்கருணை, ஈகை, அறிவுக் கூர்மை, ஞாபக சக்தி இன்னபிற எல்லாம் ஒரு சாண் வயிற்றிலடக்கம், சிறுகுடலை பெருங்குடல் கவ்வித் தின்ன பசி நெருப்பு எரிய இவையனைத்தும் பறந்து போகும். எண்சாண் உடம்புக்கு வயிறே பிரதானம். வயிற்றிலிருந்து ஒரு சாண் தள்ளி இன்னொரு பசி. சே, என்ன மோசமான படைப்பு மனிதன். அவன் நாகரீகத்தை உடைக்க அவனுக்குள்ளேயே எத்தனை விஷங்கள்! இந்த விஷத்தோடும் எவ்வளவு பெரிய போராட்டம். பாவம் மனிதர்கள். என் அப்பாவும் மனிதர்தான். நான் அவரை அலட்சியப் படுத்தியது கூட தவறுதான். நான் அவரைவிட்டு ஓடி வந்தது பிசகுதான். ஒருவேளைகூட இருந்திருந்தால் இந்த யோசிக்கிற அமைதி எனக்குக் கிட்டியிருக்காது.

ஒருக்களித்து படுத்துக்கிடந்ததால்மாவின் நெஞ்சுக்குள் முகத்தைப் பதித்துக் கொண்டேன். தால்மா



என் தலையைக் கோதி, நெற்றியை வருடி தூக்கத்தில் ஆழ்த்த முயற்சி செய்து கொண்டிருந்தாள். வருட வருட தூக்கம் என்னைப் போர்வையாய் மூடிக் கொண்டது.

தூக்கத்தில் செல்லம்மா படையல் போடுவது போல ஒரு காட்சி வந்தது. ஊர் முழுவதும் அந்தப் படையல் திண்பண்டங்களுக்காக கையேந்தியது. நானும் கையேந்தினேன். நீட்டிய என் கை மீது செல்லம்மா ஒரு அங்க வஸ்திரத்தைப் போட்டாள். அது அப்பாவின் அங்கவஸ்திரம். விடிந்த பிறகு என்னால் பெங்களூரில் இருக்க முடியவில்லை.

ஒரு மணி நேரத்திற்குள் என் டால்ஃபினை முழுவதுமாக சோதிக்கும்படி வற்புறுத்தினேன்.

ஆறு மணி நேரத்தில் தாம்பரம் தொட்டேன். செல்லம்மாவுக்கு என்ன வாங்கிப் போவதென்று தெரியவில்லை. வயதானவர்கள் உடுத்துவது போல சென்னையிலேயே இரண்டு பட்டுப் புடவைகள் வாங்கினேன்.

அன்றைக்குத்தான் படையல் நாளாம். மூன்று நாள் துக்கம் போதுமென்று சொல்லிவிட்டார்களாம். ஒரு நல்ல நாளாகப் பார்த்து படையலுக்கு ஏற்பாடு செய்தார்களாம். கோவில் வாசலில் கல் நட்டு, அதற்கு மஞ்சள் குங்குமம் பூசி, விதம் விதமாக பலகாரங்கள் செய்து நுனி வாழையிலையில் பரிமாறி இருந்தது. காகங்களுக்குக் கொஞ்சம் காரியம் செய்த அய்யருக்கு கொஞ்சம். முதிர்ந்த சுமங்கலிக்குக் கொஞ்சம் முறைப்படி வழங்கிய பின்னர், ஊர் முழுக்க பலகாரங்களும், கதம்ப சாதமும் விநியோகமாயிற்று.

நான் புடவையை நீட்ட, செல்லம்மா நடுங்கும் கைகளுடன் அதைப் பெற்றுக் கொண்டாள்.

"உடம்பொறந்தாரு இந்த மரியாதை செய்வாங்க. உடம்பொறந்தாரு யாரும் இல்லாட்டி பெத்த புள்ளைக

செய்வாங்க. நீ செய்திருக்க ராமு'' விழி நீரை துடைத்துக் கொண்டாள்.

ஊர்க் கூட்டம் விருந்து நிறைவால் பாராட்டிப் பேச, உடுக்கை அடித்து கதை சொல்லுவதற்கும், உட்கார்ந்து கேட்ட சில பெரிய மனிதர்களுக்கும், சாராயத்திற்கு காசு கொடுத்தாள்.

இரவு கவிய நானும் ஸ்காட்ச் விஸ்கியை வெளியே எடுத்தேன்.

''நானே பிராந்திக்கு சொல்லலாம்னு நெனச்சேன். கை கால் குடைச்சலுக்கு சாப்டாதான் கொஞ்சம் கேக்குது'' இரண்டு டம்ளர்கள் எடுத்து வந்தாள். வாசலில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தபடி நானும் திண்ணை இருளில் செல்லம்மாவும் உட்கார்ந்து கொண்டோம்.

செல்லம்மாவுக்கு சியர்ஸ் சொல்லத் தெரியவில்லை. புடவை தலைப்பை போர்த்திக்கொண்டு மருந்து குடிக்கிற வேகமாய் சாப்பிட்டாள். கொசு பிடுங்கிற்று. மூன்று பெக் முடித்து சாய்ந்ததும் சின்ன ஸ்டூலில் அருகே உட்கார்ந்து மெல்ல விசிறினாள். அப்பாவின் தொடர்புக்கு முன் என்னவாக இருந்தாள்?

''இருந்தேன், கல்லு பெயர்த்த கவரு மாதிரி.''

''புரியலியேம்மா.''

''சுவரு சுத்தமா இருக்கணும். பூச்சு வுதுந்து செங்கல் தெரிஞ்சா நோண்ட ஆரம்பிப்பானுங்க. சந்துல கால்வச்சு படிக்கட்டா ஏறத் தோணும். மனுஷாள் கால்வச்சு ஏறி ஏறி சுத்திப் போறதவிட, சுவருல கால் வச்சு ஏறி போறது சுலபமுன்னு தோணும். சுலபமோ இல்லையோ, அப்படி ஏறிப் போறதே ஒரு சொகம்னு தோணும். இருந்தேன், கல்லு பேர்ந்த சொவராட்டமா...''

அந்தப் பூடகம் எனக்குப் புரிந்தது.



''அப்பா தெரிந்துதான் கூப்பிட்டுக்கிட்டாரா?''

''மறைச்சு வச்சாலும் தெரியாது போயிடுமா? இது அப்பால தெரிஞ்சிட்டா...?மறைச்சதுகுத்தமாயிடாதா? உள்ளதச் சொல்லிட்டா உறவெல்லாம் சுத்தம்னு வாங்க. நாங்க பொய் பேசிக் கொள்வதில்லை ராமு. பொய் மனுஷாளப் பிரிச்சிடும்...உள்ளதை உள்ளபடி சொல்லிட்டம்னா கடவுள் நெனச்சாலும் பிரிக்க முடியாது.''

உண்மையாய் இருப்பதுதான் அவள் இயல்பு என்று எனக்கு வெகு சுலபத்தில் புரிந்து போயிற்று. தேவை களற்று இருப்பதே அவள் சுபாவமாய் இருந்தது.

கூடு பறக்க எண்ணை தேய்த்துவிட்டதும், எனக் கென்றே மாமிச உணவு தயார் பண்ணியதும், சாப் பிட்டு தூங்கும்போதும் கொசு கடிக்காமல் விரட்டிய தும், நான் அனுபவித்திராத சுகங்கள்.

## 6

நான் பகற்பொழுதுகளில் தூங்குவதில்லை. தூங் கக்கூடாது என்பதற்காகவே அதிகம் சாப்பிடுவ தில்லை. பிரெட் சாண்ட்விச், கொஞ்சம் பிரியாணி, ஒரே ஒரு இடியாப்பம் என்று பகல் உணவை முடித்துக் கொள்வேன். காலை பேப்பரை மறுபடியும் படிப்பேன். இந்த பதினொரு மணி சாப்பாடு, கோழிக்குழம்பும்— மூளைப் பொரியலும்—உள்ளான் கறியும்—மிளகு ரச மும்—அப்பளப் பூவும்—வெங்காயப் பக்கோடாவும் காலை பேப்பரின் முதல் பக்கம் படிக்கும்போதே கண்ணை அயர்வித்தன.

அந்த வீட்டின் குளுமைக்கு போர்வை தேவையாக இருந்தது. தூங்கி எழுந்திருக்கும்போது நாலுமணி. ஒரு நாள் முழுவதும் வீண் என்று தோன்றிற்று. எழுந்து உட்கார்ந்த போதும் கண்ணில் தூக்கம் இருந்தது. டீ குடித்த பிறகுதான் புத்தி விழித்துக் கொண்டது. எப்

பேர்ப்பட்ட சுகவாசி என் தகப்பன். இப்படி ஒரு நாள் விடுப்பு போதும். ஒரு மனிதன் மற்ற ஆறுநாளும் பேயாய் உழைக்க முடியும்.

"வெத்தல போட்டுக்கிறியா ராமு?" ஒரு வட்ட பித்தளை டப்பாவை என் முன் நீட்டினாள், எட்டித் தரையில் வைத்தாள்.

"கைல குடுங்கனேன்." சோம்பேறித்தனமாகக் கேட்டேன்.

"கூடாதுப்பா, இது தாயார் செய்யக் கூடாது. கட்டிக்கப்போறவதான் வெத்தல மடிச்சுக்குடுக்கலாம். கட்டினவதான் வாயில ஊட்டி விடலாம். தாயார் குடுத்து வெத்தல போடப்படாது. மகா பாவம். மாட்டுக்கும் கன்னுக்கும் நடுவுல போற பாவம். உனக்குத் தெரிய நியாயமில்லை. சட்டக்காரப் புள்ளங்க வெத்தல போடாதே. அப்ப இப்போ போடுறாங்களோ என்னமோ, பொடவ கட்டிக்கிற மாதிரி."

"என்னா கேக்கறீங்க புரியலியே."

"அந்தப் பொண்ணு வெத்தல போடுமான்னு கேட்டேன்."

"எந்தப் பொண்ணு?"

"சட்டக்காரின்னு சொன்னாங்களே..."

"சாப்டுட்டு பல்லு தொலக்கும். என்னியும் தொலக்கிட்டு வாண்ணும்."

"அடட... சாப்ட்ட ருசி போயிடுமில்ல."

"சாப்டறவரைக்குந்தான் ருசி. முடிச்சபிறகு சுத்தமாயிடணும்."

"எல்லாத்துலேயும் அது முடியுமா. ஞாயத்துக் கெழமையானா அய்யா கருக்கல்லவந்துருவாக, இருட்டு



கிற கையோடு போயிருவாக. அய்யா நெனப்பு ஞாயத்துக்கெழமயோட சரின்னு சொல்ல முடியுமா. திங்களும் செவ்வாயும் சிரிச்சுக்கிட்டுத்தான் இருப்பேன் உள்ளுக்குள்ளாறயே. வியாழனும் வெள்ளியும் வூடு சுத்தம் பண்ண ஆரம்பிச்சிடுவேன். சனிக்கிழமயன்னிக்கே எனக்கு பதட்டமாயிடும். விடிஞ்சா போச்சு விடிஞ்சு போச்சான்னு வந்து பாப்பேன். அஞ்சே முக்கா ஆறு மணிக்கு கார் வந்துரும். காரு சத்தம் கேட்டதும் உடம்பெல்லாம் ஜில்லுன்னு ஆயிடும். சட்டக்காரிகிட்டே ஞாயத்துக்கெழம மட்டுந்தான் போறியா."

"நெனச்சா போவேன்,"

"அது கஷ்டமாயிடுமில்ல. வீட்ல அது இல்லாது போய்ட்டா சேன்னு போயிடுமில்ல."

"அப்படியும் ஆயிருக்கு."

"உன்ன சாதி மாற சொல்லுதா?"

"இல்லியே."

"தஞ்சாதி வுட்டு வரதுக்கு இஷ்டமில்லையோ என்னவோ."

"அதுவுமில்லை"

"உறவுசனம் ஜாஸ்தியோ அதுக்கு?"

"அம்மா ஒருத்திதான். அவளும் போன வருஷம் செத்துப் போய்ட்டா"

"அய்யோ பாவம். தாயில்லாத பொண்ணா? சாப்பாட்டுக்கு இன்னா செய்யிது."

நான் சிரித்தேன். "கால் வச்சு ஏர்ற சுவருதான். சுவர் ஏறுனா காசுதான்."

"அடக் கிரகச்சாரமே... அப்படிப்பட்டது இந்தப் பாடுபடுத்துவானேன்?"

''நான் வொண்ணும் செய்யலியே.''

''தப்பு தம்பி. சுவரை சுத்தம் பண்ணு. முடியலைன்னா எனக்கு சொந்தமில்லைன்னு போய்டு. பொக்கை வீட்ல வாழலாமா? வாழற எடம் பொக்கையாகலாமா. உங்கப்பாரு சொவத்துல கையகல சுண்ணாம்பு சாஞ்சாக் கூட தாங்க மாட்டாரு.''

''என்ன சொல்றீங்கன்னு புரியவேயில்லை.''

''பூடகமா சொன்னாக்கூட உங்கப்பா புரிஞ்சுக்குவாரு. அந்த சட்டக்காரிய கல்யாணம் பண்ணிக்கிடேன். நோவு நொடியில்லாத பொண்ணுதானே அது. மனசுக்கு புடிச்சுதானே போறே.''

''கட்டிக்கிட்டா வெறுத்துப் போயிடுமோன்னுதான் பயம்.''

''அதுக்காக ஊசப்பண்டம் சாப்பிடறதா? ரசத்துக்கு கரண்டி மாறுனாலே கெட்டுப்போறது. அசிங்கப் பட்டு சாப்பிடலாமா?''

''எனக்கு இது ஒண்ணும் தப்பாத் தெரியல. நான் ருசிச்சும் சாப்படறதில்ல.''

''ருசி தெரியாதையும் சாப்பிடப்படாது. தம்பி ஒன் ருசி இருக்கட்டும். அதுக்கு குமட்டிடுமில்ல. வர்ற ஜனத்துல நீயும் ஒண்ணுன்னாயிட்டா... உன்னையும் வாடா போடான்னு கூப்ட்ருமில்ல. மரியாத இல்லாத எடத்துல எப்படி சோறு சாப்புடறது? தட்டுல போடலாம். தூக்கிப் போட்டா சோறு சாப்டுறது? தரையில் சோறு போட்டு பைரவர்தான் சாப்டணும்.''

''பைரவர்னா?''

''கொலைக்குமே அது.''

நான் முகம் சுருங்கினேன்.



''வார்த்தையா சொல்றபோதே சுருக்கமாயிருச் சுல்ல மூஞ்சி. தின்றபோது மலருமா? அதனால்தான் சொல்றேன்... கட்டிக்கோன்னு. இப்பிடிச் சொல்ல ஆளில்லன்னா சாப்பாடுகூட சோம்பலாயிடும்.''

''பத்து நிமிச கூத்துக்கு சாவற மட்டும் சொந்தமாகணுமா என்ன?''

''கூத்து பத்து நிமிசம்ன்னா, கொண்டல பூ வச்சுக்கிட்டு போவானேன்? விடிய விடிய கூத்துன்னா தான் சிங்காரிக்கிறதுல ஒரு அர்த்தமிருக்கு. வெறுங்கூத்துன்னு பட்ட பெறகு கொட்டாப் பக்கம் யார் போவாங்க.''

''எனக்கென்னமோ புடிக்கல.''

''விட்டுரு.''

''வுடவும் முடியல.''

''பல்லு வெளக்கிடறயா.''

''எதுக்கு... ருசி போயிடுமே'' வெற்றிலையை மென்று கொண்டு கேட்டேன்.

''சட்டங்காரங்க பளக்கமாச்சே, வெத்தல போட்ட பெறகும் பல்லு தேய்ச்சுருவீயோன்னு நெனச்சேன்.''

நான் பல் தேய்க்கவில்லை. நாள் முழுவதும் வெற்றிலை மணமும், நாக்கு தடித்த ஒரு ருசியும், துவர்ப்பும் காரமும் கலந்த ஒரு சுகம் வாயில் கலந்திருந்தது.

பெங்களூருக்குப் போன பிறகுகூட பான் கடைகள் தாண்டுகிற போதெல்லாம் ஆசை வந்தது. கிழவியின் வற்புறுத்தலை தால்மாவிடம் சொல்லவில்லை. ஒரு மாதம் கழித்து கிழவியிடமிருந்து பெங்களூர் பார்க்க ஆசையாயிருப்பதாக கடிதம் வந்தது. வரச் சொல்லி கடிதம் எழுதினேன்.

வருகிற வண்டியை முன் கூட்டி எழுதச் சொன்னேன். கிராமத்து மணியக்காரர் தந்திதர அதிகாலை ஸ்டேஷனுக்கு வண்டி எடுத்துப் போனேன். ட்ரங்கு பெட்டியும், தகர டின்னுமாய் கிழவி வண்டியிலிருந்து இறங்கினாள். என் டால்பின் சீட்டை தடவித் தடவிப் பார்த்தாள். மரங்களடர்ந்த சாலையில் வண்டி விரைய சட்டக்காரி வீடு எங்கே என்று கேட்டாள்.

''இதுக்குத் தானா இவ்வளவு தொலைவு?''

''ஏன், வந்தது தப்பா?''

''தப்புன்னு சொல்லலையே.''

''ஒடம்பு திடமா இன்னும் ரெண்டு வருஷம் உங்கப்பா இருந்தார்ன்னாக்க, அவருக்குப் பதிலா நான் வந்தேன். எனக்கு அந்த சட்டக்காரிய காட்ட மாட்டியா?''

வண்டியை முழு வேகத்தில் இடது பக்கம் திருப்பினேன். கிழவி சரிந்து நிமிர்ந்தாள்.

''எம்மேல கோவிச்சுக்கிட்டியா?''

''இல்லியே'' சட்டக்காரி வீட்டுக்குத் திருப்பினேன்.

''நான் போனா தப்பாயிடாதே.''

''ஒரு தப்பும் ஆவாது. உன்னைப் பார்த்து கொஞ்சம் பயப்படும்.''

தால்மா வீடு பூட்டியிருந்தது. சர்ச்சுக்கு போயிருப்பதாகச் சொன்னார்கள். தால்மா சர்ச்சின் வெளிப்புறத்திலிருந்த மேரியின் சிலையருகில் மண்டியிட்டபடி இருந்தாள். தூரத்திலிருந்தபடி அவளைக் காட்ட, கிழவி ஆவலுடன் எட்டிப் பார்த்தாள். நான் இறங்கி சர்ச் காம்பௌண்ட் வெளியே போய் சிகரெட் பிடித்தேன்.

யாரோ இரண்டு கஸ்டமர்கள் மடக்கிக்கொள்ள பேசியபடியேஇருந்தேன். என்டால்ஃபின்'ஹாங்'என்று



...ரல் கொடுத்தது. பின் சீட்டில் தால்மாவும் கிழவியும் உட்கார்ந்திருந்தார்கள். நான் அறிமுகப்படுத்தும் முன்னரே சந்தித்து விட்டார்கள் போலிருக்கிறது.

கிழவி என்னை அழைத்து பின்புறம் இருக்கும் ட்ரங்கு பெட்டியை திறக்கச் சொன்னாள். மேலாக வைத்திருந்த பட்டுப் புடவை, ரவிக்கை துணியுடன் ...வைத்து மேரியின் சிலையருகே தால்மாவை அழைத்துப் போனாள். என்னையும் வரச் சொன்னாள். 'தாயே மகமாயி' என்று கண்மூடி வேண்டினாள். புடவைத் துணியை தால்மாவின் கையில் திணித்தாள்.

''நல்லாருக்கணும் மனசு நெறைஞ்ச புருசனா கெடைக்கணும்'' தால்மாவுக்கு அந்த வேகமான தமிழ் புரியவில்லை. நான் மொழி பெயர்த்தேன். தால்மா ...னித்தாள். கிழவியின் கையைப் பற்றி முத்தமிட்டாள்.

''உங்க வூட்டுக்கு போனோம். நீ இல்லியே?'' என்றாள்.

அதையும் மொழி பெயர்த்தேன். கிழவி தால்மாவின் வீட்டைச் சுற்றிப் பார்த்தாள்.

''மைசூர் அரண்மனைக்குப் போறோம். எங்ககூட வரியா'' என்றாள்.

அரண்மனைக்குப் போனோம். நந்திஹில்சில் ஏறி இறங்கினோம். தால்மாவும், கிழவியும் ரொம்ப ஸ்நேகிதமாகி விட்டார்கள். இரவு திரும்பி தால்மா வீட்டிலேயே படுத்துக் கொண்டோம்.

...தரையில் படுக்க வைத்தாள். ''தரையின் குளிர், ...நரம்புகளை பாதிக்குமென்று சொல்லுங்கள். பெங்க...ளூரில் கட்டிலில்தான் படுக்கவேண்டுமென்று சொல்...லுங்கள்.'' இருந்த ஒரே இரட்டை கட்டிலில் தால்மா...வின் இடப்புறம் கிழவியும் வலப்புறம் நானும் படுத்துக் கொண்டோம்.

எங்களுக்கு இடைஞ்சல் இல்லாமலிருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் எதிர்புறம் கிழவி சுருண்டு படுத்தாள். எங்களுக்கு முதுகு காட்டினாள். என் கைகள் வழக்கம் போல் தால்மாவிடம் விஷமம் செய்ய, புறங்கையில் அடி விழுந்தது. 'பிஹேவ் யுவர் செல்ஃப்' என்று சீறல் வந்தது.

விடிந்ததும் கிழவியை தால்மா வீட்டிலேயே விட்டுவிட்டு கடைக்குப் போனேன். ஒரு அம்பாசிடர் காரை தமிழ் தெரிந்த பையனைப் போட்டு தால்மா வீட்டுக்கு அனுப்பினேன். பிற்பகலில் தால்மாவும், கிழவியும் கடைக்கு வந்தார்கள். எனக்கு தோசையும், குருமாவும் எடுத்து வந்தார்கள்.

''சாயந்தரம் வண்டிக்கு போறேன்பா.'' நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது கிழவி வேண்டுகோள் விடுத்தாள்.

''என்ன அவசரம்,இருந்து நாலு இடம் பாத்துட்டுப் போறது...''

கிழவி சிரித்தாள். ''பார்த்துட்டேனே பாக்க வேண்டியதெல்லாம். பாத்துவிட்டுத்தான் போறேன்.'' மணியக்காரருக்கு தந்தி கொடுத்துவிட்டு கிழவியை வண்டியிலேற்றினேன். தால்மாவும வந்திருந்தாள். காய்கறி கூடையும், கைக் கெடிகாரமும், அன்னைமேரி படமும் பரிசளித்தாள்.

இரவு என்னை கட்டிக்கொண்டு அழுதாள்.

''இனி உன்னை நான் வற்புறுத்தப்போவதில்லை, ராம். நானாய் வாயை திறந்து இனி கேட்கப் போவதில்லை. என் உடம்பு அழுகி, இந்தத் தொழில் செய்ய முடியாமல் போகும் நிலை வந்தால் ஒரு வேளை சோறுக்கு மட்டும் உதவி செய். குறைந்த விலையில் ஒரு சவப்பெட்டி வாங்கு. இந்த உதவிக்காக என்னை



எப்போது வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக் கொள். எவ்வளவு முறை வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக்கொள்'' என்றாள். அன்று இரவு உபயோகப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

மாசம் தவறாமல் கிழவியிடமிருந்து கடிதம் வந்தது. தாலம்மா சௌக்கியமா என்று ஒரு வரி எல்லாவற்றிலும் இருந்தது. ஒரு பிப்ரவரி மாதம் மணியக்காரரிடமிருந்து இன்லண்ட் கடிதம் வர அவசரமாகப் பிரித்தேன். கிழவியை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாக எழுதியிருந்தார்,

அடுத்த விமானத்தைப் பிடித்துச் சென்னையிலிறங்கினேன்.

ஜாண்டிஸ். இரப்பை வீங்குமளவுக்கு ஜாண்டிஸ். சுகாதாரமில்லாத குடிநீரும், மதுவும் காரணம். பத்து நாள் சாப்பாடு இல்லாமல் கிழவி இளைத்துப் போயிருந்தாள். மயக்க நிலையில் இருந்தாள். நான் குரல் கொடுக்க கண் விழித்துக் கொண்டாள்.

''தாலம்மா வரலையா'' என்று கேட்டாள். ஒரே கேள்விக்கு பிறகு மருந்து மயக்கத்தில் மறுபடியும் தூங்கிப் போனாள்.

மாலைவிமானத்தில் தால்மாவை வரவழைத்தேன். கிழவிக்கு மறுபடி நினைவு வரும்வரை காத்திருந்தோம். நடு இரவில் கண் விழித்தாள். தொட முயற்சித்த தால்மாவை வேண்டாமென்று தடுத்தாள்.

''இது ஒட்டுவாரொட்டி, தொடாதே!'' என்றாள்.

எங்களை அருகருகே இருக்கச் சொன்னாள். வாயை மெலிதாய் பிளந்தபடி வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கல்யாணம் கூட வேணாம் தம்பி, கடேசி வரைக்கும் வச்சுக்க. என்ன மாதிரியே அது சீப்படப்

போதேன்னுதான் இதையும் சொல்லுறேன். வெளிய வாசல்ல ரொம்ப போக வேணாம்ன்னு சொல்லு. தாலி கட்டாத சாவறது, வேதனைதான். உனக்குப் புடிக்கலேன்னா கயிருகூட வேணாம். மனசுல அது பத்தி ஒரு முடிச்சு போட்டு வச்சுக்க. உடம்பு ரொம்ப வினையான சமாச்சாரம். அய்யா இல்லியேன்னு ரொம்ப குடிக்க ஆரம்பிச்சுட்டேன். கிளாஸைப் புடுங்கி வைக்க ஆளே இல்லியா, வவுரு வீங்கிப் போச்சு. குடிக்கறத புடுங்கறதுக்காவது மனுஷாள் வேணும். குமரன் அதிகமாக ஆடப்புடாது. கிழவன் அதிகமாக குடிக்கப் படாதும்பாங்க. இது ரெண்டுமே புத்தியை மங்க வைக்கும். உன்னோட வந்துடனும்னு ஆசை. அப்பன் வச்சுக்கிட்டதை புள்ள இப்ப அனுபவிக்கிறான்னு ஊர் சொல்லிடும். நீ அம்மா அம்மான்னாக்கூட கேக்கும். வெறும தெருவப் பாக்கதேதி தெரியாத மாசந் தெரியாத எத்தினி நாள் உசுரோட இருக்கறது. போகட்டும் போன்னு குடிக்க ஆரமிச்சேன். போற வேளை வந்துடுச்சு. ஒரு உதவி செய் தம்பி. அவர் இருக்கச் சொல்ல ஆடிமாசம் மொத ஞாயத்துக்கெழம என் பேர்ல உற்சவம் நடக்கும். மொத்த செலவும் என் பேர்ல நடக்கும். வீட்டை கோபாலுக்கு எழுதி வச்சு வாடகையில் செலவு செய்யச் சொல்லு. மணியக்காரர் கிட்டே சொல்லிருக்கேன். நீ சாட்சி போடு. தாலம்மாவை யாரண்டையாவது புள்ள பெத்துக்கச் சொல்லு. எனக்கிருக்கிற குடுப்பினைகூட அதுக்கில்லாம போயிரக் கூடாது. உங்கப்பாரு நேத்தே வந்தாரு. இன்னா செய்யற இங்கேன்னு திட்டினாரு. அப்ப நான் வரட்டா'' கிழவி கண் மூடினாள்.

இரண்டு நாள் உயிரோடிருந்தாள். தன்னையும் மறந்து, இடம் மறந்து ஏதோதோ பேசினாள்.

''பாக்யம், என்னிக்கு ஞாயத்துக்கெழம?'' என்று கேட்டாள். அவங்க பட்டணத்துல பெரிய வக்கீலு. ரெண்டு பொண்ணுங்க. அஞ்சு பையன். ஒண்ணு ஓடிப்



போச்சு'' என்றாள். ''அய்யரே மா விளக்குக்கு எத்தினி துட்டாகும். அய்யா பேருக்கே அர்ச்சனை பண்ணிடு'' என்றாள். சிரித்தாள். அழுதாள். ''ஆருடி வாசல்ல ஹாரனடிக்கிறது. எட்டப்போ. வண்டியத் தொடாதே'' கோபித்துக் கொண்டாள்.

சட்டென்று பரபாத்து, ''அய்யா வந்துட்டாங்க. அய்யா வந்துட்டாங்க'' என்று எழுந்தாள். முடியாமல் மல்லாந்து விழுந்தாள், இறந்து போனாள்.

தால்மா கேட்டபோது கூட இவை எதையும் நான் மொழி பெயர்க்காது இருந்தேன். என்னுள் விசித்து விசித்து அழுதேன். போர்வையால் முகத்தை மூடினேன். மார்ச்சுவரி வேனில் இடுகாட்டிற்கு எடுத்துப் போனோம்.

காட்டில் ஊர் மொத்தமும் கூடி இருந்தது. வாயிலடித்துக் கொண்டு அழுதது. புது வேஷ்டியும், மேல் துண்டும் ஈரத்தில் நனைந்து இடுப்பிலணிந்து கொண்டு ஒரு தகரக் கொட்டகையின் கீழ் அவளுக்கு கொள்ளி வைத்தேன்.

கோயிலுக்கென்று எழுதியிருந்த வீட்டுப்பத்திரங்களை ஊர் பொதுவில் வைத்தேன். அவள் உடைமைகளை எடுத்துக் கொண்டு தால்மா தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்தேன். தால்மா ரிஷப்ஷனில் காத்திருந்தாள்.

''அவளை ஒரு போட்டோ கூட எடுக்காமல் போய் விட்டோம் என்ன முட்டாள்தனம் ராமு? இவ்வளவு சீக்கிரம் செத்துப் போவாளென்று நான் நினைக்கவேயில்லை. எனக்கு உதவியாய் வெகு காலம் என்னோடு இருக்கப் போகிறாளென்று நினைத்தேன். நீ உதவ மறுத்தால் கூட இந்த கிழவி எனக்கு உதவுவாள் என்கிற நம்பிக்கையிலிருந்து விட்டேன். எவ்வளவு சுயநலம்?''

''நான் என் அவலம் பற்றித்தான் யோசிக்க முடிந்ததே தவிர, அவள் மனதின் வேதனை எனக்குத் தெரி

யாமலே போயிற்று. அவள் உனக்கு அம்மா முறையாக இல்லாமல் இருந்தால் நான் என்னோடு வைத்துக் கொண்டிருப்பேன். உனக்கு அம்மா என்கிற மரியாதையில் அவளை விட்டு நான் அதிகம் விலகி விட்டேன். இவள் மரணம் என்னை ரொம்பவும் வேதனைப்படுத்துகிறது ராமு. உதவி செய்யக்கூட தெரியவில்லையே என்று அழுகை வருகிறது எனக்கு. அவள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறாள் ராமு. சிறுக சிறுகத் தன்னைக் கொன்று விட்டிருக்கிறாள். உங்களுக்கு புரிந்ததா ராமு?'' நான் மொழி பெயர்க்காமலேயே அந்த கிழவியின் மனசு தால்மாவுக்குப் புரிந்து போயிருக்கிறது.

இரண்டு பேரும் ஒரே படகில் சவாரி செய்தார்கள். ஒருவரின் மனசு ஆட்டம் இன்னொருவருக்கு தெரிந்திருந்திருக்கிறது.

நான் அசையாது நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். அந்தக் கிழவியின் வாழ்க்கை முழுவதும் மனதில் ஓட்டிப் பார்த்தேன்.

எழுந்தேன்.

''தால்மா, இனி நீ எல்லாவற்றையும் விட்டு விடு.'' அவளை நெருங்கி நின்றேன்.

''ஏன்?'' தால்மா வியப்போடு கேட்டாள்.

''எனக்காக விட்டு விடு.''

''விட்டு விட்டு?''

''என்னோடு இரு.''

''ராமானுஜம்?'' தால்மா வியந்தாள்.

''இந்த நிமிடத்திலிருந்து நீ எதற்கும் எங்கும் போக வேண்டாம். நானும் போக மாட்டேன்.''

''உண்மையாகவா ராம். மறுபடி நன்றாய் யோசனை செய்யுங்கள்'' தடுமாற்றத்துடன் பேசினாள்.



'இந்தப் பெண்களே பெரிய முட்டாள்கள்.' எனக்குள் அசிரத்தையாய் ஒரு கோபம் வந்தது.

''சொல்றத செய்யுடி. என்னமோ கேள்வி கேக்கறா.'' நான் படுக்கையில் சரிந்து கண்களை மூடிக் கொண்டேன்.

தால்மா என் அருகில் உட்காருவதை உணர்ந்தேன். என் நெற்றியை நீவுவதை உணர்ந்தேன், முன் தலையைக் கோதுவதை.

''ஏய் என்ன இது? திடீர்னு எதுக்கு என்ன திட்டுற'' அவள் கொஞ்சலில் சந்தோஷம் மிகுந்தது.

''ம்ம். படு வெளக்க அணைச்சுட்டு'' விளக்கணைக்கும் சப்தம் கேட்டது. தால்மா பேசாது என் அருகே படுத்துக் கொண்டாள். நான் ஒருக்களித்ததும் தயாரானாள்.

நடு இரவில் எனக்குப் பேயாய் பசித்தது. டெலிபோனை எடுத்து உணவு வரவழைத்தேன். தால்மாவை உலுக்கி சாப்பிடச் சொன்னேன். வயிறு நிரம்பியதும் சிட்அவுட்டுக்கு வந்தேன். வெளியே சென்னை நகரம் மினுமினுத்துக் கொண்டிருந்தது. மேலே நட்சத்திரங்கள் தெரிந்தன. முக்கால் நிலவொளியில் மேகங்கள் மிதந்தன.

''ஐ வான்டர்ட் லோன்லி அஸ் எ க்ளவ்ட்'' எட்டாவதில் படித்த ஆங்கிலக் கவிதை ஞாபகம் வந்தது.

எந்த மேகமும் வெட்டியாய்த் திரிவதில்லை. திரிவதாய்த் தோன்றினாலும் இது உண்மையில்லை. என்றைக்கோ எங்கோ இந்த நிலாக்கால மேகங்கள் கர்ப்பமுற்று, கறுத்து மழையாய் பெய்யும்.

சாரங்கம் உதைத்த சரமழை போல் வாழ, உலகினில் பெய்யும் என்னைப் போல்.

''ஏய், இன்னும் தூங்கல?'' தால்மா என்னை தூங்க அழைத்தாள். ஆனால் விடியல்வரை நாங்கள் தூங்கவே இல்லை.

● ● ●

# கொம்புத் தேன்

அவர்கள் அவனுக்காகக் காத்திருந்தார்கள். பாலம் விமான நிலையத்தில் நெரிசலாய் காத்திருந்தார்கள். இரண்டு ரூபாய் நுழைவு டிக்கட்டுகளுக்கு அர்த்தமில்லாமல் போயிற்று. பத்து இருபது என்று மொத்தமாய் டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டார்கள். வெளியே அதிக விலைக்கு விற்றார்கள். லாபியில் கூட்டம் அதிகமாக ஒரு ஒழுங்கின்மை வளர ஆரம்பித்தது. நாற்காலிகள் போதாமல் மேஜைகள் மீதும், சுவர்களில் சாய்ந்தபடியும், தடுப்புக்கட்டை விளிம்பின் மீதும் உட்கார ஆரம்பித்தார்கள். விமானம் இன்னும் அரைமணி நேரம் ஆகுமென்றதும் தரையில்கூட வட்டமாய் உட்கார்ந்து கொண்டார்கள். அவனைப் பற்றியும், அவன் குடும்பத்தினரைப் பற்றியும் பல்வேறு மொழிகளில் சம்பாஷிக்கத் துவங்கினார்கள். சிந்திகள், பஞ்சாபியர்கள், மராட்டியர்கள், பெங்காலிகள், காஷ்மீரிகள், தெலுங்கர்கள், கேரளத்தார், கன்னடியர் அங்கு இருந்தாலும், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவருக்கு அந்தக் கூட்டத்தில் ஒரு மதிப்பு இருந்தது. தாய்மொழி தமிழாகவும், ஹிந்திப் பேச்சு சுலபமாகவும் பேசுகிறவனை எல்லோருக்கும் பிடித்திருந்தது. ஒருவன் தமிழ் தினசரியை உயரப் பிடித்து அவன் குடும்பம் பற்றிய விபரங்களை மொழி பெயர்க்க, எல்லா மொழிக்காரர்களும் ஆனந்தமாய்க் கேட்டார்கள். அந்தத் தினசரியில் வெளியாகியிருந்த அவன் பெற்றோர் படத்தை எட்டி எட்டிப் பார்த்தார்கள்.

மெல்லிய மீசையோடு முகம் மலரச்சிரிக்கும் அவன் படத்தைப் பார்த்துவிட்டு, இனிய பையன் என்று



புகழ்ந்தார்கள். அவனை நேரே பலமுறை பார்த்ததாய் சொன்ன ஒரு தமிழனைச் சூழ்ந்து கொண்டு பல கேள்விகள் கேட்டார்கள். ஹிந்தியில் பேசுவானா என்று வினவினார்கள்.

கேமராக்கள் நிறைய விமான நிலையத்துள் நுழைந்தன. கேமரா வைத்திருந்தவர்களெல்லாம் பத்திரிகை நிருபரென்று சொல்லிக் கொண்டார்கள். யாரோ ஒரு சினிமா நடிகன் இறங்கியபோது கேலியாய் அவனைப் பார்த்து கூட்டம் கூவ. அந்த நடிகன் அவசரமாய் வி.ஐ பி. அறையில் ஒளிந்து கொண்டான். நடிகர்களை விட விளையாட்டு வீரர்களுக்கு நாம் முக்கியத்துவம் தர வேண்டும் என்று ஒருவன் சொன்ன போது எல்லோரும் அதை ஆமோதித்தார்கள்.

''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்...'' கீச்சுப் பெண் குரல் ஒலிபெருக்கியில் பேச முற்பட்டதும், ஒருவரையொருவர் அதட்டி கூர்மையானார்கள். ''லாஸ் ஏஞ்சலிலிருந்து நமது அத்தலடிக் வீரர்களுடன் வரும் ஏர் இந்தியா விமானம் இன்னும் சில நிமிடங்களில் பாலம் விமான நிலையத்தின் தரையைத் தொடும். பயணிகளுக்கு இடைஞ்சல் இல்லாமல், பொதுமக்கள் அமைதிகாக்க வேண்டும்.''

வேண்டுகோள் விடுத்த நேரம் அமைதி குலைந்து போயிற்று. விளையாட்டு மந்திரியான நரைத்த சீக்கியர் கரம் கூப்பியபடி லாபிக்கு நுழைய, அவரைத் தொடர்ந்து போலீஸ் நுழைந்தது. அவரைச் சுற்றி பத்தடி வட்டம் போட்டுக் கொண்டது. ஒரு பெரிய மாலையை சீக்கிய மந்திரி கையில் எடுத்துக்கொள்ள ஜனங்கள் குறிப்பறிந்து கை தட்டினார்கள். அந்தப் பெரிய மாலை அவனுக்குத்தான் என்று எல்லோருக்கும் தெரிந்து போயிற்று. அவனுக்கு மந்திரி மாலை அணிவிப்பதை எல்லோராலும் பார்க்க முடியாது. பார்க்கும் முன்னரே ஒரு பரவசம் வந்து விட்டது. அதை அவன் தலைகுனிந்து ஏற்கும் காட்சியை

கற்பனை செய்ய முடிந்தது. ஜனங்கள் இதைக் கண்டு கொண்டதைப் பார்த்து சீக்கிய மந்திரி புன்னகை செய்தார். அவரும் சந்தோஷமாக இருந்தார்.

லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து ஒருவன் தங்கப் பதக்கம் வாங்கிக் கொண்டு வருகிறான். அவர் அமைச்சராக இருந்த காலத்தில் இந்தியா ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெறும் பெருமை அடைந்திருக்கிறது. மூன்று நாள் முன்பு இந்தச் செய்தியை பிரதமரிடம் ஓடிப்போய் சொன்னபோது, பிரதமர் சீக்கிய மந்திரியைப் பாராட்டி னார். அவரோடு போட்டோ எடுத்துக்கொள்ள அனுமதித்தார். பிரதமர் போட்டோ எடுத்துக்கொள்ள அனுமதிப்பது என்பது பெரிய விஷயம். பிரதம மந்திரியும் சந்தோஷமாக இருக்கிறாரென்றுதான் இதற்கு அர்த்தம்.

ஒலிம்பிக்கில் இந்தியா தங்கப் பதக்கம் பெற்றதில் யாருக்குத்தான் சந்தோஷமாயிராது. அதுவும் உலக சாதனையை முறியடித்த தங்கப் பதக்கம், சுதந்திரத் திற்கு முன்னோ, பின்னோ இதுவரை சரித்திரத் திலேயே இல்லாதபடி ஒரு தங்கப் பதக்கம், உயரத் தாண்டுதலில் தங்கப் பதக்கம்.

ஆனால் சீக்கிய மந்திரிக்கு இந்தப் பொது ஜனங் களைப் பற்றி கவலையாக இருந்தது. ஆர்வக் கோளாறு காரணமாக அவன் மீது பாய்ந்து அக்கக்காய் அவனைப் பிய்த்து எடுத்து விடுவார்களோ என்று பயமாக இருந்தது. மேலும் அதிக போலீஸ் வேண்டு மென்று உத்தரவிட்டார். அவனைப் பத்திரமாய் பிரதமரின் இல்லத்திற்கு அழைத்துப் போவது தன் பொறுப்பு என்று உணர்ந்தார். விமானத்தளம் வரை போய்விட்ட ஜனங்களை அப்புறப்படுத்தச் சொன்னார். அப்புறப்படுத்த முடியாவிட்டால் அடித்துக் கலைக்கச் சொன்னார். அவன் இந்தியத் தாயின் தங்கப் பையன். தங்கத்தை இந்தியாவில் பெரும்பாலும் கடத்தலுக்குத் தான் உபயோகப்படுத்துகிறார்கள். விமான நிலையத்



தில் ஜனங்கள் காலை மிதித்து விட்டார்களென்று அவன் நொண்டிக்கொண்டு பிரதமருடைய இல்லத் திற்கு வந்தால் எல்லோரும் இந்த மந்திரியைத்தான் ஏசுவார்கள். இதற்குக்கூட நீ லாயக்கில்லையா என்று கேட்பார்கள். மந்திரி கடுகடுத்தார். போலீஸ்காரர்கள் புரிந்து கொண்டார்கள். சுளீர் என பிரம்படி சப்தம் கேட்டது. ஆனால் கூட்டம் வெறியோடு இவனுக்காக காத்திருந்தது.

கூட்டத்திலிருந்து கதர் வேஷ்டியும், சட்டையும் போட்ட ஒரு கனத்த உருவம் மந்திரியை நோக்கி ஓடி வந்தது. "என்பெயர் வலியன். மதராஸி பத்திரிகையின் ஆசிரியர். மதராஸிகளுக்கு இந்த வரவேற்பில் முத லிடம் கொடுக்க வேண்டும். எல்லோரையும் போலீ ஸார் அடித்து நொறுக்குகிறார்கள். இதை நான் பெரிசுபடுத்தி எழுதுவேன்," என்று கூவினார். சீக்கிய மந்திரிக்கு அந்த மதராஸி ஆளை எங்கேயோ பார்த்த ஞாபகம் இருந்தது. மேலும் எந்தப் பத்திரிகையையும் பகைத்துக் கொள்வது இப்போதைக்கு நல்லதல்ல. இந்தத் தங்கப் பதக்கம் பேசப்படும்போது தன் பெயரும் பேசப்பட வேண்டும். அந்த மதராஸியின் கதர் தோளைத் தட்டி ஆசுவாசப்படுத்தினார். பிரிந்து கிடந்த சட்டை பட்டன்களைப் போட்டு விட்டார்.

"ஜெயித்தவர் ஒரு மதராஸி தெரியுமில்லியா உங் களுக்கு..." அந்தப் பத்திரிகையாசிரியர் பெருமை யுடன் கூறியதும் சீக்கிய மந்திரி தலையாட்டி மறுத்தார்.

"ஜெயித்தவரை இந்தியன் என்று சொல்லுங்கள் நண்பரே..." மெதுவாக முறுவலித்தார்.

"ஆஹா... இது நல்ல பதில். இதை குறித்துக் கொள்ளுகிறேன்." பத்திரிகையாசிரியர் நெருங்கி வர' அவரை அழைத்துக்கொண்டு விமான தளத்திற்குப் போனார். பத்திரிகை ஆசிரியர் தன் ஃபோட்டோ கிராபரை கை காட்டி அழைக்க, போலீஸார் கூட்டத்

திலிருந்து அவரை மட்டும் மந்திரிக்கு அருகே போக அனுமதித்தனர். மந்திரி அவர் பட்டன்களையும் போட்டு விட்டார். பத்திரிகையாசிரியர் அதையும் குறிப்பெடுக்க, ஏர் இந்தியா விமானம் பூவாய் தரை தொட்டது. பாதையின் கோடிவரை ஓடி திரும்பிற்று குழந்தையைப் போல தவழ்ந்து வந்தது. கூட்டத்தினர் கைகளை வீசி ஆரவாரம் செய்தனர்.

உள்ளே அவன் அமைதியாக உட்கார்ந்திருந்தான். அவனருகே டாலி ஆப்ரஹாம் உட்கார்ந்திருந்தாள். விமானத்தின் வட்ட ஜன்னல் வழியே வெளியே போகும் கூட்டத்தைப் பார்த்து வியந்தாள்,

''ஏ... இது எந்தானு இத்தறக் கூட்டம் வலசம்மே, பொறத்து நோக்கு'' கன்னம் பொத்திக் கூச்சலிட்டாள். ஒரு கணத்தில் இந்தக் கூட்டத்தின். நோக்கம் புரிந்துவிட்டது. இது அவள் பொருட்டில்லை. அவன் பொருட்டு. ஜன்னலிலிருந்து திரும்பி அமைதியாய் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்தாள்.

''எனிக்கு வளரே சந்தோஷமாயி அண்ணாவி, அம்மே... எத்தறக் கூட்டம். ப்ரைமினிஸ்டர் வந்துட்டுண்டோ? ஒரு கூட்டம் போலீஸ் நிக்குன்னு ஏ...வலசம்மே பொறத்து நோக்கு'' ஜன்னலின் வழியே பார்த்து கூவினாள். மறுபடி திரும்பி அவன் இடக் கையைத் தன் கைகளால் பொத்திக் கொண்டு அவன் விரல்களில் முத்தமிட்டாள்.

விமானம் நின்றது. டாலி ஆப்ரஹாம் அவன் ஜெர்ஸி பாக்கெட் ஜிப்பைப் பிரித்து ரிப்பனுடன் கூடிய தங்கப் பதக்கத்தை எடுத்து அவன் கழுத்தில் போட்டாள். 'யேசுவே!' என்றபடி அவனுக்கு சிலுவை குறியிட்டாள். குறியிட்ட தன் விரல்களை முத்தமிட்டுக் கொண்டாள். பதினைந்து நாள் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒன்றாய் புழங்கிய விளையாட்டு வீரர்கள் அவன் உட்கார்ந்திருந்த இருக்கையை சூழ்ந்து கொண்டனர்.



''ஹி இஸ் எ ஜாலி குட் ஃபெல்லோ.''

''ஹி இஸ் எ ஜாலி குட் ஃபெல்லோ.''

கூட்டமாய் பாட்டுப் பாடினார்கள். முதுகைத் தட்டி, தலையைத் தடவி, கன்னங்களை வருடி, புஜத்தை அழுத்திப் பிடித்து பாராட்டு தெரிவித்தனர், இனிமேல் அவனை அவர்கள் சந்திக்க முடியாமல் போகலாம். இந்தியாவுக்கு ஹை ஜம்பில் தங்கப் பதக்கம் வாங்கித் தந்த மதராஸியை அவர்கள் பார்க்க முடியாது போகலாம். ஒலிம்பிக்கின் தங்கப்பதக்கம் வாழ்க்கையில் ஒரு முறையே நிகழ்வது. இந்த முறை அது நிகழ்ந்து விட்டது. இந்தியாவுக்கு ஒரே ஒரு தங்கப்பதக்கம் மட்டுமே கிடைத்திருக்கிறது. அந்த ஒற்றைப்பதக்கத்தை காணத்தான் வெளியே இத்தனை கூட்டம். டாலி ஆப்ரஹாம் கண்ணில் ஜலம் துளிர்க்க அவன் அருகில் உட்கார்ந்திருந்தாள். தொடர் ஓட்டத்தில் வெங்கலப் பதக்கத்தை நூலிழையில் தவற விட்டாள். அதனாலென்ன. இந்தியாவுக்கு ஒரு தங்கப்பதக்கம் கிடைத்து விட்டது. இதோ அந்த தங்கப் பதக்கம் அமைதியாய் அருகே உட்கார்ந்து கொண் டிருக்கிறது.

அண்ணாவி எழுந்தான். முதுகை வளைத்து சோம்பல்முறித்தான். லாஸ் ஏஞ்சல்ஸில் இலவசமாகக் கொடுத்த ஹேண்ட் பாக்கை மாட்டிக் கொண்டான். விமானத்தின் கதவுகள் திறந்தன. எல்லா வீரர்களும் அவன் இறங்கும் பக்கமாகவே இறங்க ஆசைப் பட்டனர். இடப்புறம் டாலி ஆப்ரஹாமும், வலப்புறம் ஹாக்கி ராஜகோபாலும் நெருங்கி வர, அண்ணாவி படிகளில் கால் வைத்தான் மெல்ல இறங்கினான்.

'அண்ணாவி... அண்ணாவி... அண்ணாவி...' கூட்டம் கைதட்டி ஆரவாரித்தது. சீக்கிய மந்திரி வெள்ளை அல்லியும், சாமந்தியும் கலந்த மாலையுடன்

முன்னேறினார். மந்திரி நெருங்குவதற்குள் அண்ணாவி அவசரமாய் படிகளில் இறங்கினான். தரை தொட்டவுடன் ஹேண்ட் பாக்கைக் கீழே போட்டான். விமான நிலைய தளத்தை அந்த சிமெண்ட் பூமியை, தன் பாரதத் தாயை விழுந்து வணங்கினான். உடம்பெல்லாம் மண்ணாக தழுவிக் கொண்டான். சூடான அந்த பூமியை உதடு பொருத்தி முத்தமிட்டான். கன்னம் பதியத் தங்கப் பதக்கம் வயிற்றில் அழுந்த ஆரத் தழுவியபடி கிடந்தான். மந்திரி அதிர்ந்து போனார். டாலி ஆப்ரஹாம் கண் கலங்கினாள். கூட்டம் எக்களித்தது.

‘அண்ணாவி... அண்ணாவி... அண்ணாவி...’ குரல் பிளிற கூச்சலிட்டது. தடைகளை எல்லாம் உடைத்து ஓடி வந்தது. போலீசார் மந்திரிகளையும் விளையாட்டு வீரர்களையும் இறுக்க சூழ்ந்து கொண்டார்கள். அண்ணாவி எழுந்து நின்றான். மந்திரியை நோக்கிக் கரம் குவித்தான். பெரிய மாலை அவன் கழுத்தில் விழ, போட்டோக்கள் கண் சிமிட்டின. மந்திரி அவனை இறுக்கித் தழுவிக் கொண்டார். “மேரா பையா மேரா தோஸ்த்...” வசமிழந்தார். அவனை இறுகத் தழுவினார். அவன் கன்னங்களில் முத்தமிட்டார். அவன் கழுத்தில் தொங்கிய தங்கப்பதக்கத்தைத் தூக்கிப் பார்த்தார். கண்களில் ஒற்றிக் கொண்டார். ஜெர்ஸியின் ஜிப்பை முழுவதுமாய் தூக்கினார். தங்கப்பதக்கம் ஜெர்ஸிக்குள் பத்திரமாக இருந்தது கூடவே வந்த மதராஸி பத்திரிகைக்காரர் குறித்துக் கொண்டார். அவனிடம் நெருங்கி மெல்லிய குரலில் பேசினார்.

“அம்பி... ரொம்ப சந்தோஷம்... எங்களுக்கெல் ரொம்பப் பெருமை. மெட்ராஸ் முழுக்க உனக்காக காத்திண்டிருக்கு. ஹிண்டுல ஆறுகாலம் போட்டோ போட்டுட்டான். ரொம்ப சந்தோஷம். என்பேர் வலியன். என்னை யார்னு தெரியறதா உனக்கு?”



அவன் அவருக்கும் கை கூப்பினான். ‘தெரிகிறது’ என்று தலையசைத்தான். வெகு நாளைக்குப் பிறகு காவிரி பாஷை காதில் ஒலித்தது. அவனுக்கும் சந்தோஷமாயிருந்தது. அவன் மூதாதையர் காவிரிக் கரைவாசிகள். காவிரியின் மீது அவனுக்கும் ஒரு பிடிப்பு இருந்தது. கூட்டம் நெக்கி தள்ளிற்று. அவன் அந்தப் பத்திரிகையாசிரியர் தோளைப் பிடித்துக் கொண்டான்.

“உன்னைப் பாக்கத்தான் அம்பி டெல்லிக்கு வந்திருக்கேன். எம் பத்திரிகைக்கு உன் கட்டுரை வேணும். வேற யாரும் கேக்கறதுக்கு முன்னாடி முந்திக்கணும்னு டெல்லிக்கு வந்தேன். உன்னை இனிமே எப்பப் பாக்க முடியுமோ. எனக்கு உன் பயணக் கட்டுரை வேணும்பா.”

அவன் சிரித்தான். கூட்ட மோதலில் தள்ளாடினான். “கட்டுரை எழுதற மாதிரி எனக்குத் தமிழ் எழுத வராதே ஸார். நான் என்ன எழுதுவேன்.”

“ஐயோ இவ்வளவு பேசறயே...இது. போறும்பா உனக்குத் தோணறதை எழுது. நான் சரி பண்ணிக்கிறேன். நேரத்திக்கு மெட்ராஸில உங்கம்மாவைப் பார்த்தேன். நெறய போட்டோ எடுத்தேன். உங்கம்மாவுக்கு ஏக சந்தோஷம்.”

வலியன் எதிராளியின் மனசைத் தொடுவதில் சாமர்த்தியமானவர். அவர் இலக்கு சரியாய் தைத்தது. அம்மாவைச் சொன்னதுமே அவன் முகம் மலர்ந்தது. அவர் கைகளை அவன் இறுகப் பற்றிக் கொண்டான்.

“முயற்சி பண்றேன் சார். எனக்குத் தெரிஞ்சதை எழுதறேன். என்ன எழுதணும்?” குனிந்து கேள்வி கேட்டான்.

“எப்படித் தங்கப் பதக்கம் கிடைத்ததுன்னு எழுது. நான் அறிவிப்பு குடுத்துரட்டுமா, ‘ஒரு தங்கப்பதக்கத்தின் கதை.’ டைட்டில் நன்னாயிருக்கா?”

அவன் சிரித்தான்.
''வேற யார்க்கும் ஒத்துண்டுடாதேப்பா.'' அவர்
கெஞ்சினார். அவன் வாக்குறுதி அளித்தான். அந்த
மதராஸி பத்திரிகைக்காரர் நிறைவோடு பின்னே
நகர்ந்தார்.
ஜனங்கள் அவனை அவரிடமிருந்து பிரித்தார்கள்.
மந்திரியிடமிருந்து பிரித்தார்கள். தலையில் தூக்கிக்
கொண்டு ஓடினார்கள். வெகுநேரம் வரை அவன் கால்
கள் பூமியைத் தொடவில்லை. சீக்கியர் தோள்களிலும்,
மராட்டியர் தோள்களிலும், வங்காளிகளின் புஜங்களி
லும் கன்னடியர் கழுத்திலும், தெலுங்கரின் தோள்களி
லும்,மதராஸிகளின் உள்ளங்கைகளிலும் அவன் உடம்பு
தள்ளாடியபடி சுங்கச் சாவடியை அடைந்தது.ராணுவம்
உள்ளே நுழைந்து ஜனங்களிடமிருந்து மீட்டுத் தரை
யிறக்கியது. நெருக்கமாய் இயந்திரத் துப்பாக்கிகள்
காவல் காத்தன. துப்பாக்கிகளை மீறி மலர் மாலைகள்
வந்து விழுந்தன. வழி நெடுக ஜனங்கள் கையசைத்தார்
கள். கதர் தொப்பிகளையும்,மேல் துண்டுகளையும் வீசி
னார்கள். நட்சத்திர ஹோட்டலின் லௌஞ்சில் வந்து
தான் டாலி ஆப்ரஹாமையும், ஹாக்கி ராஜகோபாலை
யும் அவன் சந்தித்தான். அம்மாவிடமிருந்து போன்
வந்தது.பேச முடியாமல் திணறினான். அம்மா 'சீக்கிரம்
வாடா...சீக்கிரம் வாடா' என்று கூவுவது மட்டும்
கேட்டது. தொடர்பு அறுந்து போயிற்று. அண்ணாவி
உடைகளை எல்லாம் களைந்துவிட்டு தங்கப் பதக்கம்
மட்டும் கழுத்தில் தொங்க பாத்ரூமில் இருந்தபடி
ஷவரைத் திறந்து விட்டான். சூடான நீர் முதுகை
நனைத்தது.தலையில் இறங்கிற்று. அண்ணாவி காரண
மின்றி குழாயைப் பிடித்துக் கொண்டு விக்கி விக்கி அழு
தான்.சற்று நேரம்அழுதபிறகு உடம்பும்மனசும்மலர்ச்சி
யாய் மாற வெளியே வந்தான். உடுத்திக் கொண்டான்.
விளையாட்டு வீரர்கள்புடைசூழ லௌஞ்சிற்குவந்தான்.
டி. வி. விளக்குகள் கரம் நீட்டி அவனைத் தழுவிக்



கொண்டன. மாலை ஜனாதிபதியின் விருந்துக்கு
வெளியே பெரிய பஸ் காத்திருந்தது. எல்லோரும்
ஏறிக்கொள்ள, கூச்சலும், பாட்டுமாய் ராஜ்பவனுக்குள்
நுழைந்தது.
ஜனாதிபதி உள்ளே நுழைந்ததும் எல்லோரும்
எழுந்து நின்றார்கள், அடுத்த வினாடியே ஹாலின்
இடதுபுறம் பிரதமர் வர, திரும்பி அவர் வருகைக்கு
கரம் தட்டினார்கள். ஜனாதிபதி சாவதானமாய் நடந்து
வந்தார். அவரை அருகே அழைத்து வந்து இவனுக்கு
அறிமுகம் செய்துவைக்க கைகுலுக்கினார், தோளை
யணைத்துக்கொண்டு மின்னுகிற போட்டோக்களுக்குப்
போஸ் கொடுத்தார். உருதுவோ, அல்லது பஞ்சா
சாபியோ கவிதை மாதிரி ஏதோ சொன்னார். அவர்
பேசியதில் 'வெல்டன், என்பது மட்டும்தான் இவ
னுக்குப் புரிந்தது. ஜனாதிபதி மற்றவர்களை நோக்கி
நகர்ந்ததும், பிரதமரின் அண்மை இவனுக்கு உணர்த்
தப்பட்டது. மிடுக்காய் நடந்து வந்த அந்தப்பெண்மணி
யின் முகத்தில் பரவசம் தளும்பியிருந்தது. ஐந்தடி
தொலைவிலேயே கைகளை நீட்டி இவனை வரவேற்
றார். அந்த அழைப்பில் இவன் மனம்கனிந்து குழந்தை
யானான். நாலடி முன்னே நகர்ந்தான். கழுத்தில்
மாட்டியிருந்த தங்கப் பதக்கத்தை அவிழ்த்து அவர்
காலடியில் வைத்தான். அவர் நின்ற நிலந் தொட்டுக்
கண்களில் ஒற்றிக் கொண்டான். முகம்தூக்கி, பெருமித
மும் வாஞ்சையும் தாங்கி அவரைப்பார்த்தான். அந்தப்
பெண்மணி அவன் சிரசில் தன் உள்ளங்கையை வைத்
தார். அவன் சரிந்திருப்பதைக் காணச் சகியாதவர்
போல் அவன் புஜங்களைத் தூக்கி நிறுத்தினார்.
இடுப்பு வளைத்து எழுந்தவன் முகத்தை வருடிக்
கொடுத்தார். முன் சிகையைக் கோதினார். சிரசில்
முத்தமிட்டார். சாந்தமாய் மலங்க மலங்க விழிக்கும்
அண்ணாவியின் முகத்தைப் பார்த்து பிரதமருக்கு என்ன
தோன்றிற்றோ தெரியவில்லை. அவன் முகத்தை தன்

நெஞ்சில் அணைத்துக் கொண்டார். 'என் மகனே, என் மகனே' என்று நடுங்கும் குரலில் அவன் காதோரம் முணுமுணுத்தார். அண்ணாவி அந்த அணைப்பில் நிலை குலைந்து போனான். கண்ணில் நீர் திரையிட பேச முடியாது தவித்தான். தளர்ந்து கிடக்கும் அந்த வாலிபனை பிரதமர் உலுக்கி நிறுத்தினார். ஒரே நிமிடத்தில் தன்னையும் சுதாரித்துக் கொண்டு, அவனையும் சரிப்படுத்தினார். தன் காலடியில் கிடந்த தங்கப் பதக்கத்தைக் குனிந்து எடுத்து எல்லோரும் பார்க்கும்படி உயரக் காண்பித்து அவன் கழுத்தில் மாட்டினார். மடை திறந்தாற்போல் கூட்டம் கை தட்டிற்று. பிரதமர் அவன் கைகளை கோர்த்துக்கொண்டு விருந்து மண்டபத்திற்கு நடந்தார். டி.வி. காமிரா அத்தனை சந்தோஷங்களையும் முழுங்கிற்று. பிரதமர் சகல வீரர்களையும் பாராட்டிப் பேச, அவருக்கு அருகில் உட்கார்ந்திருந்த இவன் தலையைக் கலைத்து இவனைத் தனியே பாராட்ட வெட்கத்தால் தலை கவிழ்ந்தான்.

பிரதமரின் உரைக்குப் பதிலாக இவன் பேசுகையில் ''எங்கள் அன்புத்தாய் இந்த பாரத தேசத்தின் புதல்வி எங்கள் அன்னையின் அணைப்புக்கு முன்னே இந்த ஒலிம்பிக் தங்கப் பதக்கம் மிகவும் சாதாரணம். என்னை எங்கள் பிரதமர் பரிவுடன் சிரசில் முத்தமிட்டது போல, இங்குள்ள வீரர்கள் அனைவரையும் அன்னையார் சிரமம் பார்க்காது சிரசில் முத்தமிடும்படி வேண்டுகிறேன். ஒரு தாயின் ஸ்தானத்திலிருந்து நீங்கள் இவ்விதமாக கொடுக்கும் உற்சாகம், அடுத்த ஒலிம்பிக்கில் பல தங்கப் பதக்கங்கள் பெற நிச்சயம் உதவி செய்யும்'' பிரதமர் இவன் பேச்சைக் கேட்டு பொய்யான களைப்புடன் தலை சாய்த்து கண் மூட, வீரர்கள் கை தட்டினார்கள்.

''இரவு விமானத்தில் சென்னை செல்ல ஏற்பாடு செய்யட்டுமா'' யாரோ காரியதரிசி இவனிடம் கேட்க,



இவன் வேண்டாமென்று மறுத்தான். தமிழ்நாடு எக்ஸ்பிரஸில் முதல் வகுப்பு டிக்கெட் எடுக்கச் சொன்னான். டாலி ஆப்ரஹாமும், ஹாக்கி ராஜகோபாலும், தென்னிந்திய சமையலுக்காக கிருஷ்ணமூர்த்தி ஐயரும் இவனோடு பயணம் செய்ய விருப்பம் தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் புறப்பட்டபோது அண்ணாவி களைப்பாக இருந்தான். அந்தக் களைப்புக்கு நடுவிலேயே ஒரு தங்கப் பதக்கத்தின் கதையை எப்படி ஆரம்பிப்பதென்று யோசித்தான். ரயில் துரிதம் கொண்டது. இவனுள் கட்டுரையும் விரிந்தது.

## 2

வீடு, என் வீடு ஒரு காரணம். செங்கல்லும், சிமெண்ட்டும், இரும்புக் கதவுகளும், மர ஜன்னல்களும் வைத்துக் கட்டப்பட்டாலும், முகம் தெரியும் மொஸைக் இருந்தாலும் என் வீட்டில் ஒரு அழகிருக்கிறது. அமைதியிருக்கிறது. கீதம் இருக்கிறது. இனிமை இருக்கிறது. வீடு மொத்தமும் ஒரு சுகந்தம் வீசுகிறது.

இது அம்மா ஏற்படுத்திய சுகந்தம், சுத்தமாயிருத்தல் அவள் உடன் பிறந்த விஷயம். இதை அவளிடமிருந்து கற்றுக் கொள்வதற்கு அப்பா வெட்கமில்லாதவராய் இருந்தார் என்பதும் ஒரு விஷயம்,

என் அப்பாவும் அம்மாவும்தான் என் வீட்டு சுகந்தம். எனக்கு இப்படி ஒரு வீடு கிடைத்து... இங்கே நான் பிறந்தது என் அதிர்ஷ்டம்.

அப்பா கடன் வாங்கி, நிலம் வாங்கி, நிலம் அடமானம் வைத்து கல் கல்லாகக் கட்டிய வீடு இது. தாலிக் கொடி தவிர, மற்ற நகையெல்லாம் அம்மா இதற்காகக் கழட்டிக் கொடுத்தாள், வீடு ஒன்று வேண்டும் என்று முனைப்பாய் இருந்தாள்.

''என் இரண்டாயிர ரூபா சம்பளத்தில் லஞ்சம் வாங்காம மாமனார் மச்சினர்னு உறவுகளை எதிர் பார்க்காம என்னால வீடுகட்ட முடிஞ்சா, அதுக்கு இது தான் சார் காரணம்'' அம்மாவை பலர் முன்னால் அப்பா புகழக் கேட்டிருக்கிறான்.

ஆனால் அம்மா அப்பாவைப் புகழ்ந்ததில்லை. வேறு எவரிடமும் உயர்த்தி சொல்லியதில்லை.

''நம்ம அப்பா ரொம்ப நல்லவர் இல்லியாம்மா,'' எஸ். எஸ். எல். சி. படிக்கிறபோது அம்மாவைக் கேட்டிருக்கிறான்.

'ஆமாம்' என்று ஒற்றை வரியில் அவள் பதில் சொன்னாள். ''அப்ப நீ ஏன் அவருக்கு ஹாப்பி பர்த்டே சொல்ல மாட்டேங்கற... என்னையும், தம்பியையும் மட்டும் போய் 'சொல்லுங்க சொல்லுங்க'ன்னு தொரத்தறே, நீயும் சொல்லணுமில்லையா?''

''நான் சொல்லிவிட்டேன், காலையிலேயே. நீ போய் சொல்லு'' அம்மா அப்பாவின் அறைக்குள் அவனைத் தள்ளியிருக்கிறாள். அம்மா பொய் சொல்கிறாளோ, தான் சொல்லாமல் தன்னை மட்டும் சொல்லச் சொல்கிறாளோ என்கிற சந்தேகம் இரண்டு வருடம் கழித்துத் தீர்ந்தது.

நாலரை மணி விடியலில் எழுந்து பின்பக்கம்போய் பல் தேய்த்துவிட்டு, வயிறை லேசாக்கிக் கொண்டு ஹாலுக்குள் நுழைந்தபோது அம்மா சமையலறையில் இருந்தாள். இவன் படியேறியபோது விளக்கணைத் தாள். இவன் எழுந்தது தெரியாமல் அப்பாவின் அறைக்குள் போனாள்.

''ஏய் சின்ன பையா, எழுந்திரு'' அப்பாவின் படுக் கையறைக் கதவு விரியத் திறந்திருந்தது. அறைக் குள்ளே விடிவிளக்கு மட்டும் எரிய இவன் நின்று கொண்டிருந்த இடம் கும்மிருட்டாய் இருந்தது.



அப்பா அநேகமாய் கலைந்து கிடந்தார். மெல்ல உலுக்கி எழுப்ப, புரண்டு சோம்பல் முறித்துத் திடுக் கிட்டு விழித்தார். விழித்ததும் அம்மா அவரை இறுக்க அணைத்தாள், முத்தமிட்டாள். ஒரு சிறிய சாக்லேட் கடித்து அப்பா வாயில் போட்டாள். 'மெனி மெனி ஹாப்பி ரிட்டன்ஸ் ஆஃப் த டே' என்று கூவினாள். சாக்லேட் மெல்லும் உதடுகளைக் கவ்வினாள். இவன் திகைத்துப் போனான். நகர்ந்து விடலாமா, வேண் டாமா என்று தடுமாறினான். வெட்கம் கவிந்து ஒரு சங்கடம் ஏற்பட்டாலும் அமைதியாய் நின்று பார்க்கவே விரும்பினான்.

தன் இருப்பை அம்மா பார்த்து விடுவாளோ என் கிற பயமும் இனம் தெரியா பரவசமும் ஒன்றாகி இவனை வதைத்தன. அம்மாவின் இடப்பக்க மார் பகத்தை இறுக்கிக் கொத்தாய் பிடித்துக்கொண்டு அவள் காதோரம் முகம் புதைத்து அசையாமல் கிடக்கும் அப்பா... அவர் பரந்த முதுகையும் தோள் களையும் வருடியபடியே கிடக்கும் அம்மா.

நகர்ந்து விட்டான்.

மனசிலிருந்து இந்தக் காட்சி நகரவேயில்லை.

அறைக்குள் சென்று பத்மாஸனமிட்டு, மூச்சை உள்ளிழுத்து வெளிவாங்கி, உள்ளிழுத்து வெளி வாங்கி சற்று முன் உடம்பில் ஏறிய உணர்வுச்சூட்டை முற்றிலு மாய் அகற்றி உள்ளே நீலமாய் ஒரு அமைதி படியும் வரை பத்மாஸனத்தைப் பிரிக்கவில்லை.

மூளை குளிர்ந்ததும் கேள்விகள் எழுந்தன.

என்ன அது... சற்று முன் பார்த்த காட்சி எத்தகை யது என் அதனால் நான் பாதிக்கப்பட்டேன். ஏன் எனக்கு ஹிம்ஸையாய் போயிற்று. ஏன் என்னில் வெட்கம் கவிழ்ந்தது. எதற்கு பரபரத்தேன். ஏன் உணர்ச்சி வசப்பட்டேன். என்ன அது. என்ன அது...

கேள்விகளை மட்டுமே எந்த கோபமும், புறக் கணிப்பும் இல்லாது சற்று நேரம் ரீங்கரிக்க விட்டான். தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற உத்வேகத்தைத் தவிர, வேறு எந்த குதர்க்கமான குதியலும் இல்லாமல் இருக்க முயன்றான்.

''அது ஒன்றுமில்லை அண்ணாவி'' உள்ளே ஒரு குரல் கேட்டது. ''உன் தாயும் தகப்பனும் சற்று நேரம் சந்தோஷமாய் இருந்தார்கள். அன்பைப் பரிமாறிக் கொண்டார்கள். அப்படிப் பரிமாறிக் கொள்ள அவர்களுக்கு அனுமதி உண்டு.''

''ஆனால் என் முன்னே இவ்விதம் நடை பெறலாமா?''

''டேய் அண்ணாவி, உன் முன்னே அது நடைபெற வில்லை. நடைபெறும் இடத்துக்கு நீ போனாய். திருட்டுத்தனமாய் ஒளிந்து பார்த்தாய்.''

''பார்த்தது தவறா. பார்ப்பதற்கு என்று நான் போகவில்லையே.''

''பார்த்தது தவறில்லை. உன் எண்ணம் ஒளிந்து பார்ப்பதும் இல்லை. உனக்கு பார்க்கக் கிடைத்தது அவ்வளவே.''

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?''

''மற.''

''மறக்க முடியவில்லையே. என் தந்தையின் உடல் முழுவதும் ஒருக்ஷணம் என் கண்ணில்பட்டதே.''

''மற''

''மறக்க முடியவில்லையே.''

''பரவாயில்லை. மறுபடி மறுபடி நினைத்து சந்தோஷப்படு.''

''எப்படி சந்தோஷம்... அதுவும் இதைப்பார்த்து.''



''ஏன் உன் பெற்றோர் சந்தோஷம், உன் சந்தோஷமில்லையா... அவர்கள் காதலாகிக் கசிந்து ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துவது உனக்கு நலலதில்லையா. அவர்கள் நிறைவு, அவர்கள் குதூகலம் உன் மீது படராதா இப்படிப்பட்ட சந்தோஷத்தின் விளைவுதானே நீ. இந்த அண்ணாவி இருபது வயது அண்ணாவி ஆறு அடி ஒரு அங்குல அண்ணாவி பி.ஏ. எக்கனாமிக்ஸ் முதல் வருட அண்ணாவி.''

''ஆமாம்.''

''என்ன ஆமாம், சந்தோஷப்படு.''

''சரி சந்தோஷப்படுகிறேன்.''

''உண்மையாகவா?''

''ஆமாம். யோசிக்க யோசிக்க, அந்தக் காட்சி சந்தோஷத்தைத் தருகிறது. என் அப்பா சந்தோஷமாயிருந்தார். என் அம்மாவும் சந்தோஷமாயிருந்தார். அது எனக்கும் சந்தோஷமாயிருக்கிறது.''

''மற அண்ணாவி.''

''ஏன்''

''அந்த சந்தோஷத்தை மறந்து விடு.''

''ஏன்?''

''உனக்கு வேறு வேலை இருக்கின்றன. நிறைய பொறுப்புகள் இருக்கின்றன. நீ முன்னேற வேண்டாமா? இப்போதே அரைமணி நேர தாமதம் எழுந்திரு. கைகால்களை உதறு. முழுக்க மூச்சுவிட்டு வெளியேற்று. மூளையைக் குளுமையாக்கி சைக்கிளில் போ. உடம்பை வலுவேற்று, மனதைத் தெளிவாக்கு, எழுந்திரு அண்ணாவி.'' உள்ளே கட்டளைகள் குவிந்தன.

''சீனுக்குட்டி தூங்கிட்டியாப்பா. சைக்கிளில் போகலை?'' அறை வாசலில் அம்மாவின் குரல் கேட்

டது. பத்மாஸனத்தை மெல்ல பிரித்தான். உதறி எழுந்தான். கைகளைப் பரப்பி மூச்சு விட்டான்.

"குட்மார்னிங்மா." வாசலில் வந்து வணக்கம் சொன்னான்.

"குட்மார்னிங், பல் தேச்சுட்டு வா. நெஸ்டோ மால்ட் தரேன்." அம்மா நெருங்கி வந்து கை உயர்த்தி அவன் நெற்றிக் குழலை நீவினாள்.

உயர்த்தின கைகளுக்கு அடியில் சற்றுப் பிரிந்த ஜாக்கெட் வழியே திரட்சியான மார்பு வளையங்கள் தெரிந்தன. அம்மா முகத்தில் களைப்பு இருந்தது.

வெட்கப்பட்டான். பின்பக்கம் போனான், வெறுமே கொப்பளித்தான். முகம் துடைத்துக் கொண்டான். கழுத்திலும், புஜத்திலும் நீரை வாரி இறைத்துக் கொண்டான். சிலிர்த்தது. குளிர்ந்தது.

அம்மாவின் கண்களை ஏனோ சந்திக்க முடியாமல் போயிற்று. மிதமான சூட்டில் இருந்த பானத்தை ஒரே மூச்சில் குடித்தான்.

பனியனும், சாக்ஸும், கான்வாஸ் ஷூவும் அணிந்து கொண்டான்.

"வரேம்மா." சுவரைப் பார்த்துக் கூவினான்.

"இன்னிக்கு அப்பாவுக்கு பர்த்டே. போய் விஷ் பண்ணு" அம்மா சமையலறையிலிருந்து கட்டளையிட்டாள்.

அப்பாவின் அறை வாசலில் போய் நின்றான். அப்பா ஒருக்களித்து ஆழமாய் தூங்கிக் கொண்டிருந்தார். இடுப்பு வரை போர்வை போர்த்தியிருந்தது.

'டாடி...ஹேய் டாடி, ஜல்சாதானா இன்னிக்கு. ஹேப்பி பர்த்டே' மனசு ஓசையற்று கூவிற்று. சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.



"அப்பா தூங்கறார்மா."

"எழுப்பி சொல்லிட்டுப் போயேண்டா."

"வேணாம். தூங்கட்டும். தொந்தரவு பண்ண வேண்டாம். வந்ததும் சொல்கிறேன்." அவர் களைப்பு மிகுந்த தூக்கத்தைக் கலைக்காமல் நகர்ந்தது அவனுக்கு பெருமையாக இருந்தது.

ஒற்றைப் பக்கமாய் வாசல் கதவைத் திறந்து வராண்டாவில் சைக்கிளை எடுத்துத் தோட்டப் பக்கம் போய் நிறுத்தினான்.

அம்மா வாசல் கதவருகே வந்து கை உயர்த்தி மறு கதவைத் திறந்தாள். மறுபடி சிவந்த திரட்சியான மார்பு தெரிந்தது,

உள்ளுக்குள்ளே மறுபடி சிரித்தான். வெட்கப்பட்டான். சைக்கிளில் ஏறி உட்கார்ந்து கொண்டான் நகர்த்தி தோட்டக் கதவு திறந்து வெளியேறி, மறுபடி கதவு மூடி வேகமாய் மிதித்தான். தெருவில் இறங்கினான். இருள் இன்னும் இருந்தது. சைக்கிள் ஆடிக் காற்றாய் பறந்தது.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே."

பல முறை பல காலை வேளைகளில் களைப்பாய் சற்று கலைந்த விதமாய் கதவை தாழ் போட்டுக் கொள்ள வரும் அம்மாவைப் பார்த்திருக்கிறான். அந்த அம்மாதான் காரணம். இந்த தங்கப்பதக்கத்துக்கு, அவள் சந்தோஷமான வாழ்க்கை காரணம் இந்தத் தங்கப் பதக்கத்துக்கு.

இருபத்தியோரு வயசில் அப்பாவுக்குக் கல்யாணம். அம்மாவுக்கு 18 வயசு. இரண்டு குழந்தைகள் ஐந்து வருட இடைவெளியில். அண்ணாவியும், அவன் தம்பி வெள்ளைத்துரையும். அதற்குப் பிறகு இருபத்தியெட்டு வயசில் அப்பா வாஸக்டமி செய்து கொண்டாராம். இப்பொழுது ரொம்ப சாதாரண விஷயம். அப்

போது பெரிய பயங்கரம். அப்பா துணிந்து செய்து கொண்டார். அம்மாவோடு கலந்து பேசி குடும்பத்திற்காக, தன் இரண்டு குழந்தைகளுக்காக செய்து கொண்டார்.

இன்னிக்கு நான் நலபடியாக இருக்க காரணம் இதுதான். தலை பின்ன, பாவாடை தைக்க பெண் இல்லையே என்று குறைப்பட்ட தன் மாமியாரிடமிருந்து விவாதம் செய்து கொண்டிருந்தது ஒரு நாள் காதில் விழுந்தது.

என்ன விவேகம், என்ன தெளிவு, எவ்வளவு அன்பு குழந்தைகள் மேல். எத்தனை காதல் மனைவி மீது.

நல்ல அம்மா. நல்ல அப்பா. இதுதான் காரணம். இதுதான் அடிவேர், இந்தத் தங்கப் பதக்கத்துக்கு.

ஹைஜம்ப் பண்ணு, லாங்ஜம்ப் பண்ணு, போல்வால்ட் எடுத்துக்க, எது வேணா செய். பேஸிக் எல்லாத்துக்கும் சைக்கிளிங். அத விடாத. தினம் சைக்கிள் ஓட்டு. பத்து மைலாவது ஓட்டு. தொடை இரண்டும் நங்குன்னு ஆவணும். எழுந்திரு, கடைக்குப் போகலாம். காலேஜ் போட்டிகளில் கலந்து கொள்ள ஆலோசனை கேட்ட அரை மணியில், சைக்கிள் வாங்கப் போனார்கள். சிவப்புக் கலரில் ஃப்ரிவீல் இல்லாத ரேஸிங் சைக்கிள் வாங்கினார்கள். அப்பாவால் அறநூறு ரூபாய் சட்டென்று எடுத்து விசிற முடிந்தது.

''வாங்கறது பெரிசில்லை, சீனுக்குட்டி, நாள் தவறாது ஓட்டணும்'' அம்மா ஒரு முறை சைக்கிள் ஸ்டாண்டு போட்டு உட்கார்ந்து பார்த்தாள்.

''தினம் விடிகாலைல எழுந்து ஓட்டணும்டா.''

''செய்றேம்மா.''

''பல் தேச்சுட்டு என்னை எழுப்பு. நான் நெஸ்டோமால்ட் கலக்கித் தரேன். வெறும் வயத்தோட ஓட்டாதே.''



''கூடா குடுக்காத கற்பகம்''

''ஏங்க.''

''காலங்காத்தால குடலுக்கு ஆவாது. நல்லா ஆற வச்சுக் குடு.''

குழந்தைகள் மீது எத்தனை அக்கறை, ஒரு நாள் கூட அம்மா பிசகியதே இல்லை.

''செவ்வாய்க் கிழமை ராச்சாப்பாடு கிடையாது யாருக்கும்''

''ஏம்மா?''

''நாள் தவறாம கறியும், மீனும் அடைச்சா ஒரு நாள் பட்டினி உடம்புக்கு நல்லது. வர்ற செவ்வாய் நம்ம வீட்ல ராச்சோறு இல்லை, இப்பவே சொல்லிட்டேன்.''

''டேய், பிஸ்கெட் இருந்தா எடுத்தாடா.''

''ஏம்பா!''

''இன்னிக்குன்னு என்னவோ ரொம்பப் பசிக்குது. சோறில்லேன்னுட்டா உங்கம்மா. அவ கண்ணுல படாத எடுத்தா.''

வழியில் பிரித்துக் கொண்டே வந்தது பிசகு. தரையில் தெறித்த பிஸ்கெட் தூள்களை அம்மா பார்த்துவிட்டாள்.

''யார் பிஸ்கட் எடுத்தது?''

''நாந்தாம்மா.''

''ஏண்டா. ஏதும் சாப்பிடக் கூடாதுன்னு சொல்லியிருக்கேனில்லை? முழுப்பட்டினி கிடக்கணும்னு சொல்லியிருக்கேனில்லை. நாக்கு அடக்காத ஜென்மம். எங்க பாக்கெட். கொண்டா இங்க.''

''அவனைத் திட்டாத கல்பகம். நான்தான் கேட்டேன். ரொம்பப் பசியாயிருந்துச்சு.''

"நாப்பத்தி ரெண்டு வயசாச்சு. வெட்கமில்லை? திருடித் திங்கற புத்தியைப் பாரு."

"பசிக்குது கல்பகம்."

"நீ எவ்ளேடா தின்னே?"

"ஒரு பிஸ்கட் தாம்மா."

"உங்கப்பா எவ்ளோ தின்னாரு?"

"இப்பதான் பிரிச்சேன்."

"கொண்டாங்க அதை. இந்தாங்க ரெண்டு பிஸ்கட்... பசிக்குதுன்னு சொல்றதால தரேன். தின்னு தின்னு தொந்தி விழுந்தாச்சு. ஒரு நாள் சாப்பாடு விட முடியலையா. எனக்குத் தெரியாத செவ்வாய் கிழமை இந்த வீட்ல யாராவது பிஸ்கட் பாக்கட் பிரிச்சுத் தின்னா திருகிடுவேன் திருகி." இரண்டு பிஸ்கட்டுகளைக் கொடுத்து விட்டு அப்பா உதட்டை வலிக்கத் திருகிவிட்டுப் போன அம்மா.

எந்த எதிர்ப்புமில்லாமல் சிரிப்போடு அடங்கின அப்பா.

"இன்னும் பசிக்குதாப்பா? என் ரூம்ல ஒருபாக்கெட் இருக்கு. எடுத்தாரட்டா?"

"வேணாண்டா. அம்மா நம்ம நல்லதுக்குத்தான் சொல்றா. வேணாம்."

நினைக்க நினைக்க ஓடும் ரயில் ஜன்னலோரம் உட்கார்ந்து வெறித்துக் கொண்டிருந்தவனின் கண்களில் ஜலம் துளிர்த்தது.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்தது இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள்
வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே."



வாய்விட்டுப் பாடினான். கேட்டுக் கொண்டிருந்த ஹெட் குக் கிருஷ்ணமூர்த்தி ஐயர் 'ஆஹா... ஹா...ஹா' என்று அவன் பாட்டைத் தாளமிட்டுப் பாராட்டினார். அவரும் பாடினார்.

இந்தத் தங்கப் பதக்கத்துக்கு அம்மா காரணம். அப்பா காரணம் என் வீடு காரணம். என் வீட்டின் சந்தோஷம் காரணம்.

அன்பான கட்டுப்பாடுகள் விதித்த அம்மா. அறிவான காரியங்கள் செய்த அப்பா. என்றுமே காதலோடு கனிந்திருந்த வீடு.

என் கடவுளே, கடவுளே உனக்கு வந்தனம். எது கடவுள். எனக்கு கடவுள் என் அம்மாதான் அப்பாதான். என் வீடுதான் என் கோயில்.

வீட்டிற்குப் போய் இருவரையும் நிற்க வைத்து நெடுஞ்சாண்கிடையாய் வணங்க வேண்டும். நெற்றி நிறைய நீறு பூசி அப்பா அணைத்துக் கொள்வார். 'டேய் டேய் அண்ணாவி' என்று விம்முவார். அம்மா விம்ம மாட்டாள். கண்ணில் நீர் மட்டும் தளும்பும்.

"நிமிர்ந்து நேரா உட்கார்டா. பதக்கம் போட்டுக்க. தம்பியை உட்கார வை பக்கத்துல. நிக்கறீங்களே, நீங்களும் உக்காருங்க." உள்ளங்கையில் ஈர வெற்றிலை பரப்பி கற்பூரம் ஏற்றி...

"தாயே சமயபுரத்தா, வெள்ளையம்மா ஏழு கன்னிமாரே கண்ணடி படாத காப்பாத்துங்கடி. சொல்லடி படாத காப்பாத்துங்கடி" சப்தமிட்டுக் கூவுவாள்.

வாசலில் கற்பூரம் எறிந்து எச்சல் துப்புவாள். இவர்களையும் ஓரடி விலகி உட்காரச் சொல்லி தரையில் துப்பச் சொல்வாள். பிறகு ஒருவேளை அண்ணாவியை அணைத்துக்கொண்டு அழுதாலும் அழலாம்.

''பெத்த வயிறு குளிர்ந்ததுடா சீனுக்குட்டி'' விம்மினாலும் விம்மலாம்.

எல்லோரும் தூங்கின பிறகு, ஊர் கூட்டம் கலைந்த பிறகு எல்லா விளக்குகளையும் அணைத்து விட்டு அண்ணாவி அயர்ந்து தூங்குவதைப் பார்த்து விட்டு மெல்ல சப்தமெழாமல் அப்பாவின் அறைக்குப் போகலாம்.

''என்னடி முறைக்கிறே'' சந்தோஷத்தோடு அப்பா அவளைப் பிடித்து இழுக்கலாம்.

''ஒண்ணுமில்லங்க.''

''உம் புள்ளைக்கு முத்தம் குடுத்தியே பதக்கம் பார்த்ததும்.''

''ஆமா குடுத்தேன்.''

''எனக்கும் குடுடி.''

''உங்களுக்கெதுக்கு முத்தமும் முகரையும்.''

''நான் இல்லாம உனக்குபுள்ளை எங்கேடி நாயே''

''ச்சி... நோவுது. கையெடுங்க.''

''ஏன் எடுக்கணும். என் சொத்து. என் ப்ராபர்டி நான் என்ன வேணா பண்ணுவேன்.''

''இந்த ஆட்டத்துல ஒண்ணும் குறைச்சலில்லை.'' அம்மா திமிறலாம்.

''ஏன் வேணாமா, சரி போ.'' தொப்பென்று அப்பா படுக்கையில் தள்ளலாம்.

''ஐயாங்... வேணும்.''

''என்ன வேணும்?''

''சொல்ல மாட்டேன்.''

''சொல்லு என்ன வேணும் சொல்லு. சொல்றியா இல்லை கிள்ளட்டுமா...'' படுத்துக் கிடப்பவளைப் பாய்ந்து இறுக்கிக் கொண்டு கிள்ள...



''சாகற மட்டும் இந்த சந்தோஷம் வேணும். இந்த சந்தோஷத்தோடயே பூவும் பொட்டுமா பொசுக்குன்னு போயிடணும்.''

''சந்தோஷமான நேரத்துல ஏண்டி சாவப் பத்திப் பேசற.''

''உங்களைக் கைபிடிச்ச நாள்லேர்ந்து சந்தோஷமா இருக்கேன். வீடும், வாசலும், மதிப்பும் மரியாதையுமா இருக்கேன்.''

''இதெல்லாம் உன்னால வந்ததுதாண்டி. எனக்கென்ன தெரியும்?''

''இல்லேங்க. இது நீங்கக் குடுத்ததுதான். பொண்டாட்டிய பொண்டாட்டியா வச்சிருந்த குணம். பொம்பளைக்கும் பொறுப்பு உண்டுன்னு வச்ச குணம்''

''மேல பேசினே, வாய் மேலயே போடுவேன்.''

''போடுங்க பார்க்கலாம்.''

''போடட்டுமா?''

''ஐயோ... வேண்டாம்... பசங்க முழிச்சுக்கப் போவுது. இன்னிக்கு என்ன... இந்த ஆட்டம் போடறீங்க...''

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி

அண்ணாவி சட்டென்று விம்மினான். முகத்தைப் பொத்திக் கொண்டான். குலுங்கிக் குலுங்கி அழுதான். டாலி ஆப்ரஹாம் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். கிருஷ்ணமூர்த்தி ஐயர் அணைத்துக் கொண்டார். ஹாக்கி ராஜகோபாலன் ''கண்ணா... கண்ணா... மனசு தளராதடா'' தட்டிக் கொடுத்தார்.

''ஒரு பெரிய பிரமிப்புதான் இது. நானே அழுதேன். இவன் கழுத்துல தங்கப் பதக்கம் போடறதப்

பாத்துட்டு தாரை தாரையா ஜலம்விட்டு அழுதேன். சந்தோஷத்தின் உச்ச கட்டம் அழுகைதான். அம்பி, மனசு சரி பண்ணிக்கோ. ஈஸி, ஈஸி...'' கிருஷ்ண மூர்த்தி ஐயர் நெருக்கிக்கொண்டார்.

அவன் சந்தோஷம் எதைக் குறித்து என்பது அவர் களுக்குத் தெரிய நியாயமில்லை. பூவின் ஆதாரமான வேர்கள் என்றென்றும் பூமிக்கடியில் அமைதியாய் அறிமுகமின்றி அதன் வேலையைச் செய்து கொண் டிருக்கும்.

அவன் வேர்கள் சென்னையில் அவனை எதிர் பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றன.

## 3

ஆனால் கடவுள் என்று பெரிய படங்கள் வீட்டில் ஏதுமில்லை. பூஜை புனஸ்காரங்கள் என்று பரபரப்பு தில்லை. சமையலறையில் ஷெல்ஃபுக்கு நடுவே சமய புரம் மாரியம்மன் படம். மஞ்சளில் கீறின ஸ்வஸ்திக். ஜடா முடியோடு சம்மணமிட்ட பெரியவர் படம். சின்ன மாக்கல் பிள்ளையார் பொம்மை. அம்மா மட்டும் வெள்ளிக் கிழமை மணியடித்து பூசை செய்வாள். கற்பூரம் ஏற்றி நமஸ்கரிப்பாள். யாரையும் வரச் சொல்லி வற்புறுத்தமாட்டாள்.

ஹாலில் நாலுக்கு இரண்டடி அலர்மேலு மங்கை திருப்பதி வெங்கடாஜலபதி படம். வீடு கட்டியதும் வாங்கி வைத்த படம்.

அம்மா குடும்பத்துக்கு திருப்பதி சாமியே குல தெய்வம். அப்பாவுக்கு சமயபுரம் மாரியம்மன். சீனு குட்டி என்று அம்மா அண்ணாவியை அழைப்பது தன் குடும்ப குலதெய்வம் பெயரை ஒட்டியே. அண்ணாவி தாத்தாவின் பெயர். மாமனார் பெயர் மருமகள் உச்ச ரிக்கக் கூடாது என்பதாலேயே அண்ணாவி அம்மா வுக்கு மட்டும் சீனுக்குட்டி.



வளர்ந்த பிறகு கோவில் யாத்திரை என்று போன தில்லை. அப்படிபோனால் குழந்தைகளை அழைத்துப் போவதில்லை. 'பிக்னிக்காக போறோம். எதுக்குக் கும்பல் கூட்டிக்கினு'

''நானும் சாமி கும்பிட வரேம்பா.''

''உனக்கும் சேர்த்து நானே கும்பிடறேன். நீ உன் படிப்பை கவனி'' அம்மா தீர்மானமாய் சொல்லி விடு வாள். தெய்வ சந்நிதிகளுக்கு கும்பலாய் போவதில் சிந்தனை ஒருமிப்பு கலையும் என்பது அவள் வாதம்.

ஆனால் நாலு வீடு தள்ளி ஒரு சின்ன பிள்ளையார் கோவில் இருந்தது. கோவில்கூட இல்லை. வெறும் மூணு பக்கத் தடுப்பு. உள்ளே ஓரடி பிள்ளையார். சைக்கிள் ரிக்ஷா ஸ்டாண்ட் பிள்ளையார்.

விடிகாலை சைக்கிள் ஏறியதும் சரக்கென்று ஒரு நிமிடம் அங்கு ப்ரேக் போட்டு நிற்பான். ஒரு வினாடி பிள்ளையாரைப் பார்ப்பான். பிறகு வேகமாய் 'மிதியல் துவங்கும். கும்பிடுதலோ, தலையில் குட்டிக் கொள்ளு தலோ இல்லை. ஒரு பார்வை, 'விநாயகரே' என்று ஒரு முனகல். இவ்வளவுதான் பிரார்த்தனை. பிரார்த் தனைகூட இல்லை. ஒரு அனுமதி வாங்குகிற மாதிரி... 'வண்டிய வேகமா ஓட்டப் போறேன், கூட இருந்து கவனிச்சுக்க' என்கிற மாதிரி ஒரு ஸ்நேகிதமான வேண்டுகோள். டெல்லிக்குக் கிளம்புகிறபோதுகூட டாக்ஸியிலிருந்து எட்டி ஒரு முறை பார்த்தான். 'தொலைதூரம் போறேம்பா' என்று முனகினான். பிள்ளையார் அசையாது உட்கார்ந்திருந்தார்.

டெல்லியில், கடல் கடந்த விமானப் பயணத்தில் அங்கு போய் செய்த ரிகர்ஸலில், ஸெமிஃபைனல்ஸில் பிள்ளையார் ஞாபகம் வரவில்லை. ஃபைனல்ஸில் கடைசி சான்ஸ் கொரியனும் அமெரிக்கனும் தோற்று இவனுடைய கடைசி முறை வருகையில் உள்ளே

வயிறு குழைந்து, கால்கள் தளர்ந்து உடல் முழுவதும் ஒரு நடுக்கம் பரவிற்று.

ஏழு அடி ஏட்டே முக்கால் அங்குலம் உயரம் தாண்டினால் தங்கப்பதக்கம். திடலில் ஏதோ ஓட்டப் பந்தயம் ரிலே ரேஸ். கூட்டம் அமெரிக்கப் பெயர் களைச் சொல்லி கொடிகளை அசைத்து ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

ஜப்பானிய நடுவர் நரைத்த முதியவர். கொச்சை யான ஆங்கிலத்தில் 'தயாரா' என்று கொடிகளை சுருட் டியபடி கேட்டபோது, 'இல்லை' என்று தலையசைத் தான்.

உள்ளே அமைதியாகவில்லை. குழப்பமும் பயமும் கவிழ்ந்தன ஊர் முழுக்கச் சிரிக்கும். 'தத்திப் பய' என்று பேசும். நம்பாளுங்க நல்லா துண்ணுவாங் கப்பா. இதுக்கெல்லாம் லாயக்கில்லை உலக்கை மாதிரி வளர்ந்துட்டா போறுமா?

எடுத்தவுடன் ஏன் இப்படி தோல்வி சிந்தனையிலே ஆக்கிரமிக்கிறது. தோற்ற பிறகு ஊர் என்ன பேசும் என வதைக்கிறது.

என் ஊர் அந்த விதம். ஜெயித்தால் சிலை எடுப் பார்கள். தோற்றால் குழி வெட்டிப் புதைப்பார்கள். வெற்றியோ தோல்வியோ எதுவுமில்லாதது ஒரு அன்னிய உணர்வு. இது விளையாட்டு என்கிற நேச மில்லாத நாடு.

'செய் அல்லது செத்து மடி' என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிற மக்கள். செய்ய முடியாத வனை இவர்களே பேச்சால் குத்திக் கொன்று விடு வார்கள்.

''தயாரா'' மறுபடி ஜப்பானிய முதியவர் கேட்க விழித்தான்.

'கோவிந்தா' என்று உள்ளே அலறினான்.



கால்களை மாற்றி மாற்றி உதைத்து அசைத்துக் கொண்டேயிருந்தான்.

ஜெயிக்கணும். ஜெயிப்பேன்.

தாண்டணும். தாண்டுவேன்.

நிச்சயம் தாண்டுவேன்.

ஏய்ய்...என்கிற வெறிக் கூச்சலோடு கிளம்புவேன். இரை கிழிக்க பசியோடு ஓடும் புலியைப் போல ஓடு வேன் உடல் மொத்தமும் தூக்கி இதுஎன்னுது இல்லை என்று வானத்தில் விசிறுவேன்.

முடியும். என்னால் முடியும்.

அந்தக் கடைசி தப்படி கிடைக்க வேண்டும். தூக்கி உடலை விசிறி அடிப்பதற்கு முன்னால் தொடும் நிலப் பரப்பும், என் கால் அழுத்தமும் கள்ளமின்றி சேர வேண்டும். அந்த அளவு சரியானதாயின் நான் ஜெயிப் பேன். அந்தக் கடைசி மிதி வலுவு கொண்டுவிட்டால் தாண்டி விடுவேன்.

ஐயா... ஐயா... ஐயா... உள்ளே கண் மூடி கெஞ்சினான். கடைசி தப்படிக்கு இறைஞ்சினான்.

உள்ளே சதுர சிமெண்ட் பெட்டிக்குள் பிள்ளையார் உருவம் ஒரு க்ஷணம் நின்றது. கை கூப்பினான். விழுந்து நமஸ்கரித்தான். 'என்னைக் காப்பாத்து' என்று வேண்டினான்.

''தயாரா'' மறுபடி குரல் கேட்டது.

தலையசைத்தான்.

குதிரை போல் ஷூக்களை அழுந்தத் தரையில் தேய்த்துக் கொண்டான். மஞ்சள் கொடி எதிரே தெரிந்தது. சகலமும் தயார் என்று அர்த்தம்.

"ரைட். நீ போகலாம்." ஜப்பானியர் அனுமதித்தார்.

ஒன்று, இரண்டு, மூன்று.

அகலத் தாவலாய் ஓட்டம். உடம்பில் சூடு பரவிற்று. எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று. வேகம் உச்சகட்டத்திற்குப் போயிற்று. பதினாலு, பதினைந்து, பதினாறாவதில் தடம் கிடைத்தது.

ஹியோய்ப்ப்ப்...

உடம்பு முழுவதும் வெளியே விசிறினான்.

தலையும் பிடரியும் தாண்டின.

முதுகும் பிருஷ்டமும் தாண்டின.

தொடைகள் தாண்டின.

கால் நோக்கினான்.

ஆடு தசையில் மெல்லிசாய் அலுமினியக் கம்பி முத்தமிட்டது. பயந்து குதிகால்களை இன்னும் உள் வாங்கினான்.

தலை நுரைபஞ்சுப் பொதியை நோக்கிப்போனது. முதுகு வளைத்து, கரல்களின் கனத்தை எதிர்ப்புறம் தள்ள, தலை நிமிர்ந்து கைகள் பொதியை நோக்கி அனிச்சையாய் நீண்டன. முழங்கால்கள், வயிறு, முன்கை, முகம் மொத்தமும் பொதிக்குள் அமிழ்ந்து இருட்டாகி வெளியே வந்தான்.

அலுமினியக் கம்பி மெல்ல ஆடிக்கொண்டிருந்தது.

எல்லாரும் அதையே கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

நின்று விட்டது.

வெளியே சகலரிடத்திலும் ஒரு பேரமைதி படர்ந்திருந்தது.



'தாண்டி விட்டேனா.' கேட்க பயமாய் இருந்தது.

இவனுக்கு முன் தாண்டிய கொரியன் முகத்தில் அறைந்து கொண்டு உட்கார்ந்தபோதுதான் இவன் ஜெயித்தது இவனுக்குத் தெரிந்தது. கம்ப்யூட்டர் முடிவு சொல்ல முப்பது விநாடி எடுத்துக் கொண்டது. மூன்று திசைகளும் சுழன்று 'பாஸ்' என்று எரிந்தது.

"கடவுளே" இவன் வாய்விட்டுக் கூவினான். பொதியில் மண்டியிட்டு இடுப்புவரை அமிழ்ந்து, வானத்தை நோக்கி கைகூப்பினான்.

"ஓஹோ" என்று ஒரு பெருங்கூச்சல் இவன் ஜெயித்தலை ஏற்றுக் கொண்டது.

டாலி ஆப்ரஹாம்தான் முதலில் ஓடி வந்தாள். கிருஷ்ணமூர்த்தி ஐயர், சந்துராய், சந்துராம்ஹெக்டே, டாக்டர் பம்பேந்தர்சிங் எல்லோரும் ஓடி வந்தார்கள். கட்டுப்பாடுகளை மீறி ஹைஜம்ப் ஏரியாவில் நுழைந்தார்கள். வெட்கமின்றி மிஸ். ஆப்ரஹாம் இவனைக் கட்டிக் கொண்டாள்.

லாஸ் ஏஞ்சல்ஸ் 1984 ஒலிம்பிக் பந்தயத்தில் இந்தியா ஒரு தங்கப்பதக்கம் வாங்கியது. உயரம் தாண்டுதலில் ஒரு இந்தியன் உலகத்தின் முதலாவதாய் நின்றான்.

அவன் இந்தியாவின் தென்கோடி மூலையில் பிறந்தவன். காவிரிக் கரையில் வளர்ந்தவன். அவன் வீடு சென்னையில் இருக்கிறது. நகரின் தென்புறத்தில் ராஜா அண்ணாமலைபுரத்தில் முதல் குறுக்குத் தெருவில் இடப்பக்கம் பதினோரு வீடுகள் தாண்டி இருக்கிறது. அவன் வீட்டிலிருந்து நாலு வீடு தள்ளி ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. கோவில்கூட இல்லை.

மூன்று பக்கம் கல் வைத்து கட்டின நாலடி உயரமுள்ள இடம், அதன் நடுவே ஒன்றரையடி பிள்ளையார். சைக்கிள் ரிக்ஷாஸ்டாண்ட் பிள்ளையார்.

சென்னையில் இறங்கி டாக்ஸி பிடித்து வீட்டிற்குப் போகும் முன் அவன் பிள்ளையாரை தாண்டித்தான் போக வேண்டும்.

அவன் டாக்ஸியை நிறுத்தச் சொல்லுவான். இறங்கி ஷுக்களைக் கழற்றி விட்டு, சாக்ஸ் காலுடன் கோவில் எதிரே நிற்பான். கையைக் கூப்புவான். ஒருநாள் கூட அவன் அவரெதிரே கை கூப்பியதில்லை. அன்று கை கூப்புவான். விழுந்து நமஸ்கரிப்பான்.

ஷுக்களை மறுபடி பொருத்திக் கொண்டு வண்டியை வரச்சொல்லிவிட்டு வீடுநோக்கி நடப்பான்.

மனசு ஒரு நன்றியில் நனைந்திருக்கும். உள்ளே ஈரம் படர்ந்து அது கண்களில் ஏறும். விழிகள் மினு மினுக்கும்.

அவனுக்கு ப்ரேயர் செய்யத் தெரியாது. பாட்டு, தாளம், மந்திரம், நியதி எதுவும் தெரியாது. 'தேங்க்யூ' என்று சொல்ல மட்டும் தெரியும். நடந்து வீட்டுப்படிகள் ஏறும் வரை பலநூறு முறைகள் அந்தப் பிள்ளையாருக்கு நன்றி சொல்லுவான்.

அந்த பிள்ளையார் மாதிரி மறைமுகமாய் மௌனமாய் அவனுக்கு நிறைய பேர் உதவி செய்திருக்கிறார்கள். இவன் தங்கப்பதக்கம் வாங்கக் கூடியவன் என்கிற யோசிப்புகூட இல்லாமல் தங்கப்பதக்கம் வாங்குவதற்கு உதவி செய்திருக்கிறார்கள்.

கோவில் நெடுக உட்கார்ந்து கொண்டிருக்கும் பிச்சைக்காரர்களை முகம் பார்க்காது காசு போட்டு விட்டுப் போகிற தர்மவான் மாதிரி, இவனிடமிருந்து எதுவும் எதிர்பாராது தாங்கள் தரும் சந்தோஷத்தை, தானம் கொடுக்கிற கர்வத்தை மென்று கொண்டே சாவதானமாய் இவனைக் கடந்து போயிருக்கிறார்கள்.

அந்தப் பால்காரப் பையன், அப்படித்தான் போனான்.



ஒவ்வொரு நாள் விடிகாலையும், ஒரு துருப்பிடித்த சைக்கிளில் பின்பக்கம் முப்பதுலிட்டர் கேன் பாலும் முன் பக்கம் இரண்டு லிட்டர் கேனும் கயிறுபோட்டு இறுக்கியபடி பால் குவளைகள் வீல் கார்டில் மோதுகிற கடகட சப்தத்தோடு ஓட்டிக் கொண்டு போவான்.

ஒல்லியான பயல். பதினைந்தா, பதினாறா, வயசு தெரியவில்லை. முதிர்ந்த முகம். காக்கி அரைக்கால் சட்டை. சில சமயம் பனியன். சில சமயம் பழுப்பேறின வெள்ளைச் சட்டை. சில சமயம் அதுகூட இல்லாமல் கறுப்பு உடம்பு. முதுகு எலும்புகள் துருத்திக் கொண்டிருக்கும் உடம்பு.

''என்னாண்ணா சைக்கிள் ரேஸுக்கு ஓட்றியா?'' ஒரு நாள் கூடவே பின் தொடர்ந்தபடி கேட்டான்.

''என்ன தம்பி'' இவன் வேகம் குறைக்க, நெருங்கி வந்தான்.

''அண்ணன் சைக்கிள் ரேஸுக்கு ஓட்டுதா?''

''இல்லப்பா.''

''ஹ... பொய் சொல்றியே இது ரேஸுக்கு ஓட்ற சைக்கிள் தானே.''

''ஆமா.''

''தினம் தினம் ஓட்றேயில்ல...''

''ஆமா.''

''அப்ப ரேஸுக்கு இல்லாத... ஹ... சும்மாங்காட்டியும் வுட்றியே.''

''சும்மா தான் ஓட்றேன் தம்பி.''

''ஹ...பொய்யி.''

இவனிடம் தான் எதைச் சொன்னாலும் உடனே பொய்யின்னுதான் பதில் சொல்லுவான். பதில் சொல்லாமல் சிரித்தபடி முன்னேறினான்.

"என்ன ஸ்பீடு காட்டற... சொல்லிட்டுப் போ."

"ரேஸெல்லாம் இல்லப்பா."

"ஹ... பொய்யி."

மறுபடி இவன் சிரித்தபடி வண்டியை மிதித்தது அவனுக்கு ஆத்திரமூட்டியிருக்க வேண்டும் வேகமாய் முன்னேறினான், அவன் அருகே நெருங்கினான்.

"எங்கிட்டே ரேஸுக்கு வர்றியா?"

இவன் பேசாது வண்டியை ஓட்டினான்.

"என்னக் கெலிச்சுடு பார்க்கலாம்."

'சடாங் சடாங்' என்று பால் குவளைகள் சாலைப் பள்ளங்களில் சைக்கிளில் மோத, எகிறி ஆடின.

"என்னை பீட் பண்ணிடுவியா. ஒரு ரூவா பந்தயம். என்னை கெலிச்சிடுவியா."

இவன் சரியென்று தலையசைத்தான். மௌபரீஸ் ரோடில் இரண்டு சைக்கிள்களும் காற்றாய் பறந்தன. பால் நிறைந்த முப்பது லிட்டர் கேன், முன் பக்கம் இரண்டு லிட்டர் கேன்கள் இரண்டு. அவன் சைக்கிள் அலறியது. விதவிதமாய் ஒலிகளை எழுப்பியது.

பையனுக்கு மனசிலே வலுவு. ஒவ்வொரு மிதியிலும் இவனை நெருங்கி வரும் ஆத்திரம். முன்னேறுகிற உந்துதல். சைக்கிள் நிலை கொள்ளாமல் நாலடி அகல அலையல் செய்தது. குவளைகள் கதறின.

இவனும் முழு மிதியல் காட்டினான்.

பையனும் வெறியாய் தொடர்ந்தான்.

இவன் வேகத்தின் உச்சியில் இருந்தபோது பையன் இவன் பின் சக்கரத்தைக் கடந்தான். இவனைக்கடந்து விடுகிற வேகத்தை ஸீட்டில் அமராமல் மொத்த உடல் பலத்தையும் பெடலில் செலுத்தி முன்னேறிக் கொண்



டிருந்தான். மூன்று நிமிடமாய் இவனுக்கு நெருக்கம் காட்டியே வந்தான்.

அண்ணாவிக்கு இவன் வேகம் அதிசயமாய் இருந்தது. இவன் ஜெயிப்பு ஆத்திரம்கவலையாய் இருந்தது.

'சரி ஒழியட்டும்,' மெல்ல வேகத்தை மட்டுப்படுத்த பையன் சரக்கென்று முன்னேறினான். பத்தடி தொலைவு போய் அண்ணாவியைத் திரும்பிப் பார்த்தான்.

"அ...ம்மாள...ஜெயிச்சிட்டேன் பாத்தியா. அ...ஹ...ஹ நம்மகிட்ட நடக்காது வாத்தியாரே. என்னைத் தாண்டு பார்க்கலாம்."

திரும்பிக் கூவின நேரம் தெருவின் பிரிதல் வர நடுவே கட்டப்பட்டிருந்த வெள்ளைக் கருப்புப் பட்டை கல்வாட்டில் நங்கென்று அந்தப் பையன் மோத, பையன் கைகளைப் பிரித்து வானத்தில் பறந்தான். தரையில் 'பொத்' தென்று பல்லி மாதிரி விழுந்தான்.

அண்ணாவி சைக்கிள் உடனே நின்றது. அண்ணாவி இறங்கி ஓடினான்.

தெருவெங்கும் பால். வேட்டியை ஈரத்தில் நனைத்து வீசிப் போட்டது போல் இருந்தது. கருப்புத் தார் ரோடில் பளீரென்று தெரிந்தது. குவளைகள் நசுங்கிக் கிடந்தன. சைக்கிள் தாறுமாறான கோணலில் கிடந்தது. பையன் தரையில் முனகிக் கிடந்தான். அண்ணாவி அருகே ஓடிவர, எழுந்து உட்கார்ந்தான்.

அக்குளில் கை கொடுத்துத் தூக்க, நின்றான். கால்களை உதறிக் கொண்டான். விந்தியபடி நடந்து நடைபாதை அருகே வந்தான். திரும்பி அண்ணாவியைப் பார்த்தான்.

"ஜெயிச்சிட்டேன் பாத்தியா."

"சரி...பாலு மொத்தமும் போச்சேடா. உதைக்க மாட்டாங்களா வீட்ல."

''மாடு முட்டிடுச்சுன்னு சொல்லிடுவேன்.''

''உனக்கு எங்கியாவது அடிகிடி பட்டுதா?''

''சாஸ்தி இல்லை. வழுட்டிக்கிச்சு. வுட்டுரு கையை விட்ரு. நானே நிக்கிறேன். உன்ன ஜெயிக்கணும்னு ரொம்ப நாளா ஒரு டைம் பாத்துக்கினு இருந்தேன். இன்னிக்கு ஜெயிச்சிட்டேன்.''

''வூட்ல திட்ட மாட்டாங்களா?''

''மாடு முட்டிருச்சுன்னு சொன்னாப்போச்சு போ.''

''நோவலை...? எப்படி போவ வூட்டுக்கு?''

''நோவுதுதான், மொள்ளத் தள்ளிக்கினு போயிடுவேன்.''

''சொந்த மாடா?''

''இல்ல, ஒரு மாட்டுக்காரர்கிட்ட கூலி வேலை செய்யறேன்.''

''கொன்னுடப் போறாங்க உன்னை.''

''மாடு முட்டிடுச்சுன்னா வுட்டுடுவாங்க.''

''உக்காந்துக்கடா.''

''என்ன செய்யப் போறே.';

வண்டியை நிமிர்த்தி ஹாண்ட்பார் பெண்டைச் சரி செய்து வீல் கார்ட் வளைவை நேராக்கியபோதும் வண்டி சுலபமில்லாது 'க்றீச் க்றீச்' என்று கதறியது. உள்ளே பேரிங்குகள் உடைந்திருக்க வேண்டும்.

''பால் மொத்தமும் வேஸ்ட். சரியான முட்டாள்டா நீ.''

''சரி. சரி, என் துட்டு குடு.''

''என்ன துட்டு.''



''ஒரு ருவா. பந்தயத் துட்டு.''

''சரியான லூஸ்டா நீ. நாப்பது ரூபா பாலை கவுத்துட்டே. ஒரு ரூபாய்க்கு அலையறியே.''

''அ...இது பந்தய துட்டு. பேச்சுன்னா பேச்சுதான். குடுத்துரு.''

அண்ணாவி தன்னிடமிருந்த ஒரே ஒரு ஐந்து ரூபாய் தாளை எடுத்துக் கொடுத்தான்.

''அடிச்சுக்கொல்லப் போறாங்க, உன்னை மாட்டுக்கார வூட்ல.''

''அவுரு அடிக்க மாட்டாரு. அந்த பொம்பளை தான் சொம்பாலயேசாத்தும். சோறு இல்லைன்னுரும். நான் அழுது புலம்பி சோறு வாங்கித் துன்னுடுவேன்.''

அண்ணாவி வியப்பிலும், கவலையிலும் நின்று கொண்டிருக்க, பையன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு விந்தியபடி போனான்.

அந்தப் பையனை அதற்குப் பிறகு பார்க்கவில்லை.

மாட்டுக்காரர் வீட்டில் அடித்து நொறுக்கியிருப்பார்களோ... தெரியவில்லை. வீடு எது என்று புரியவில்லை. வேலையை விட்டு துரத்தியிருக்கலாம். இல்லை அடி தாங்காமல் இவனே எங்காவது ஓடியிருக்கலாம்.

அந்தப் பையன் நினைவு ஒவ்வொரு நாள் விடியற்காலையிலும் வந்தது. பயிற்சியின் போது சைக்கிள் வேகம் மட்டுப்படுகிற போதெல்லாம் அவன் துரத்துவதாகவே ஒரு நினைப்பு வந்து,பத்து மைல், பதினைந்து மைல் தொலைவே ஒரே சீரான வேகத்தில் கடக்க முடிந்தது. தொடைகளில் திண்மை கூடிற்று.

லாஸ் ஏஞ்சல்ஸில் சைக்கிள் ரேஸ் பார்க்கிறபோது இந்தப் பையனைப் பற்றி ஒரு விம்மல் வந்தது.

ஒரு பழைய ஓட்டை சைக்கிளில் விந்தை காட்டிய அந்தப் பையனை, எலும்பும் தோலுமான அந்தப் பையனை முப்பத்திநாலு லிட்டர் பால் கனத்துடன் பேயாய் சைக்கிள் மிதித்த அந்தப் பையனை, சாலை சரியில்லா இடத்தில், என் ரேஸர் சைக்கிளுக்கு, என் பல நாள் பயிற்சிக்கு சவால் விட்ட அந்தப் பையனை, ஜெயிக்க வேண்டும் என்கிற வெறி உள்ள அந்தப் பையனை, சரியானபடி வளர்த்து, சரியானபடி உணவு கொடுத்து, சரியானபடி பயிற்சி கொடுத்து சரியான நேரத்தில் அனுப்பினால்...

அமெரிக்கனாவது, ஐரோப்பியனாவது... ஆஸ்திரேலியனாவது... எல்லோரையும் கண்ணில் விரல் கொடுத்து ஆட்ட மாட்டானா?

பையா... அடேய் சின்னப் பையா... லாஸ் ஏஞ்சல்ஸ் எங்கேயிருக்கிறது தெரியுமா உனக்கு. இந்த சைக்கிள் ரேஸெல்லாம் டி.வி.யில் பார்க்கவாவது முடிந்ததா?

அந்தப் பால்காரப் பையன் போல எத்தனை ஆயிரம் பையன்கள், எத்தனை லட்சம் பையன்கள் என் தேசத்தில் கிழிந்த நிக்கரும், சட்டையில்லாத உடம்பும், எண்ணையில்லாத தலையுமாய், ஆனால் மனசு நிறைய ஜெயிக்கும் ஆசையோடு இருக்கிறார்களோ தெரியவில்லை.

பையா... நான் சென்னைக்கு வந்ததுமே உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறேன். உனக்கு என்னுடைய சைக்கிளைப் பரிசாய் தர விரும்புகிறேன்.

பையா... இந்தக் கட்டுரையை நீ படிப்பாயா? உனக்குப் படிக்கத் தெரியுமா? படிக்கிற பழக்கம் உண்டா? இல்லை பிறந்ததிலிருந்தே மாட்டுக்காரர் வீட்டில் கூலி வேலைதானா?

பையா... பையா... என் சின்னப் பையா, உன் பெயரைக்கூட நான் கேட்டுக்கொள்ளவில்லையே.



எனக்கு அந்தப் பையனைப் பார்க்க வேண்டும். அவனோடு தோள்மீது கை போட்டு ஒரு போட்டோ எடுத்துக்கொள்ள வேண்டும்.

எனது தொடையின் திண்மைக்கு அந்தப் பையன் காரணம். அந்தத் திண்மைதான் இந்தத் தங்கப் பதக்கத்துக்குக் காரணம்.

## 4

உயரம் தாண்டுபவனுக்குத் தொடைகள் திண்மை மட்டுமே போதாது. முதுகு வலியும், புஜபலமும் வேண்டுமெனில் அதைக்காட்டிலும் முக்கியமாக ஒரு விஷயம் உண்டு. தொடைகளுக்கு நடுவே உள்ள விஷயம்.

சிலர் முகம் சுளிக்கலாம். ஆனால் கட்டுரையில் எழுதித்தான் ஆகவேண்டியிருக்கிறது. அந்த உறுப்பைப் போல இந்த விஷயமும் முக்கியமானது. எல்லா விளையாட்டு வீரர்களுக்கும் பந்தயமில்லாமல் பயிற்சியாய் விளையாடுபவர்களுக்குக்கூட அவஸ்யமானது.

ஆண்களின் உறுப்பு உடலிலிருந்து சற்று விலகியிருக்கும்படி அமைந்திருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. சௌகர்யங்கள் உண்டு. விந்தின் குளுமை கருதி ஒரு குளிர் சாதனப் பெட்டி போல விரைகள் உடல்கூடு படாமல் விலகியிருக்கின்றன.

அவைகளை ஒரு விளையாட்டு வீரன் மரியாதையுடன் வைக்காது போனால், விபரீதங்கள் ஏற்படக்கூடும். ஒரு சின்ன விரல் சுண்டுதல்கூட தாங்காத இடம் ஆண் உறுப்பு.

ஹை ஜம்ப் தாண்டுகிறவன் கால்பரப்பி தாண்டுகிறபோதோ, இல்லை தரை இறங்குகிறபோதோ, இல்லை வருகிற வேகத்தில் கால் பின்னி தொடைகள் உராய்கிறபோதோ விநாடி நேரத்தில் காயம் படலாம். உயிர் துடிக்கிற வலியை அனுபவிக்க நேரலாம்.

விரைகளைப் பாதுகாப்பாய் வைத்துக்கொள்ளும்படி அதற்கேற்ற உள்ளாடை அணியும்படி எனக்குச் சொல்லிக் கொடுத்தது ஒரு போலீஸ்காரர்.

பெயர் கருப்பண்ணன். E1 போலீஸ் ஸ்டேஷனில் பாரா ட்யூட்டியில் நீங்கள் பார்த்திருக்கலாம். நல்ல உயரம், அகலமான தோள்கள்—பெரிய வயிறு கொஞ்சம் பழைய பெல்ட். அந்த உயரத்துக் கால் அகட்டிதான் நடக்க முடியும் என்று பலருக்கும் தோணும். காரணம் அதுவல்ல. அவரை நான் சந்தித்தது வியப்பான விஷயம்.

முழு வேகத்துடன் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்ததை விடிகாலையில் பத்தடி தொலைவில் போலீஸ் உடுப்புடன் ஒரு உருவம் கைநீட்டி நிறுத்திற்று.

அண்ணாவி சட்டென்று பெடலை அழுத்தி நிறுத்தினான். முழங்கையில் இடிக்கிற விநாடியில் நின்றான்.

''யார்யா நீ... யார் நீ?''

அண்ணாவிக்கு பதில் சொல்ல தெரியவில்லை.

''என் முழிக்கிற... யார் நீ, என்ன செய்ற இங்க?''

''எம் பேர் அண்ணாவி, சைக்கிள் ஓட்றேன்.''

''வண்டிய ஓரம், ஓரம் வையின்னா வச்சுடு. வாயி மேலயே போடுவேன். ஓரம்கட்டு வண்டிய. லாக் இருக்கா, பூட்டு மொதல்ல, பூட்டுன்னா.'' போலீஸ்காரர் லாக் அழுத்தி சைக்கிள் பூட்டிலிருந்து சாவியை விடுவித்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்.

''யார் நீ?''

''அண்ணாவி.''

''அதான் சொல்லிட்டியே. உங்கப்பா பேர் என்னா எந்த ஊர் உனக்கு.''

''இந்த ஊர்தான். எங்கப்பாவுக்கு பேர் பெரியசாமி.''



''அட்ரஸ் சொல்லு.''

''பத்தொம்பது. ஃபர்ஸ்ட் க்ராஸ். ஆர்.ஏ.புரம்.''

''எங்க ஓட்டிக்கினு போற சைக்கிளை?''

''எங்கேயுமில்ல. சும்மாதான்.''

''என்னாய்யா சும்மாதான். மணி என்னா இப்ப? மணி என்னாய்யா. என் வாச்சுல சரியா தெரியல. கைகடிகாரம் கட்டிருக்கிறியே சொல்லு மணிஎன்னா.''

''ஃபோர் ஃபாட்டி ஃபைவ்.''

''தமிழ்ல சொல்லு.''

''நாலு நாப்பத்தஞ்சு.''

''ம்ம். நாலு நாப்பத்தஞ்சு. இருளோன்னு கிடக்குது ஊரு. ஜட்டி மட்டும் போட்டுக்கினு இப்படி நெத்தில கட்டுக் கட்டிக்கினு ஸ்பீடா ஓட்டிக்கினு போனா நான் என்னான்னு நினைச்சுக்கறது?;'

''ஏன் பயப்படுற என்னைப் பாத்து. நிமிர்ந்து நில்லுய்யா.''

''நான் ஒண்ணும் பயப்படலீங்க.''

''என்னா... பயப்படலியா! போலீஸ்காரனை மொறைச்சுக்கற அளவு பிஸ்தாவா நீ. முட்டி பேத்துருவேன் ஆமா. என்ன அது. கத்தியா. கைதூக்கு, தூக்கு கை! சுவத்தோரம் கை தூக்கி நில்.''

''நான் எதுக்கு நிக்கணும். என்ன தப்பு செஞ்சேன்.''

''மொறைக்கிற... தவடலேயே போடுவேன்.''

''யோவ், அனாவசியமா மேல ஃ கை வச்சே... மரியாதையே போயிடும்.''

''மொறைக்கிற... உன் மரியாதைய ஸ்டேஷன்ல வந்து காமி.''

''வா. எங்க வேணா வா. சாவிஎடு. உனக்கு முன்ன ஸ்டேஷன் போய் உன்னை விலங்கு போட்டு கூட்டிவர வைக்கிறேன். நான் தினமும் போறேன். நாலே முக்காலுக்கு ரெண்டு வருஷமா இப்படித்தான் போறேன். இந்நேரத்துக்குத்தான் போறேன். இன்னிக்குப் புதுசாவந்து என்னவோ மிரட்றியே.''

''உன்னை என்னா மிரட்டினேன். எங்க போறேன்னு தானே கேட்டேன்.''

''நான் தான் சொன்னேன்... சும்மா போறேன்னுட்டு.''

''என்ன படிச்சிருக்க?''

''பி.ஏ, ஃபர்ஸ்ட் இயர்''

''உம் படிப்புல... போடா வருது வாயில நல்லா ஆமா. போலீஸ்காரன் நடுராத்திரியில மடக்கிக் கேட்டா சும்மா போறேன்னா வுட்ருவானா, சினிமா முடிஞ்சி போறேன்னா டிக்கட்டை எடுன்னுவான். ஆஸ்பத்திரின்னா மருந்து சீட்டு காமின்னுவான். சாவு சமாச்சாரம்னா யாரு, எந்த ஊரு. எப்ப கிளம்பின... எங்கபோய் எப்ப சேருவ எல்லாந்தான் கேப்பான். முண்டாகாமிச்சுக்கினு போனா கேக்காத போயிடுவானா?''

''கேட்டதுக்கு சொல்லிட்டேன். ப்ராக்டிஸ் பண்றேன்.''

''பதிலாடா இது. நான் பதிலுக்குக் கேட்ருட்டுமா பூட்டு உடைக்கவா... தாலி செயின் அறுக்கவா. சுவரு ஏறி குதிக்கவா... எதுக்கு ப்ராக்டிஸ் பண்றேன்னு கேட்ருட்டுமா?''

''ஐய. அதெல்லாம் இல்லீங்க. நான் ஹைஜம்ப் ப்ராக்டிஸ் பண்றேன். நேஷனல் லெவலுக்குத் தாண்டறேன். ஹைஜம்புக்கு முன்னாடி சைக்கிள் ஒன் அவர் ஓட்டுவேன்.''



''அத்த சொல்லு. கேட்டதுக்கு விவரணையா பதில் சொல்லு. எவ்வளவு தாண்டற.''

''ஏழு...ஏழு ரெண்டு.''

''ஸ்டரடுல்லா, ஃப்ளாப்பா. என்னா மெத்தட் தாண்டற.''

அண்ணாவி வியந்தான். ஒரு போலீஸ்காரனிடமிருந்து இந்த இரண்டு வார்த்தைகளை அவன் எதிர்பார்க்கவில்லை. ஹைஜம்ப் பற்றி உலகத்தில் நிறைய பேருக்குத் தெரியாது. அது ஹாக்கி போல, கிரிக்கெட் போல, கால்பந்து போல, ஏன் ஓட்டப்பந்தயம் போல கூட ஒரு பிரபலமான விஷயமில்லை. உயரத் தாண்டுதல் அதிக சுவாரஸ்யமில்லாத, பொதுமக்கள் ஈர்ப்பில்லாத விஷயம்.

''என்ன கண்ணு பாக்கற...மிரண்டுட்யா. தவடலேயே போட்ருவான்னு நினைச்சுட்டியா மூஞ்சி பாத்தா போலீஸ்காரனுக்குத் தெரியாதா? யார் கேடி.. யார் நல்லவன்னு. சும்மா அப்பிடி டபாய்ச்சேன். நேர தாண்டி போனே ஸ்பீடா...சரி திரும்பிடுவேன்னு பாத்தேன். வந்தே. எனக்கு இங்கே பீட்டு. அப்பிடி வண்டில ஏறி வந்தோம். ஒரு அரை அவரு இங்க நின்னு பாத்துட்டு, வண்டி திரும்பி வந்ததும் ஏறிக்கினு போயிடுவேன். ரேஸு போறியாங்காட்டியும்னு பாத்தேன். ஹை ஜம்பா, என்னா மெத்தட், ஃப்ளாப்பா.''

''Flop''

''சபாஷ். முதுகு காட்டி உடம்பு தூக்கிப் போட்றதா''

''ஆமா சார்.''

''ஏழு...ஏழு ரெண்டு ஒண்ணும் பெரிசில்லையே, ஏழரை எட்டு தொடறானே ஃபாரீன்ல.''

"ஏழு அடி எட்டு அங்குலம் ரெக்கார்ட் சார்."

"மூக்கால முட்டி தொடு."

தொட்டான்.

"ஃப்ரீ கிக் பண்ணு."

இடுப்பில் கை வைத்து காற்றில் மாற்றி மாற்றி கால்கள் நீட்டிக் காட்டினான்.

"பேக் பெண்ட் செய்."

முடிந்த மட்டும் முதுகைப் பின்புறம் வளைத்துக் காட்டினான்.

"அடேங்கப்பா. எந்த ஊரு உனக்கு."

"திருச்சி பக்கங்க."

"எனக்கு வட ஆற்காடு. ஒரு காலத்துல நான் ஹை ஜம்ப் லாங் ஜம்ப் சாம்பியன். எப்போ...பள்ளிக்கூடத்துல படிக்கச் சொல்ல. அப்ப Flop ஜம்ப் கிடையாது. தாண்ட மாட்டாங்க யாரும். நேர போய் கால் தூக்கி தாண்டறதுதான் தெரியும். கொம்பு அடிபட்டுச்சு, நொச்சுன்னு கொட்டைல அடி வாங்கிக்கும். டைட்டா வச்சிருக்கிறியா?"

"சார்?"

"லங்கோடி கட்டி இறுக்கி வச்சிருக்கிறியா, சைக்கிள் மிதிக்கிறியே."

"'ஜட்டி போட்ருக்கேன் சார்."

"என்னாத்த ஜட்டி. ஓரம் ஒதுங்கும். ஒதுங்கற பக்கம் நீர் கோத்துக்கும்."

"சில சமயம் நோவும் சார்."

"புண்ணாக்கா இருக்கியே. விளையாடறவன் கேம்ஸுன்னு இறங்கிட்டவன் ஒதுங்கவுட்டா வீணாப் போயிடுவான்."



"புரியலை சார்."

"அரணா கயிறு கட்டி லங்கோடு போட்டுக்கற மாதிரி வசதி ஆயிர ரூபா ஜட்டில வராது."

"லங்கோடு...?"

"அசிங்கம்கற. புண்ணாக்கு. புண்ணாக்கு. டைலராண்ட போய் மல்லுதுணி குடுத்து லங்கோடுன்னு கேளு நாடா போட்டு அடிச்சுத் தருவான். இழுத்துக் கட்டி மேல ஜட்டி போட்டுக்க. அன்னாண்ட இன்னாண்ட அசையாது, தட்டினா கூட துணி தாங்கிக்கும். குஸ்தி போடறவன், கட்டியிருப்பான் பாத்திருக்கியா அசிங்கப்பட்டு வுட்ராத ஒருதரம் நீர்க்கட்டி பெரிசாச்சு,. அப்புறம் உன்னைப் பொதைக்கிறவரைக்கும் பெரிசு தான்."

"அறுந்துடாது சைட்ல."

"நைஸ் துணி எடுத்துக்க. இறுக்கக் கட்டிண்டு ரெண்டு தரம் பஸ்கி போடு. தானா இடுப்புல அமைஞ்சிடும். அன்னாண்ட இன்னாண்ட அசையாது."

"நீங்க ஹை ஜம்பா சார். எவ்வளோ தாண்டினீங்க?"

"தாண்டுனேன். ஆறு பத்து தாண்டுவேன். அது ஒரு காலம். விளையாடி சர்ட்டிபிகேட் எடுத்து எடுத்து போலீஸ் பெரிய வேலைன்னு சேர்ந்தேன். படிக்கலை, படிப்பு ஏறலை. விளையாட்டே பெரிசுன்னு நினைச்சுக்கிட்டேன். அந்த சர்டிபிக்கேட் பார்த்துட்டுத் தான் இந்த வேலை கிடைச்சதுன்னு வைச்சுக்க. புண்ணியம் இப்படி ராத்தூக்கம் இல்லாத மரத்தடி மரத்தடியா நின்னு உடம்பு பாழா பூட்ச்சு. படிச்சிருந்தா பாங்குல, கம்பெனில சேர்ந்திருக்கலாம். ம்... போலீஸ்ல சேர்ந்தேன். விளையாட்டும் போயிடுச்சு. ஆச்சு இருபத்திரண்டு வருஷம் சர்வீஸ் போட்டாச்சு. படி தம்பி, நல்லா படி. ஹை ஜம்பு, லாங் ஜம்புன்னு

பாடத்தைக் கோட்டை வுட்ராதே. படிப்பு முக்கியம்.''

அந்த போலீஸ்காரன் கண்ணில் இந்த இருட்டினும் ஒரு ஏக்கம் தெரிந்தது.

''எனக்கு ஸ்போர்ட்ஸ்மேன்னா ஒரு மயக்கம், மரியாதை. உடம்பு முக்கியம்னு நினைக்கிற மனுஷங்கிட்ட ஒரு மதிப்பு.''

''Fosbury Flop மெத்தட்ல தப்பா அடிபடாது சார்''

''அதுக்கோசரம் ஆடவுட்றதா, ஹைஜம்ப்காரனுக்கு தொடை உயரம், முதுகு பெண்டு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கீழ இருக்கற சமாச்சாரமும்.''

''ஆமா சார்.''

''லங்கோடுதான் காப்பாத்தும், ஜட்டியெல்லாம் வெறும் ஷோதான். உதவாது.''

''ஆமா சார்.''

''தம் வேணும், நிதானமா பிசிறாத தண்டால் எடுக்கணும், நூறு தண்டால் நோவாத செய்யணும்.''

''தினம் செய்றேன் சார்.''

''ஒரு வேளை நல்லா சாப்பிடணும். நல்லா தூங்கணும். தப்பு செய்யாத, கெட்ட கனா இல்லாத அலுப்பா ஆன்னு தூங்கணும்.''

''தப்பு இல்லாத தூங்கறேன் சார்.''

''நல்லா இரு தம்பி. நேஷனல் ஃபர்ஸ்டா வேர்ல்ட் ஃபர்ஸ்டா வரணும். நல்லா இரு. இந்தா சாமி, எவனாவது தொந்தரவு பண்ணுனா எனக்கு போன் பண்ணு, எம் பேரு கருப்பண்ணன் E-1 ஸ்டேஷன்.''

''சார்''

''சொல்லு தம்பி''



''தட்டி தொடுறேன் சார்''

''அடடா வேணாம்பா, என்னாத்துக்குத் தட்டி தொடுறது. வித்தை சொல்லித் தந்தவனை, குரு மாதிரி இருக்கிறவனை கும்பிடு போதும், அட வேணாம்பா, சரி நல்லா இரு தம்பி, நல்லா இரு. லங்கோடு முக்கியம். மறந்துடாதே அசிங்கம்னு வுட்றாதே.''

தெருவில் வண்டி வெளிச்சம் படர்ந்து, போலீஸ் வேன் அருகில் வர கதவு திறந்தது. ''யோவ் ஏறுய்யா நேரமாச்சு. யாரது... என்னா கேஸ்.''

''இல்ல சார், நமக்குத் தெரிஞ்ச புள்ளை. ஹைஜம்ப் ப்ராக்டிஸ் பண்ணுது. நேஷனல் லெவலுக்குப் போவுதாம் பேசிக்கிட்டிருந்தோம். பெரிய மனுஷாள் வீட்டுப் புள்ளை சார். உங்க ஊரு பக்கம் சார்.''

''சர்தான் ஏறுப்பா, கண்ணு சொக்குது. பீட்டு நில்லுன்னா பேசிக்கிட்டு நிக்கற.''

''யெஸ் ஸார்.''

''தம்பி வரேன். நல்லா இருப்பா.'' உயர்ந்த அந்த உருவம் உடம்பைக் குறுக்கிக் கொண்டு போலீஸ் வேனில் ஏறியது.

மறுநாள் அவன் லங்கோடு தைக்கச் சொன்னான். இரவே உடுத்திப் பார்த்தான். பொதிந்து அழகாய் அமைதியாய் உள்ளே அது இருந்தது. கால்களை வீசிப் பார்த்தான். நெகிழ்வற்று அசைவற்றுக் கிடந்தது.

பல வர்ணங்களில் உயர்ந்த துணியில் உறுதியான தையல்களுடன் கச்சிதமான லங்கோடுகள் அவனிடம் சேர்ந்தன. உதவியாயின.

இது பெரிய உதவி. சூட்சுமமான உதவி. இதற்கே தட்டித் தொடலாம். குரு மாதிரிதான் அந்த கருப்பண்ணன் தென்பட்டார். அவருக்கு என் முகம் நினைவி

ருக்குமா. அந்த அண்ணாவிதான் தங்கப்பதக்கம் வாங்கினான் என்று தெரிந்திருக்குமா?

தெரிந்து வந்தால் நன்றாய் இருக்கும்.

மீண்டும் தட்டித் தொடலாம். நல்லதை எதிர்பார்ப்பின்றி சொல்லித் தருபவனெல்லாம் குருதான்.

எனக்கு அந்த போலீஸ்காரரை கருப்பண்ணனைப் பார்க்க வேண்டும்.

## 5

ஆனால் குரு என்பவன் மோசமாகக்கூட இருக்கலாம். மனைவி அமைவது போல, நல்ல தகப்பன் தாய் கிடைப்பது போல, நல்ல குரு கிடைப்பதற்கும் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும். பள்ளியில் சொல்லித் தந்த பாண்டி வாத்தியார் முதல் குரு.

''ம்... மகனே, ஆறடி தாண்டல பிச்சிடுவேன்!'' பிரம்போடு ப்ளேகிரவுண்டில் நிற்கிற குரு.

நல்ல கருப்பு கச்சல் தேகம். உயரம் குறைவு. ஆனால் உரம் மிகுந்த உடம்பு. நாற்பது வயதிலும் ஹாக்கியில் ஒவ்வொரு ஷார்ட் பெனால்டி கார்னரையும் சொல்லி சொல்லி கோலாய் மாற்றுகிற உரம்.

மைதானத்தில் உயரமும், அதட்டலும், ஆவேசமும், விளையாட்டு முடிந்து ஒன்றாய் வீட்டுக்குத் திரும்பும் போது பேச்சில் கனிவு கொஞ்சும். கண்ணில் கருணை பொங்கும். நல்ல விளையாட்டு வீரனைத் தோழனாய் மதிக்கிற குணம்.

''எதுலே வீக் நீ... கணக்கா... தமிழா, எதுல மார்க் கம்மி. நான் அட்ஜஸ்ட் பண்றேன். போடா... ஸ்போர்ட்ஸ் மேன் நான் படிக்கலையேன்னு சோர்ந்துடக்கூடாது நீ. இந்தத் தடவை நான் பாத்துக்கறேன். அப்புறம் ஒழுங்கா படிச்சுடணும். என்னலே, போய் நல்லா சாப்பிடு. தினம் முட்டை குடி, நான்



வந்து வீட்ல சொல்லட்டுமா. நல்லசாப்பாடு கொடுக்கச் சொல்லி.''

சொல்லுவார். சைக்கிள் ஏறி வீடு தேடி வந்து வீட்டில் உள்ளவர்களிடம் பையனைப் பற்றி புகழ்ந்து பேசி, பெற்றோர்களைத் தயார்படுத்துவார். ''இந்த மாதிரி ஒரு மகன் பிறக்கக் கொடுத்து வச்சிருக்கணும்மா நீங்க'' என்று ஐஸ் வைப்பார்.

வாசல்ல வழியனுப்பும்போது முகம் மாறியிருக்கும்.

''உன் ஹைட்டுக்கு ஆறடி தாண்டறது மசிரு மாத்திரம். 'ஃப்ளாப்' மெத்தட்னு அமெரிக்கால புதுசா ஆரம்பிச்சிருக்காங்க. பேக் ஜம்ப் மாதிரி, டிக் ஃபோஸ்பரின்னு ஒரு ஆள் தாண்டறான். 68' ஒலிம்பிக்லே அசத்திட்டானாம், பேப்பர்ல படிச்சேன். எனக்கு அது பெஸ்ட்னு படுது. ட்ரை பண்றியால...''

''பயமா இருக்கு சார், மண்டை உடைஞ்சிட்டா.''

''அறைஞ்சேன்னா... பல்லு உதிர்ந்துடும். சொல்றதைச் செய்யலே. உன்னால முடியும்.''

சார்ட் போட்டு என்றென்று என்னென்ன பயிற்சி, எவ்வளவு நேரம் என்று கலர் பென்சிலால் குறித்து முதுகு படிய தவறாமல் மணலில் விழுந்தவன் முதுகை அழுத்தி நீவிவிட்டு, மறுநாள் கவலையோடு விசாரித்து உற்சாகம் ஊட்டிய அந்த பாண்டி வாத்தியாரே வித்து. அவரே முதல் குரு.

''நானாடா கப்பு வாங்கப் போறேன். எனக்காடா சர்டிபிகேட்டு, என் கிட்டப் படிச்சவன் ஓஹோன்னு வந்தா அதான்டா எனக்குப் பெரிசு. அதான் எனக்கு சர்டிபிகேட். நான் சின்ன வயசுல ரொம்ப கஷ்டப்பட்டவன். யாரும் சொல்லித் தராம கத்துக்கிட்டவன். நாலு பேருக்குக் கத்துக் குடுக்கறதுலதான்டா எனக்கு சுகம்.''

பதினாறு வயசில் பள்ளியிறுதி வகுப்பில அந்த ஆசிரியன் தோழமை அன்பு, அவர் மிரட்டலுக்குப்

பின்னே ஒளிந்திருந்த பாசம் அண்ணாவிக்குப் புரிந்து விட்டது. விரட்டி விரட்டி அவர் ஓடவைத்த விதமே இன்று உடம்புக்கு வலுவேற்றியிருக்கிறது.

வெறும் விளையாட்டு வீரனாக இல்லாமல், ஐநூற்று சொச்சம் மார்க்குகளோடு பள்ளியிறுதி வகுப்புத் தேறியபோது அவனை அணைத்து பாண்டியன் முத்தமிட்டார். தனியே அழைத்துப்போய் அவனை முழங்காலிட்டு ஜெபம் செய்திருக்கிறார்.

"யேசுவே, என் தேவனே, இந்த பிள்ளைக்கு நல்ல உரம் கொடும். இந்த பிள்ளையை சந்தோஷமாய் வைத்திரும். இவன் பல பரிசுகளை, புகழை அடைய வேண்டுகிறோம். கருணையுள்ளவரே எங்கள் பிரார்த்தனைக்கு செவி கொடும். நல்ல குணமுள்ளவனாய் இவனை வளர்க்க வேண்டியது உன் பொறுப்பு ஆண்டவரே."

உருகி உருகி கடவுளை வேண்டி, இவனை விம்மி விம்மி அழவைத்திருக்கிறார்.

"போடா, போய் நல்ல காலேஜ்ல சேரு. ஸ்போர்ட்ஸ் விட்றாதே. ஆல் த பெஸ்ட். போடா எழுந்து. குழந்தைப் பிள்ளை மாதிரி அழுதுகிட்டு... போடான்னா."

இது அதிர்ஷ்டம்,• பெயரும் பொக்கிஷம். பத்து பைசா லாபம் பார்க்காமல் தன் பெரிய குடும்பப் பொறுப்பை முக்கியம் எனக்கொள்ளாமல், தன் மாணவனுக்கு வரம் சேர்க்கும் பசும் மண் வளம் நிறைந்த நன்செய் வள்ளல் மனிதன் மகா மனிதன். அந்தப் பாண்டியன் அவன் அன்பில் திளைத்துப் பல வீரிய வித்துக்கள் தேசத்தின் பல மூலைகளில் பல மரங்களாய் நிற்கின்றன.

ஆனால் மனிதர்கள் ஒரே விதமில்லை. குரு என்பவரும் மனிதர்தான். அந்த பாம்பேவாலாவுக்கு அணாவி என்ற பெயர் மனசில் பதியவேயில்லை. அண்ணாவி என்று அழைத்தான். மறந்துபோனபோது



'ஏ மதராஸி' என்று கூப்பிட்டான். தன்னை குரு என்று கூப்பிடும்படி எல்லோரையும் வற்புறுத்தினான். இந்தியன் ஒலிம்பிக் அசோஸியேஷன் தேர்வு செய்த போது இந்த பாம்பே லாலாவே தீர்வு சொல்பவனாக இருந்தான். "இது பெயரா ஃபோஸ்பாரி ஃப்ளாப்? லாரியில் அடிபட்ட நாய் மாதிரிபோய் விழுகிறாயே" என்று ஏசினான். "ஸ்மூத் லேண்டிங் முக்கியம்" என்றான். அண்ணாவிக்குப் புரியவில்லை. ஃபோம் மெத்தையில் எப்படி விழுந்தாலும் அடிபட வாய்ப்பேயில்லை. ஐம்பதடி தொலைவு போதும். வேகம் வேண்டுமெனில் தூரம் கூட்டு என்கிறான். ஓடும் தூரம் கூட களைப்பு ஏற்படுத்திவிடுகிறது. எழுபத தூரம் ஓடிவந்து தாண்ட நாவு துவண்டுவிட வேண்டியதாகிறது. கோணம் மாற்று என்று கட்டளையிட்டான். அண்ணாவி கோணம் மாறுதலினால் தவித்துப் போய் நேரே தாடையில் 'ணங்' என்று முட்டிக்கொள்ள கூட்டம் வாய்விட்டு சிரித்தது.

"இந்தத் தடையை தாண்ட வேண்டுமென்பதே என் கட்டளை. மண்டையில் மோதி உடைக்க உன்னை ஒலிம்பிக் கூப்பிடவில்லை." பாம்பே லாலா இரையவெற்றுக் கும்பல் மீண்டும் சிரித்தது.

அண்ணாவி சொல் தாங்காமல் சிறுத்துப் போனான். பாண்டி வாத்தியார் போல் ஒரு ஆசிரியன் தேவைப்பட்டது. பாம்பே வாலா தனியே உற்சாக மூட்டிய ஆள், ஆறரை அடி உயரத்தை எட்டி உதைத்துக் கொண்டிருந்ததை யாரும் கண்டு கொள்ளவேயில்லை.

ஏழு அடி இரண்டாங்குலம் தாண்டிய அண்ணாவியை பாம்பே வாலா நாடி பிடித்து "பல்ஸ் ரேட் அதிகம்" என்றான்.

யார் யாரையோ அழைத்து 'குசுகுசு என்று ரகசியம் பேசினான். ரகசியம் பேசுகிற இடத்தில் ஆறரையடி தாண்டிய வாலிபனும் சிரித்துக்கொண்டு நின்றான்.

ஒவ்வொரு நாளும் பாம்பே வாலா காலைத் தொட்டு வணங்கிவிட்டுத்தான் போனான்.

காம்ப்பில் அண்ணாவிக்குத் தூக்கம் வரவில்லை. உணவு முறைகள் புதிதாக இருந்ததால் வயிறு வலித்து வெளிக்குப் போயிற்று.

"உன்னை செகண்ட் பேட்சில் அனுப்பகிறோம். எதற்கும் தயாராய் இரு" என்று பாம்பேவாலா சொன்னபோது, ஆத்திரம் பொங்கிற்று.

ஆறரையடி தாண்டிய பையன் முதல் பேட்சில் செலக்ட் ஆனான். அண்ணாவி அப்பாவுக்கு போனில் இதைச் சொல்ல, அப்பா ஆறுதல் சொன்னார். "மொத்தம் பதினேழாயிரத்து நானூற்று எழுபத்தி யிரண்டு கட்ட வேண்டும் அப்பா." என்று கூறிய போதும் தைரியம் சொன்னார். "காசுபோகட்டும் அண்ணாவி நீ கேட்டது போல் மூன்று மடங்கு தருவேன். கவலையை விடு. உடம்பைப் பார்த்துக் கொள்"

அண்ணாவி தேர்வு செய்யப்பட்டான்.

ஒலிம்பிக் கிளம்ப நாலு நாட்கள் இருக்கும்போது அண்ணாவிக்குக் காம்ப்பில் தேர்வு செய்யப்பட்டதாய் கடிதம் கொடுக்கப்பட்டது. டெலிபோனில் அப்பாவைத் தொடர்புகொள்ள பேயாய் பறக்க வேண்டியதாயிற்று. தந்தி அனுப்பினான். இரவு நெடுநேரம் டெல்லி தபால் நிலையத்தில் காத்திருந்து போன் பேசினான். அப்பா மறுநாள் விமானத்தில் தோல்பை நிறைய கரன்ஸி யோடு இறங்கினார்.

புதிய ஷூக்களும், பனியன்களும் வாங்கினார். பிரத்யேகமாய் அவனுக்கென மெடிக்கல் கிட் வாங்கி னார். "யாருக்காவது அங்கே விருப்பமிருந்தால் கொடு" என்று சென்னையிலிருந்து சின்னச் சின்ன வெள்ளை உலோகப் பிள்ளையார், லக்ஷ்மி, சரஸ்வதி சிலைகள் வாங்கி வந்திருந்தார்.



அப்பாவின் செலவுகள் அண்ணாவியின் மனதை கனக்கச் செய்தன.

துக்கம் தொண்டையை அடைத்தது. இது அவசியம் தானா என்ற நினைப்பு மூளையைக் குடைய லாஸ் ஏஞ்சல்ஸ் விமானமேறினான். உள்ளே ஒரு வேதனை. இத்தனை செலவுக்கும் அர்த்தம் உண்டோ. தோற்றுப் போனால் எல்லாம் எள்ளுத் தண்ணீர் இல்லையா. பதி னேழாயிரம் ரூபாய்க்கு லாட்டரி சீட்டு வாங்கினால் கூட ஒரு நம்பிக்கையிருக்கிறது. அந்த நம்பிக்கை கூட இல்லாமல் போகிறேன். இது அவசியம்தானா...

லாஸ் ஏஞ்சல்ஸ் தொட்டவுடன் அந்த வேதனை மறந்து போனது. பிரமிப்பு பற்றிக் கொண்டது. இது ஊரா தேவலோகமா...ஊர் முழுக்க இப்படி ஒரு ஊதல் காற்று ஓடுகிறதே...

தென்னிந்திய வீரர்களுடன கிருஷ்ணமூர்த்தி ஹெட் டுக் வந்திருந்தார். அவரும், ஹாக்கி ராஜகோபாலும் அண்ணாவியும் சேர்ந்து ஊரை முதலில் ஒரு ரவுண்ட் அடித்தார்கள்.

பரபரப்பான அந்த மக்களைப் பார்க்கிறபோது ஒரு சந்தோஷம் பற்றிக் கொண்டது. ஜெயிப்போம் என்று ஒரு நம்பிக்கை உள்ளே சுடர்விட்டது. வெள்ளைத் தோலும் வெண்ணிற முடியும் சிரிப்பும் குதூகலமும், சந்தோஷக் கூவலும், பரவசமூட்டின. வறுமை இல்லாத தேசம் என்பதற்கு அர்த்தம் என்ன என்று புரிந்தது. ஆனால் அதுவும் உடைபட்டது.

## 6

"வெளியூருக்கு வந்து விளையாடறவன் இரண்டு காரியம் பண்ணக் கூடாது அண்ணாவி." லாஸ் ஏஞ்சல்ஸ் விமானத் தளம் நெருங்கும்போது கிருஷ்ண மூர்த்தி சொன்னார். அவர் ஒலிம்பிக் சமையல் ஆளாகப் போவது இது இரண்டாவது தடவை.

''குடி, குட்டி கூடாது. இதானே ஐயரே.'' ஹாக்கி ராஜகோபால் கேட்டான்.

''அவசரப்படாதே, அது கூடாதுதான். நார்மலா நல்ல ஸ்போர்ட்ஸ்மேனுக்கு இதைச் சொல்லித் தர வேண்டாம். அதைவிட முக்கியம் நான் சொல்றது. விருந்துக்குன்னு எவன் கூப்பிட்டாலும் போகக் கூடாது. எவனாவது சாக்லேட் குடுத்தாக்கூட அங்கேயே உடனே பிரிச்சுத் திங்கக்கூடாது. வாங்கி பாக்கெட்ல போட்டுண்டு வந்துடு. கேட்டா டயட்டுன்னு சொல்லு. அப்புறம் எடுத்து குப்ப தொட்டில் எறிஞ்சிடு.என்னகாரணம் கொண்டும் இன்னொருத்தன் தரதைத் திங்காதே.''

''ஏன் ஐயரே!''

''ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதேம்பா. நான் போன தரம் போயிருந்த போது நம்ம தேசத்து ஆள் உன்னை மாதிரி ஹாக்கிப் புள்ளையாண்டான் எவளையோ ஃபிரண்டு பண்ணிண்டு ஹாம்பர்க் வாங்கித் தின்னுருக்கான். அது ஒண்ணுமில்லை ரொட்டித்துண்டு, உள்ள மாட்டுக்கறி மசாலா. வாங்கித் தின்னுட்டு. இங்கே வந்து நீயும் ஒரு சமையற்காரனா... நெய்யா ஒழுகுதுய்யா கடிக்கறப்ப, அவ்வளவு டேஸ்ட்டுன்னு நொட்டை விட்டான். ராத்திரி படுக்கப் போனவன் பாதில எழுந்து பின் பக்கம் போனான். வந்தான், மறுபடி போனான் வந்தான், மறுபடி போனான் வந்தான். திரும்பவும் போனான். அப்புறம் அரைமணியாச்சு. வரவேயில்லை. என்னடான்னு கேட்டா உள்ள உட்கார்ந்துண்டு ஓ...ன்னு அழுகை நாலடிக்கு நாலடி ரூம் சுத்தி ஒரே கூட்டம். திருகுப் புடுங்கிண்ட குழா மாதிரி பீச்சறது.

மகாபாவி நாளைக்கு செமி ஃபைனல். நெய்யா ஒழுகுறதுன்னு தின்னியே... இப்ப ரத்தமா ஒழுகறதேடான்னேன். தலை கீழா நின்னு பார்த்தானுங்க. அந்த ஊர் டாக்டர் அத்தினி பேரும் மூணு நாள் நிறுத்தவே முடியவில்லை. ஒரு துண்டு ஹாம்பர்க்



அவன் குடலையே கரைச்சுண்டு போயிடுத்தோங்கற மாதிரி சந்தேகம். யார் அவ...எங்கக் குடுத்தா...என்ன பேஸ்டுன்னு ஆயிரம் கேள்வி...அது விஷமா...இல்லை நிஜமாகவே இவனுக்கு அந்த ஊர் கறிமசாலா ஆகலையா, எனக்குத் தெரியலை. யாருக்கும் தெரியலை. ஊருக்குத் திரும்பும்போது ஸ்டிரச்சர்லதான் எடுத்துண்டு வந்தோம்-அந்த செமி ஃபைனல்லயே செம்ம அடி நமக்கு. டெல்லி ஏர்போர்ட்ல எவனும் மதிக்கல. போறவன் வரவன் எல்லாம் கிண்டல் பண்றான்- இவனை ஸ்டிரச்சர்ல வேற தூக்கிண்டு வந்தமா...மடக்கி நிறுத்தி மானத்தை வாங்கிட்டாளுங்க. போற போதும் ஒலிம்பிக்குக்கு இப்படியே தான் போனியான்னு ஒரு கேள்வி.

''பொம்மனாட்டி குடுத்ததுன்னு தின்னியாமே. வேற என்னவெல்லாம் குடுத்தான்னு ஒரு கேள்வி.

பத்து பதினைஞ்சு ஹாம்பர்க் ஒன்னா பார்சல் பண்ணி அவன் தலைமாட்டுல வச்சு...வீட்டுக்குப்போய் நிதானமா தின்னு; ஹாக்கி மட்டும் ஆடவராதே''ன்னு ஒரு கேலி.

''சோத்துக்கு இல்லாதவனாப் பாத்து ஒலிம்பிக் அனுப்பக் கூடாது''ன்னு அவன் மூஞ்சிக்கு நேரயே ஒரு கமெண்ட் ஏன் கேட்கற போ...

''தலையில தலையில அடிச்சுண்டு அழுதான்யா அவன். கண்றாவியா இருந்தது.''

ஹாக்கி ராஜகோபால் உறைந்து போனான்.

''அந்த ஊர்க்காரா மாமிசத்தைப் பாதி வேகவச்சுத்தான் குடுப்பா. வெந்ததை வெட்டினா உள்ள ரத்தச் சிவப்பா இருக்கணும். அதுதான் அவனுக்குப் பதம். நம்மூர்ல பஞ்சா நொய்ய வச்சுத்தான் திம்பா. பச்சைக் கறி ஆகலையோ என்னவோ...''

''சரி, இன்னொரு விஷயம் எது சார்.''

''ஐஸ்கிரீம் திங்காதே.''

''ஏன்?''

"நம்மூர் மாதிரியில்லை. இங்க ஐஸ்கிரீம் தேனா இருக்கும். இரண்டு மூணாவது தின்னத் தோணும். சோப்புப் போட்டு அலம்பினாலும் ஒரு பிசுபிசுப்பும் பால் மணமும் இருக்கும். நீ பாட்டுக்கு வேளைக்கு ஒண்ணுக்கு மூணு வேளை மூணு நாள் தின்னா இரண்டு கிலோ டக்குன்னு ஏறிடும். ஆறு நாள் தின்னா, உன் உடம்பை உன் காலே தாங்காது. உடம்புல அத்தனை தடிமன் வரும்.

லாஸ் ஏஞ்சல்ஸில் குடிக்கிற ஜலம்கூட தேனாய் இனித்தது. ஆரவாரமான செரிமோனியல் பரேட் முடிந்த பிறகு, ராஜகோபாலும் அண்ணாவியும் மெல்ல நடந்து ஊர் சுற்றிப் பார்த்தார்கள்.

வெளியே கடைகள் போட்டி போட்டுக் கொண்டு அழைத்தன. 'உண்பதற்கு வா' என்றழைத்தன. உடுத்துவதற்கு அழைத்தன. உட்கார்ந்து வசதியாய் பார் என்று பல காட்சிகள் ஈர்த்தன. பெண்கள் கலபமாய் சிரித்தார்கள்,

பசித்தது. இந்தியன் கேம்பில் வழங்கப்பட்ட சாக்லேட்டுகளைப் பிரித்து அண்ணாவி தின்றான். முதல் சுற்றில் கிழித்த சரிகைப் பேப்பரை கையிலிருந்து காற்றுப் பிடுங்கிற்று. தரையில் சரிகைப் பேப்பர் பறந்தது. யாரோ அண்ணாவியை விநோதமாய் பார்த்தார்கள். மிச்சச் சாக்லேட்டைத் தின்றுவிட்டுப் பேப்பர் போட குப்பைத் தொட்டியைத் தேடினான். நிறைய புத் தொட்டிகள் இருந்தன. பாக்கெட்டுக்குள்ளேயே போட்டுக் கொண்டு விடலாம். யோசித்து உருட்டி கடைசி முறையாய் குப்பைத் தொட்டி தேடியபோது ஒரு பெண் இருபது வயசுக்காரி ஏராளமான சிரிப்புடன் அவனை அணுகினாள்.

"அந்தச் சாக்லேட் பேப்பரைக் கொடுங்கள்" என்று கை நீட்டினாள்.

அண்ணாவிக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் கையை இழுத்து சுவரோரம் போய் வலை பின்னிய தொட்டிப் படம் போட்ட இடத்தை அடைந்தாள்.



படத்துக்குக் கீழே இருந்த பொத்தானை அழுத்தினாள். மேஜை டிராயர் மாதிரி ஒன்று சுவரிலிருந்து வெளிப்பட்டது. முப்பது விநாடி தாமதித்து சாக்லேட் பேப்பரை வாங்கியதும் சுவரோடு அழுந்திக்கொண்டு விட்டது.

அண்ணாவி ஆச்சரியத்தோடு மறுபடி அழுத்த தொட்டி சுவற்றிலிருந்து வெளிப்பட்டது. சாக்லேட் பேப்பர் காணப்படவில்லை. தொட்டி தின்றுவிட்டதா? இல்லையாம். காற்றழுத்தத்தில் இந்நேரம் பெரிய பைப்லைன் வழியே ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் பின்னால் இருக்கிற பெரிய தொட்டிக்குப் போய் சேர்ந்திருக்குமாம். அரைமணிக்கு ஒருமுறை அப்பெரிய தொட்டி லாரியில் இழுக்கப்பட்டு நகரிலிருந்து வெகு தொலைவுக்குப் போய்விடுமாம்.

அந்தப் பெண் சொன்னாள். வேறு என்ன உதவி வேண்டும் என்று கேட்டாள்.

"எப்படித் தெரியும் நான் குப்பைத் தொட்டி தேடியது."

ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் டிவி காட்டிக் கொடுத்ததாம், அண்ணாவி திண்டாட்டத்தை. உடனே இவளுக்கு தொடர்புவர இவள் அணுகினாளாம்.

"நீங்கள் யார்?"

"விருந்தினர்க்கு உதவுபவள். அதற்காகவே நியமிக்கப்பட்டிருப்பவள். எம்மி ஃபிரட்ரிக் என் பெயர். பெயர் நினைவு வைத்துகொள்ள முடியவில்லையெனில் இரண்டாயிரத்து நூற்று பத்தொன்பது என்று ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். லாஸ் ஏஞ்சல்ஸ் முழுவதும் இம்மாதிரி கைட் பெண்கள் உண்டு. வேறென்ன உதவி வேண்டும்."

"என் அம்மாவுக்கு ஏதாவது, அப்பாவுக்கு உபயோகமாக, தம்பிக்கு ஞாபகார்த்தமாக; எனக்கும் ஏதாவது வாங்க வேண்டும் என்ன வாங்கலாம்? உதவ முடியுமா?"

"பட்ஜெட் என்ன?"

அண்ணாவி சொன்னான்.

நாலு கடை ஏறி இறங்கி சளைக்காமல் கூடவே வந்து வாங்கிய பைகளைக்கூட தானும் சுமந்து... கைட் தான் ஆனால் என்ன சந்தோஷம்... இந்த வேலையில் எத்தனை கவனம்... எத்தனை இதம் பேச்சில். "அண்ணாவி அண்ணாவி," கொஞ்சலாய் இனிமையாய் பேசிற்று.

"பீர் சாப்பிடலாமா அண்ணாவி."

"நான் மது அருந்துவதில்லை."

"பீர் கூடவா?"

இருவரும் பழரசம் குடித்தார்கள். எதிரும் புதிருமாய் முழங்கால் இடிக்க உட்கார்ந்து அண்ணாவி குடும்பம் பற்றி விசாரித்தாள். பர்ஸிலிருக்கிற போட்டோவைக் காட்ட... எவ்வளவு இனிமையானது உன்குடும்பம் என்று வியந்தாள். அம்மாவின் பொட்டும் மூக்குத்தியும் அவளைக் கவர்ந்தன. தனக்கும் இப்படி அலங்காரம் செய்துகொள்ள ஆசையாய் இருப்பதைச் சொன்னாள். அவளது கைப்பையைத் திறந்து லிப்ஸ்டிக் எடுத்து அண்ணாவி அவள் நெற்றியில் பொட்டு வரைந்தான். பழரச சரிகைக் கவரைச் சின்னதாய் பிரித்து மூக்கில் ஒட்ட வைத்தான்.

"வாவ்... தஞ்சாவூர் சௌராஷ்டிராப் பொண்ணு மாதிரி இருக்கியேம்மா. மூக்குத்தி எவ்வளவு அழகு உனக்கு" அண்ணாவி வியந்தான்.

அவள் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். ஒட்டின சரிகை பேப்பரும், நெற்றிப் பொட்டுமாய் அவன் கைகளைக் கோர்த்துக் கொண்டு நகர்வலம் வந்தாள்.

அண்ணாவியின் இந்திய கேம்ப் வாசல்வரை கொண்டு போய்விட்டாள். கேம்பில் அன்னியர் நுழைய அனுமதியில்லை. அண்ணாவி உள்ளே ஓடிப்போய் பெட்டியைத் திறந்து வெள்ளை உலோக சிறிய மஹா லெக்ஷ்மி சிலை கொண்டு வந்து கொடுத்தான்.

"எனக்கு எதற்கு இது அண்ணாவி. உன் கூட வந்தது, உனக்கு உதவி செய்தது என் ட்யூட்டி."



"ட்யூட்டியாகவா அதைச் செய்தாய், எம்மி. இது என் பரிசு."

"உனக்குப் பரிசளிக்க எதுவுமேயில்லையே அண்ணாவி என்னிடம். எனிவே, இந்தா" அவனை வளைத்து இழுத்து உடம்பு ஒட்டி இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டாள். பரிசுக்கு நன்றி சொன்னாள். விடை பெற்றாள். வாசலில் இருந்த இந்தியர்கள் வெந்து போனார்கள்.

அண்ணாவி சந்தோஷமாய் இருந்தான். அன்று மாலை உடம்பு களைத்துப் போகும்வரை பயிற்சிகள் செய்தான், தூங்கிப் போனான்.

எம்மியைத் தேடி மறுநாள் போனான். கிடைக்கவில்லை. மறுநாளுக்கு மறுநாளும் போனான். கிடைக்கவில்லை. செமி ஃபைனல்ஸில் எட்டுப்பேர் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அண்ணாவி ஏழாவது. அதிகம் அலட்டிக் கொள்ளாமல் ஏழடி ஐந்தங்குலம் தாண்டினான். மறுநாள் எம்மி எதிர்ப்பட்டாள். நீச்சல் குளத்தருகே ஒரு அமெரிக்கனோடு நெருங்கி உட்கார்ந்திருந்தாள்.

"ஹலோ எம்மி."

"யெஸ்?"

"நான் அண்ணாவி, இந்தியன். நாலு நாட்கள் முன்பு பார்த்தோமே."

"யெஸ்."

அடுத்துஇருந்த அமெரிக்கன் அசையாது உட்கார்ந்திருந்தான்.

"ஞாபகம் இல்லையா எம்மி, நான் கூட சின்ன சிலை ஒன்று கொடுத்தேன்."

"ஆமாம். என்ன அதற்கு?"

அண்ணாவிக்குப் புரியவில்லை.

"ரொம்ப பிஸியாய் இருக்கிறாயா எம்மி?"

"இல்லை"

"பழரசம் அருந்தலாமா?"

"நோ, நான் வருவதற்கில்லை."

"ஏன்?"

"முட்டாள் இந்தியனே. நான் அப்போது ட்யூட்டியில் இருந்தேன். உன்னோடு உனக்கு உதவியாக வந்தேன். பழரசம் அருந்தினேன். இப்போது ட்யூட்டியில் இல்லை. அதனால் வருவதற்கில்லை. போ உன் வேலையைப் பார். தொந்தரவு செய்யாதே.

அண்ணாவி இடிந்து போனான். மெல்ல தளர்ந்து நடந்தான். பின்னால் அமெரிக்கச் சிரிப்பு கேட்டது. திரும்பிப் பார்க்க வெட்கமாக இருந்ததுதான். இப்போது பேசியது தவறோ... அவளுக்கு அருகே இருந்த அமெரிக்கனுக்காக இப்படிப் பேசினாளோ."

நீச்சல் குள வாசலில் டவல்கள், ஜட்டிகள் விற்கிற கடை இருந்தது. வெறுமே வேடிக்கை பார்க்க, யாரோ ஒரு பெண் கடையிலிருந்து வெளிவந்தாள். "யெஸ், என்ன வேண்டும் இந்தியனே வாருங்கள் உள்ளே" சிரித்தபடி கைப்பற்றினாள்.

டக்கென்று அண்ணாவி மூளைக்குள் மின்னலடித்தது.

அமெரிக்கர்கள் வியாபாரிகள் சகல நேரத்திலும் எல்லா இடத்திலும் வியாபாரிகள். வியாபாரத்தில் அன்பு செலுத்துவார்கள். எனவே வாங்குபவர் மீது அன்பு காட்டுகிறார்கள். அன்பையும் நட்பையும்கூட வியாபாரத்துக்கு முதலாக்குகிறார்கள். வியாபாரம் முடிந்து போனால் நட்பும் முடிந்து போய்விடுகிறது.

எம்மியும் வியாபாரியே. விருந்தினரை வரவேற்று சந்தோஷப்படுத்துவது அவளுக்கு ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை. வேலைக்கு சம்பளம். வேலை முடிந்து போயிற்று. நட்பும் முடிந்து போயிற்று.

அண்ணாவி குடும்பம் பற்றி விசாரித்தது, சரிகை மூக்குத்தி அணிந்து கொண்டது... பொட்டு வைத்துக் கொண்டது எல்லாம் வியாபார நிமித்தம்.

சை... க்ஷண நேரத்தில் அண்ணாவியிடமிருந்த அமெரிக்க ஆச்சரியம் உதிர்ந்து போயிற்று.

அட... மூட ஜனங்களே... என்று கூச்சல் வந்தது.



அண்ணாவி அன்று அமைதியாய் பரபரப்பில்லாமல் அதிக நேரம் உடற்பயிற்சி செய்தான்.

உண்மை என்பதை அமெரிக்கர்களும்ஐரோப்பியர்களும் பல பகுதிகளாய் பிரித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேலையில் ஒரு உண்மை. வெளியே ஒரு உண்மை. வீட்டில் ஒரு உண்மை. உள்ளுக்குள் ஒரு உண்மை என்று சதுரமாய் வாழ்கிறார்கள்.

உண்மை வேர் போன்றது. பல திக்கில் பல கிளைகளாய் பரவி அனுபவம் உறிஞ்சுவது. உறிஞ்சிய அனுபவம் மையத்திற்குக் கொண்டு வரப்பட்டு, புத்தி என்கிற சூரிய ஒளிபட, ஞானம் பூவாய் மலர்கிறது.

ஒரு அமெரிக்கன் மலர்வதில்லை. இந்தியனின் மலர்ச்சி அவனுக்குப் புரிவதுமில்லை. ஒரு அமெரிக்கன் மீன் கொத்தி மாதிரி. தனியே திரிந்து, தனியே வேட்டையாடி, தானே உண்கிறான். அவனுக்கு உறவும் நட்பும் வசதிகள் பொருட்டே.

அண்ணாவிக்கு அமெரிக்கர்களைப் பார்க்கையில் பாவமாக இருந்தது.

## 7

ஹைஜம்பில் செமி ஃபைனல்ஸில் முதலில் தேறியவன் அமெரிக்கன். அடுத்ததும் ஒரு அமெரிக்கன். பிறகு ஒரு சைனா ஆள், பிறகு ஒரு ஜப்பானியன். பிறகு ஒரு கொரியன் அடுத்து ஒரு ஆஸ்திரேலியன். பிறகு அண்ணாவி, பிறகு ஒரு பிரிட்டீஷ் ஆள்.

இறுதிப் போட்டியில் ஆரம்பமே ஏழடி ஐந்தங்குலம் வைப்பார்கள் என்று கேள்விப்பட்டான். இரவு களத்துக்கு போய் நாலு முறை சுலபமாய் தாண்டினான். ஏழு ஏழு வைத்துப் பார்த்தான். இரண்டு முறை தடுக்கிற்று. மூன்றாம் முறை தாண்ட முடிந்தது.

மறுநாள் பிற்பகலில் இறுதிப் போட்டி நேர எக்ஸர்ஸைஸ் பத்து மணிக்கு சாப்பாடு. ஒரு மணிக்கு டாய்லெட் போய்விட்டுவா, பிறகு வெறும் ஜூஸ்தான்.

வயிறு காலியாய் வைத்திரு. கோச் உத்தரவிட்டார். செமி ஃபைனல்ஸ் தாண்டியதே பெரிய விந்தை என்றார். ஹிண்டு இண்டியன் எக்ஸ்பிரஸ் இரண்டும் வாழ்த்துச் சொல்லி தந்தியடித்திருந்தன. அப்பாவின் தந்தி ஃபைனல்ஸ் அன்று வந்தது. காலேஜ் மாணவர்கள் அசோஸியேஷன் தந்தி கொடுத்திருந்தது. பி.டி. உஷாவுக்கு நிறைய தந்திகள் குவிந்திருந்தன. கேரள அரசும் வாழ்த்து சொல்லியிருந்தது.

கோச் நம்பியாருடன் உஷா வந்து அண்ணாவி யார் என்று விசாரித்து பார்த்துவிட்டுப் போனாள். தமிழோ என்றாள். அண்ணாவி தமிழில் பேச உஷா மலையாளத்தில் பேசினாள். புரிந்தது. கைகுலுக்கி விட்டுப் போனாள்.

பிற்பகலில் டாய்லட் போன பிறகு வயிறு சுர்ரென்று பசியில் குரல் கொடுத்தது. பிஸ்கட் கூட தின்னக் கூடாது என்று கோச் சொல்லிவிட்டார். கிருஷ்ண மூர்த்தி இரண்டு தம்ளர் ஆரஞ்சு ரஸம் கொண்டு வந்து கொடுக்க வயிற்றின் கூச்சல் கொஞ்சம் அடங்கியது. ''மறுபடி பசிச்சா சொல்லு, தனியா உனக்கு ஆரஞ்சு கொண்டு வரேன்.'' ஐயர் மைதானத்துக்கும் பாஸ் காட்டி வந்து விட்டார். அவன் கிட்டைத் தூக்கிக் கொண்டு பின்னாலேயே வந்தார். மூன்று மணிக்கு இறுதிப் போட்டிக்கு அறிவிப்பு வந்தது. டாக்டர்கள் சோதனைக்கு அழைத்தார்கள். பொட்டுரத்தம், உமிழ் நீர், எடுத்தார்கள். யூரின் சோதனை செய்தார்கள். நாடித் துடிப்பு பார்த்தார்கள்.

எட்டு பேரையும் பத்து நிமிட சோதனைக்குப் பின் வெளியே விட்டார்கள்.

ஏழடி ஐந்தங்குலம் முதல் உயரம் அமெரிக்கர்கள் பாஸ் என்று சொன்ன சைனா ஆளும், கொரியனும் இவனும் தாண்டினார்கள். மற்றவரும் பாஸ் என்றார்கள்.

ஏழு அடி ஏழங்குலம் அமெரிக்கன் பாஸ் சொல்ல கொரியனும் இவனும் தாண்டினார்கள்.

ஏழு அடி ஏழங்குலம், அமெரிக்கன் சுலபமாய் தாண்டினான். மறு அமெரிக்கன் சரிந்தான். சைனா



ஆள் தாண்டி கால் பிசகி நொண்டினான். ஜப்பானியன் சரிந்தான். கொரியன் முதல் தாண்டலில் பாஸ் செய்தான். ஆஸ்திரேலியன் தாண்டினான். பிரிட்டிஷ் ஆள் மூன்று தடவையும் கம்பை உதைத்தான். அண்ணாவி இரண்டாவது ஜம்பில் தாண்டினான்.

ஏழு அடி எட்டங்குலம். அமெரிக்கனுக்குக் கம்பு ஆடிற்று. கொரியன் இரண்டாவது ஜம்பில் தாண்டினான். அண்ணாவி சால் தாண்டி உயரத் தூக்க முதல் ஜம்பில் பாஸ்.

காமிரா அண்ணாவியை முத்தமிட்டது. முக்கியமாயிற்று. ஆனால் அவனை விட அமெரிக்காவைத்தான் கூட்டம் நம்பிற்று.

ஏழு அடி எட்டே முக்கால் அங்குலம். அதாவது 2.36 மீட்டர் உயரம். 1980 இல் ஜெர்மானியன் தாண்டிய உயரம், அளவை வைத்து விட்ட பிறகு நடுவர் கூட்டம் டீ பிரேக் என்று சொல்லி விட்டது. அரைமணி இடைவேளை. கூடார நிழலில் அண்ணாவி படுத்துக் கிடந்தான். இந்திய டாக்டரும் கோச்சும் கால்களைப் பிடித்து விட்டு வெந்நீரில் நனைத்து துண்டால் துடைத்தார்கள். பனியனும் ஜட்டியும் மாற்றச் சொன்னார்கள். புதிய லங்கோடு கட்டிக் கொள்கையில் போலீஸ்காரர் நினைவு வந்தது. இப்போது இந்திய நேரப்படி இரவு. பின்னிரவு. அந்த போலீஸ்காரர் எங்கே நின்று கொண்டிருக்கிறாரோ...அம்மா தூங்கிக் கொண்டிருப்பாள். வாசல் விளக்கு தவிர என் வீடு இருளில் மூழ்கிக் கிடக்கும். இன்னும் அரைமணி, ஒரு மணியில் காக்கைகள் என் ஊரில் கரையத் துவங்கும். இங்கு காக்கைகள் காணோம். பெரிய நீர்ப் பறவைகள் அடிக்கடி தென்படுகின்றன. ஸீகல் பறவைகளாய் இருக்கலாம்.

அண்ணாவி புதுசு உடுத்தி மறுபடி படுத்துக்கொண்டான். கண்மூடத் துவங்கினான். கண் இழுக்கும் வேளையில் எழுப்பி விட்டார்கள். முகம் துடைத்தார்

கள். மைதானத்துக்கு பொலிகாளை மாதிரி அழைத்துப் போனார்கள்.

அடுத்த கூடாரம் கொரியனுடையது. ஒரே பெண்கள் கூச்சலாய் இருந்தது. அவனைத் துடைத்து உடுப்பு மாற்றியது எல்லாம் பெண்கள். கூடாரத்து வாசலில் கொரியனையும் இவனையும் ஒரு அமெரிக்க இந்தியர் அருகருகே நிற்க வைத்து படம் எடுத்தார். கிளிக் சப்தம் கேட்டதும் காமிரா ஃபிலிம் மாதிரி உமிழ்ந்தது. வெய்யில் பட பிலிம் போட்டோவாயிற்று.

அமெரிக்க இந்தியர் கொடுத்த போட்டோவைக் கொரியனிடம் காண்பித்து கையெழுத்து கேட்டான். அண்ணாவி நீங்கள் தாண்டும் விதம் பிடித்திருக்கிறது என்று பணிவாய் சொன்னான். கொரியன் கையெழுத்துப் போடுவது அங்குள்ள பெண்களுக்குப் பெருமையாக இருந்தது. 1984 ஆம் வருடத்து கோல்ட் மெடலிஸ்ட் என்று எழுதி கொரியன் கையெழுத்துப் போட... பெண்கள் கூட்டம் சிரித்தது.

என்ன நம்பிக்கை...

கொரியனை ஒட்டிக்கொண்டு ஒரு பெண் போனாள். நிறைய பேசினாள். மூக்கு, கண், மார்பு, பிருஷ்டம் எல்லாம் அவளுக்குச் சிறிதாய் இருந்தன. குரல் மட்டும் வலியன் கீச்சாய் இருந்தது.

அண்ணாவி முன்னேறியபோது கோச் மட்டும் கூட வந்தார்.

ஏழு அடி எட்டேமுக்கால் அங்குலம் 2.36 மீட்டர்கள் இது கடினம் என்று பேசிக்கொண்டார்கள் நடுவர்கள் குழு போட்டி ஆரம்பித்தது. அமெரிக்கன் முதல் நம்பர், கொரியன் இரண்டாவது அண்ணாவி மூன்றாவது. ஆஸ்திரேலியன் நான்காவது பாஸ் என்று குரல் கொடுக்க முடியாது, சகலரும் தாண்ட வேண்டும்.

அமெரிக்கன் முதல் ஜம்ப், இடிபட்டான். கொரியன் முதல் ஜம்ப் இடிபட்டான். அண்ணாவிக்கு ஆடுகால் நக்கென்று இழுத்தது. ஆஸ்திரேலியன் ஏழு நாலு கூட தாண்டி இருக்க மாட்டான், முதுகு இடித்து கம்பி விழுந்தது.



மறுபடி செகண்ட் ஜம்ப் அமெரிக்கன் மறுபடி இடிபட கொரியன் இடிபட, அண்ணாவி மோசமாய் முட்டிக்கொள்ள, ஆஸ்திரேலியன் கால்கூட தூக்காமல் பொதியில் விழ மூன்றாவது ஜம்ப் ஆரம்பமானது.

அமெரிக்கன் பேயாய் ஓடிவந்து தாண்ட கம்பி ஆடிற்று. நாலு விநாடி கழித்து தரையில் விழுந்தது. அமெரிக்கன் அவுட்... ஓவ்... கூட்டம் சோகத்தில் பிளிறியது.

கொரியன் தயாரானான், அந்தப் பெண் நெஞ்சில் கைவைத்துக் காத்திருந்தாள். ஓடிவந்து தாண்ட வலக்கால் இடித்தது. அவுட் கொரியன் ஸ்பான்ஞ் பொதியிலிருந்து வெளிப்பட்டுத் தளர்வோடு போனான். கொரியன் தாண்டியவிதம் பார்த்தால் அண்ணாவிக்கு வெள்ளிப் பதக்கம் உறுதி. ஆனால் கம்ப்யூட்டர் தான் சொல்லும். அண்ணாவி கால்களைத் தேய்த்துக் கொண்டான். கோவிந்தா என்று மனசுக்குள் கூவினான். கண்கள் மூட உள்ளே பிள்ளையார் வந்தார். யம்பா... பலம் கொடு இரைச்சல் எழுந்தது. அந்த ஸ்டெப், கடைசி ஸ்டெப் கிடைத்துவிட்டால் தாண்டிவிடலாம். ஜப்பானிய நடுவர் அருகே வந்தார். தயாரா என்றார். அண்ணாவி மௌனமாய் கம்பையே பார்த்துக் கொண்டிருந்தான். இந்தியா முழுக்க இவன் செய்கையைப் பார்த்துக் கொண்டிருக்கும். இரவாயினும் விழித்துக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கும் அம்மா பார்த்துக் கொண்டிருப்பாள். முதல்வர். பிரதமர் இன்னும் பெரிய பெரிய ஆட்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அண்ணாவி முன்னே நகர்ந்தான். நின்றுபின்னுக்கு வந்தான். ஜப்பானிய நடுவர் மறுபடி "தயாரா" என்றார். அண்ணாவி தலையசைக்க மஞ்சள் கொடி உயர்ந்தது. அண்ணாவி தாண்டலாம்.

'பிள்ளையாரப்பா' அண்ணாவி கண்களை மூடினான் கைகூப்பினான். மெல்லிய அடிகள் வைத்துப் புறப்பட்டான், அந்த தப்படி. கடைசி தப்படி கிடைத்துவிட்டால்... பிள்ளையாரப்பா...

வேகம் கூடிற்று.

தசைகள் இறுகி புஜங்கள் உறுதியாகி முதுகுத்
தண்டு வலுவேற்றிக் கொள்ள யேய்... வேகம் கூடிற்று.
கடைசி தப்படி நினைத்த இடத்தில் நினைத்த
வேகத்தில் கிடைக்க ஹோய்... உடல் முழுவதும் விசிறி
இது தன்னுடையது இல்லை என்று வெளியில் போக,
தலை தாண்ட, முதுகு தாண்ட, பிருஷ்டமும் தாண்ட,
தொடை தாண்ட, வலக்கால் ஆடுதசையில் கம்பு சின்ன
முத்தம் கொடுக்க, இன்னும் கால்களை அண்ணாவி
பயத்தில் உயரத் தூக்க, கம்பு கடந்து தலைக் குப்புற
பொதி நோக்கிப் போக கைகள் அனிச்சையாய்
பொதிக்குள் நின்றது. தாண்டி விட்டோமா... ஒரு
க்ஷணம் உடம்பு முழுவதும் பொதிக்குள் அமிழ்ந்து
இருளில் மூழ்கி எழுந்து கை ஊன்றி முழங்கால்
போட்டபடி கம்பி பார்க்க...

அலுமினியக் கம்பி மெல்ல ஆடிக்கொண்டிருந்தது.
ஆடி நின்று விட்டது. கூட்டம் சட்டென்று அமைதி
யானது, சரியென்றால்தான் கம்ப்யூட்டர் பாஸ் என்று
பச்சை காட்டும். இல்லையெனில் சிகப்பு சிரித்துவிட்டுப்
போகும். பிறகு மார்க் போடும்.

கொரியன் முகத்தில் அறைந்து கொண்டு அழு
தான். கம்ப்யூட்டர் பலகை அண்ணாவிக்கு முதுகு
காட்டியிருந்தது மெல்லத் திரும்பிற்று. திரும்பும்
போதே பச்சை. எரிந்தது அண்ணாவி தாண்டி விட்
டான். அண்ணாவிக்குத் தங்கப் பதக்கம். ஓஹோ என்று
கூட்டம் கூச்சல் போட்டது.

அண்ணாவி ஸ்பாஞ்ச் பஞ்சுப் பொதியை ஓங்கி
யடித்தான். கொத்தாய் பற்றினான். கடவுளே...
கடவுளே மண்டியிட்டு மறுபடி வானம் நோக்கி
கை கூப்பினான்.

கொரியன் அழுகையை அந்தப் பெண் சமாதானப்
படுத்திக் கொண்டிருந்தாள்.

டாலி ஆப்ரஹம்தான் முதலில் ஓடி வந்தாள். கை
களைப் பற்றிக்கொண்டாள். எங்கோ ஒரு எதிர் மூலை
யில் இந்தியக் கொடி வீசி வீசி ஆடிக் கொண்டிருந்தது.
கொடியாடிய திசை நோக்கி அண்ணாவி கையசைத்
தான். கும்பிட்டான். கொடி மேலும் உற்சாகமாய் வீசப்



பட்டது. மறுபடி கும்பிடச் சொல்லி டிவி ஆள் கேட்க,
டிவியை நோக்கி அண்ணாவி கும்பிட்டான். எழுபது
கோடி பாரத மக்களை டிவி மூலமாய் வணங்கினான்.
பொதியை விட்டுக் கீழே இறங்கினான்.

கிருஷ்ணமூர்த்தி ஐயர், சத்துராம் ஹெக்டே.
டாக்டர் பல்பேந்தர் சிங் எல்லோரும் ஓடி வந்தார்கள்
கை குலுக்கினார்கள். டாலி ஆனந்தமேலிட்டால்
அவனைத் தழுவிக் கொண்டாள்.

கொரியன் எழுந்திருக்கவில்லை. அவனைச் சுற்றிக்
கூட்டமிருந்தது. ஆஸ்திரேலியன் தாண்ட விலக
வேண்டியிருந்தது. ஆஸ்திரேலியன் நடுங்கி விட்டான்
போலும். கம்பி எகிறி விழுந்தது. டாலி மறுபடி தழுவிக்
கொண்டாள்.

அண்ணாவிக்குத் தங்கப் பதக்கம் என்று கம்ப்யூட்டர்
சொல்லியது.

அவன் பின்னாலேயே டிவிகேமிரா நடந்து வந்தது.
கூடாரத்தில் இந்தியர்கள் கைகூப்பிப் பிரார்த்தனை
செய்ததை பதிவு செய்தது. அண்ணாவி பழரசம் குடிப்
பதை நெருக்கமாய் படம் பிடித்தது. துடைத்துக்கொள்
வதைக் காட்டிற்று. அண்ணாவி அமைதியாய் கட்டிலில்
பத்மாசனம் இட்டு உட்கார்ந்தான். மூச்சு இழுத்து
விட்டான். எதிர்பக்க போர்டில் கண்மூடி உட்கார்ந்
திருக்கும் அண்ணாவி ஒளிபரப்பப்பட்டான்.

தோல்வியில் துவண்டு விட்ட கொரியனை அடுத்த
கூடாரத்துக்குத் தூக்கி வந்தார்கள். தனியே உட்கார
வைத்தார்கள். கூச்சலின்றி இருந்தார்கள். அந்தப்
பெண் அவன் தலையை கோதி மார்போடு அணைத்
துக் கொண்டாள். இன்னமும் அவன் அழுதபடிதான்
இருந்தான். அவன் சின்ன மார்பில் முகம் புதைத்து
விம்மினான்.

ஹைஜம்ப் ரிஸல்ட்ஸ் இந்தியா தங்கம்.

அமெரிக்கா வெள்ளி கொரியா வெண்கலம். பெரிய
போர்ட் மறுபடி பேசிற்று.

இந்த சந்தோஷத்தின் போதே பி.டி. உஷா மயிரிழையில் வெண்கலம் தவற விட்டது தெரிந்தது.

இந்தியக் கூடாரம் அமைதியாய் இருந்தது. அந்தக் கொரியன் இன்னும் அவள் மார்பில்தான் சரிந்திருந்தான்.

அவள் யார் என்று தெரியவில்லை. அவனுக்கு இவள் காதலியா...மனைவியா ,வெறும் நட்பா தெரியவில்லை.

அவள் அழகாக இருந்தாள். முகத்தில் ஒரு இதம் தெரிந்தது.பரபரவென்று வீட்டு வேலை செய்யும் நல்ல பொறுப்பான பெண் மாதிரிப் பட்டது.

'அடேய் அடேய்...தங்கப் பதக்கமே உன்னை மார்பில் தரித்துக் கொண்டிருக்கிறது. அழுகை எதற்கு? விடு. எழுந்து போ' அண்ணாவி உள்ளே கூவினான்.

பதக்கம் அணிவிப்பு நடந்தபோது அமைதியாய் ஏற்றுக் கொண்டான். அமெரிக்கன் முன்வந்து கை குலுக்க பதிலுக்கு அண்ணாவி வாழ்த்துச் சொன்னான். அமெரிக்கன் முகத்தில் கவலை ரேகை துளிகூட இல்லை. கொரியன் களைத்துப் போயிருந்தான். கைகுலுக்க முற்பட்டபோது லேசாய் விரல் தொட்டு விட்டு இறங்கி விட்டான். அமெரிக்க இந்தியர் மறுபடி ஓடி வந்தார். பல கோணங்களில் பல நபருடன் போட்டோ பிடித்தார். இந்தியாவின் பல வார மாத ஆங்கில இந்தியப் பத்திரிகைகளுக்கு அவர் அமெரிக்க நிருபராம். கை நிறைய போட்டோக்கள் கொடுத்து விட்டுப் போனார், விலாசம் கொடுத்தார்.

காம்புக்கு நிறைய இந்தியர்கள் ஓடி வந்தார்கள். யாரோ புதிய டேப் ரெக்கார்டர் கொடுத்தார்கள். பரிசுகள் குவிந்தன. பெட்டி பிதுங்கிற்று.

கடைசி நாள் பரேடில் இந்தியர்கள் பங்கரா டான்ஸ் ஆடிக் கொண்டு வந்தார்கள். அண்ணாவியைத் தோளில் தூக்கியபடி ஒரு சர்தார்ஜீ நடந்து வந்தான்.

---

ஜோதி அணைய, வானில் வெடிச் சத்தத்துடன் வண்ணப்பூக்கள் விரிந்தன டாலியும் அவனும், கிருஷ்ணமூர்த்தி ஐயரும், ராஜகோபாலும் அருகருகே



உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.காம்ப் திரும்பி அறைக்குள் உள்ள பொருட்களையெல்லாம் அவரவர் எடுத்துக்கொள்ள ஹாங்கர், டர்க்கி டவல், தலையணை உறை, டம்ளர் என்று உருவிக்கொள்ள, அண்ணாவி அமைதியாய் இருந்தான்.

அவனுக்கும் முதன் முதலாய் இந்த அறைக்குள்ளே நுழைந்ததும் எல்லாவற்றையும் தள்ளிக் கொண்டு போகும் எண்ணம் இருந்தது.

இப்போது இல்லை.

அண்ணாவி தங்கப்பதக்கத்தை முத்தமிட்டான்.

களைப்போடு படுக்கையில் சாய்ந்தான். எட்டு வருடப் பயிற்சி. எத்தனையோ பேர் உதவி. அண்ணாவிக்குத் தூக்கம் வந்தது. தங்கப்பதக்கத்தை கழுத்தில் போட்டிருந்தபடியே அண்ணாவி தூங்கிப் போனான்.

## 8

அவன் மூன்று சக்கர சைக்கிளில் உட்கார்ந்தபடி கைப்பிடி சக்கரத்தைச் சுற்றினான். வண்டி முன்னே நிற்று.

பச்சை நிற பெரிய கதவுகளுக்கு அருகே நெருங்கி மணியடித்தான். காவல்காரன் எட்டிப் பார்த்து கதவு திறந்து சிரித்தபடி அவனுக்கு வந்தனம் சொல்ல நாற்காலியில் அமர்ந்தவனும் வணக்கம் சொன்னான்.

''இருக்காரா...'' காவலாளியைக் கடந்தபடி கேட்க...

''இருக்காருங்க...'' காவல்காரன் பதில் கொடுத்தான்.

அந்தக் கட்டிடத்தின் படிகள் மூன்று சக்கர சைக்கிளை முட்டி நின்றது. அவன் இறங்கித் தவழ்ந்து மேலேறினான். யாரோ வாசலில் அவனை வரவேற்றார்கள்.

''வண்டில ஒரு ஃபைல் இருக்கு எடுத்துட்டு வர்றீங்களா, ப்ளீஸ்.''

''வரேங்க. நீங்க உள்ளே போங்க. அவரு காத்துக் கிட்டிருக்காரு.''

எதிர் கொண்டவன் வண்டிக்கு விரைந்து போய் ஃபைலை எடுத்துக் கொண்டு திரும்புகையில் அரை நிக்கர் தரையில் உரச சட்டை தொங்கத் தவழ்ந்து போகிறவனை வேதனையுடன் பார்த்தான். கால்கள் சூம்பியிருந்தன. இடுப்புப்பக்கம் வலுவற்று நெளிந்து நெளிந்து அசைந்தது.

'ஆசிரியர் என்று எழுதப்பட்டிருந்த அறைக்குப் போனான். மேலும் கீழும் இடைவெளிவிட்ட தடுப்புக் கதவுகளுக்கு அடியே நுழைந்து போனான்.

உள்ளே எழுதிக் கொண்டிருந்தவர் ஒரு கணம் திடுக்கிட்டார். 'இவனா' என்பது போல் புன்னகை செய்தார்.

''வாய்யா, தாமோதரன், சௌக்கியமா?''

''சௌக்கியம் சார்.''

''என்ன கொண்டாந்திருக்கேப்பா?''

''புதுசா விஷயம் சார்.''

''என்ன விஷயம் சொல்லு, முதல்ல உக்காரு. நான் வரட்டுமா?''

''வேணாம்.'' நாற்காலி பிடிகளில் கைகளை ஊன்றி எழுந்து நின்று கைபலத்திலேயே இடைப்பட்ட இடம் தாண்டி உட்கார்ந்து கொண்டான். விலை உயர்ந்த கைகெடிகாரத்தை சரி செய்தான்.

''என்ன சேதி... என்ன புது விஷயம். நாவல் தானே?''

''இல்லை சார் கதையும் இல்லாம, கட்டுரையும் இல்லாம, இரண்டும் கெட்டானா ஒரு விஷயம் எழுதி னேன். கதைதான். கட்டுரை வடிவமாகக் கதை இருக்கும்.''

''புரியலையேப்பா?''

''படிச்சுப் பாருங்க. பிடிச்சா போடுங்க.''

''எதுபத்தி?''

''ஒலிம்பிக் பத்தி.''



''டிவில பாத்தியா?''

''வேற வேலை எனக்கு? வேறபொழுது போக்கு? அசையாத உக்காந்து ராப்பகலாப் பார்த்தேன்...''

''சரி, விஷயம் என்ன... ஒலிம்பிக்பத்தி கதை என்ன எழுத முடியும்.''

''நம்ம இந்தியாவுக்கு ஒரு தங்கப் பதக்கம் கிடைக் கிறது. அதுவும் ஹைஜம்ப்ல.''

''ஏ அப்பா... நமக்குத் தங்கப்பதக்கம்... அதுவும் ஒலிம்பிக்ல போய்யா.''

''ஏன் சார்?''

''தகரப்பதக்கம் வச்சாக்கூட வாங்கமாட்டா ளுங்க.''

''வாங்கிட்டா எப்படி இருக்கும்னு யோசனை பண்ணினேன் சார்.''

''எப்படி வாங்க முடியும்? என்ன வசதி நமக்கு?''

''வசதி குறைவுகள் என்னென்னு யோசனை பண்ணினேன். அது இல்லாத ஒரு பையனைக் கற்பனை பண்ணினேன்.''

''என்னவோ அண்ணாவின்னு ஆரம்பிச்சிருக்கே, அந்த திருச்சி பையனைப் பத்தியா?''

''இல்லை சார் அந்தப் பேர் எனக்குப் பிடிச் சிருந்தது. அண்ணாவின்னா கம்பீரமானவன்னு ஒரு அர்த்தம் தோணிச்சு. மெடலோட வருவான்னு ஆசைப் பட்டேன். என்னமோ ஆகலை. ஏன் ஆகலைன்னு தெரியலை. அவனைப் பார்த்துப் பேசிட்டு வர எனக்கு முடியலை. முடியாது. இந்தக் காலை வச்சுக்கிட்டு அலைய முடியாது. அதனால் நானே அண்ணாவின்னு ஒரு பையனைக் கற்பனை பண்ணி, அவன் ஹைஜம்ப்ல கோல்ட் மெடல் வாங்கறதா...''

''சரி, பேரு அண்ணாவி. நிஜத்துல யாரை நினைச் சிக்கிட்டே, ஹைஜம்ப் பத்தி எங்கே தெரிஞ்சுகிட்டே?''

''படிச்சேன். நிறைய கற்பனை பண்ணினேன்.''

''யாரை வச்சு.''

“என்னை வச்சு. நான் அண்ணாவியா இருந்தா அந்தத் தங்கப் பதக்கம் கிடைக்க எப்படி போராடுவேன்னு பண்ணினேன்...”

“நீ... பேஷ். ஆனா ஒன்று தாமோதரன்.”

“என்ன சார்?”

“வெளியே சொல்லாத, உன்னைப் பத்தி நிறைய பேருக்குத் தெரியும் நீ எழுதறதும் தெரியும். உன் உடம்பு பத்தியும் தெரியும்.”

“அதனால என்ன சார்?”

“நீ போய் ஹைஜம்ப்ல தங்கப் பதக்கம் கிடைக்கறதா கற்பனை பண்ணினா கேலி பண்ணுவான். அதுக்கு சொன்னேன். பின்னாலே சிரிப்பான். அது வேண்டாமேன்னு சொல்றேன்!”

“எதுனால சிரிக்கணும் சார்.”

“உனக்குக் கால் இருக்கா சார்? இந்த தேசத்துல யாருக்காவது கால் இருக்கா சார். முதுகெலும்பு இருக்கா சார். எழுபது கோடி ஜனங்கள். இதுல யாருக்காவது நெஞ்சுரம் இருக்கா சார், ரோஷமானம் ...சூடு சொரணை இருக்கா சார்? தீவு மாதிரி இருக்கிற சின்ன தேசமெல்லாம் தங்க மெடல் வாங்கி இருக்காங்க பாரததேசம் பழம் பெரும் பூமி. வெறுமனே திரும்பியிருக்காங்க சார். வயிறு எரியுது. எரிஞ்சு எரிஞ்சு நெஞ்செல்லாம் சாம்பலாவுது. எவனுக்கு சிரிக்க இங்க வக்கு இருக்கு. நான் நொண்டி, முடவன், எனக்கு இருக்கிற ஆத்திரம்கூட இங்க எவனுக்கும் இல்லையே சார்.”

“தாமோதரா, கோச்சுக்காதே. வருத்தப்பட்டுவியே கேலி பண்ணுவாங்களேன்னு சொன்னேன். தப்பா நினைச்சுக்காதே. நாவலுக்கு என்ன தலைப்பு?”

“கொம்புத்தேன்.”

“என்ன?”

“கொம்புத்தேன்.”

□ □ □